சுதேசமித்திரன்

விலை 4 அணா

9-1-49

இயற்கையான வாஞ்சையுடன்

அடைய விரும்புதல்

குழந்தைக்கு

ஆரோக்கியத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியலின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்



WOODWARD'S
GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

ப்ராங்கைடிஸ்

இரவு இருமல்

மற்றும் இதர மார்பு & சுவாசப்பை தகராறுகளுக்கு

பெப்ஸ் சிறந்தது





பெப்ஸ் மருந்து சத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புக்கும் போவதைக் குறிக்கும் படம்

ஒரு நல்ல ருசியுள்ள பெப்ஸ் வில்லையை உட்கொள்ளுங்கள். அது கரைந்தவுடன் சுவாசத்துடன் அதன் மருந்து சத்துக்கள் சுவாசப்பைக்குள் சென்று, சீக்கிர நிவாரணை யளிக்கும். பெப்ஸ் இருமலை நிறுத்தி, புண்ணாகிய உறுப்புகளுக்குச் சமனமூட்டி, குணமாக்கி சளியைத் தளரச்செய்து அடைப்பை நீக்கும்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி, பி. டி. மதராஸ்

PEPS

கிருமி நாச

தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு, சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பயனளிக்கவல்ல நிவாரணி.

பாக்யங்களுள்

சிறந்ததும், பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி கேசவர்த்தினியை கொண்டு பெறுங்கள்.

மூக்கையும், மோவாய்க் கட்டையையும் மாற்றமுடியாது. ஆனால், கூந்தலையோ வித விதமாயும், விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலை ஜோடிக்கு முன்னர் கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலைப்பெறுங்கள். கறுத்து அடர்ந்த கூந்தலினால் முக அழகையும், கேசவர்த்தினியினால் கூந்தலையும் அழகு படுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக் காப்பது; விருத்தி செய்வது; அழகுபடுத்துவது விலை அணா 14. தபால் செலவு தனி. எல்லா கடைகளிலும் கிடைக்கும்

தயாரிப்பவர்;

தென் இந்திய ரஸாயன சாலை.

"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட், பவர் ஹவுஸிற்கு அடுத்தது கோயமுத்தூர்.

ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:-1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ.5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு: வெளிநாடுக்கு இரட்டிப்புகட்டணம்

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:- தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்கு திடீரென்று ரூ.35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ, தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

ஜோதிஷ வித்வான்

V. S. சேஷாத்ரியாச்சாரியார்

45, பரோடா தெரு, தியாகராய நகர், சென்னை 17.

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க........................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு......ரூ 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு..............................அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க......................................ரூ 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

எல்லோரும் எங்கள்
பி. எஸ். வஸ்துக்களை
உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும்
ஆரோக்கியமானது

P.S.

பெருங்காயம் - பாதம் எண்ணெய் - அம்லா ஹேர் ஆயில் - வாசனை தேங்காய் எண்ணெய் - கஸ்தூரிகுங்குமப்பூ - கோரோஜனம் - ஊறுகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து - பஞ்சாப்தேன் - முத்து பன்னீர் - ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் - இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.

மறுக்க முடியாத உண்மை !

நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே !!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115. நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ். போன் நெ. 3432.	9. ஜடாமுனி கோவில் தெரு. மதுரை.

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை, தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S. மாணிக்கம்செட்டி கோ.,
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1

ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு
ஏஜண்டுகள் தேவை

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்
மாணிக்கபஸ்பம் சிவபுரிபுகையிலை
மீனம்பாளயம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை.

வெளிவந்துவிட்டது!
வாசனை பாக்குத்தூள்
காலணுவுக்கு இரண்டு.

சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை

தயாரிப்பவர்:
மாணிக்க விலாஸ்
11 பிட், மதராஸ். 1.

தேவாம்ருதம்
"பீம-வீர்"
சாஸ்வத சக்தியை
கொடுக்கும்



दवामृतम
'भीम-वीर'
शाश्वत शक्ति
देनेवाला है

RESTORES MAN HOOD
Nectar of Life
MAKES MEN YOUNG

"BHEEMA—VEER"

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்தி செய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வீரிய சக்தியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற ஔஷதம்.

40-நாள் மருந்து ரூ. 3—12—0. பாக்கிங், தபால் சார்ஜ் கிடையாது.

ஜமதக்னி ஔஷதாலயா, 31-சி, வடக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை 4.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆட்டோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jumma Musjid, P. O. Box 2085, Bombay 2.

Estd: 1920

சேலம் மூன்றுதாமரை

பீடிகளை உபயோகித்து.. சந்தோஷமடையுங்கள்

S.A.H

Rgd. No. 2221.

Prop: S. அஹமத் உசேன்,
கோட்டை, சேலம். S.I.R.

சக்தி ஆரூடம்!

நீலகிரி பாரஸ்டு இலாகா மானேஜர் (Retd.) Sri. சாயிராம் T. V. N. சாமி 30-11-48ல் எழுதுகிறார்:—"தங்கள் ஜோதிடத்தில் எனக்கு அபார மதிப்பு. தங்களைக் கேட்காமல் நான் எதுவும் செய்வதில்லை."

1 முதல் 3 கேள்விகளுக்கு ரூ. 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7—8—0. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை. வி. பி. பி. தனி.

N. B:—வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P. O., (S. I.)

சதி-பதி வாழ்க்கை

விஞ்ஞான ரீதியாக இல்லற வாழ்க்கையின் சிற்றின்பச் சிறப்புக்களை வெகு நுணுக்கமாகவும், விளக்கமாகவும் எடுத்துப் போதிக்கும் ஒரே தமிழ் நூல்

"மணவாழ்க்கையின் - - மர்மங்கள்"

என்னும் புஸ்தகமாகும். சிற்றின்பத்தைப் பேரின்பமாக்கி, கர்ப்பத்தடை முறைகளை நன்கு விளக்கி, மலட்டுத் தனத்தை முற்றிலும் போக்கி, கணவன்-மனைவி வாழ்க்கையை வெகு உன்னதமாக்கி வைக்கும் அத்தனை இரகசியங்களும் பொதிந்த விஞ்ஞான நூல். ஒவ்வொரு ஸ்திரீ புருஷரும் தவறாது படிக்கவேண்டிய அபூர்வ ஔஷதம். மலிவுப்பதிப்பு ரூ. 3/12. பரிசுப்பதிப்பு ரூ. 5/8. தபால் செலவு வேறு. தேவைக்கு உடனே எழுதுங்கள்.

ஷாஜஹான் புக் டெப்போ, 34, சாந்தோம்—சென்னை 4.

கதா மோகன ரஞ்சிதம்

3-பாகங்கள் விலை ரூ. 2-8-0

தபாற் செலவு பிரத்யேகம்.

ஜாதகம் ! ஆரூடம் ! !

ஜோதிஷ சாஸ்திரத்தில் 30 வருஷங்களுக்குமேல் அனுபவம் வாய்ந்த ஜோதிடரால் ஆச்சரியமான ஜோதிடம் !

இன்றே எழுதுங்கள். உங்களுக்குத் தேவையான ஏதாவது உங்களுடைய எதிர்காலத்தைப்பற்றிய ஐந்து கேள்விகளை எழுதி கவரில் வைத்து அனுப்புங்கள். உங்கள் கேள்விகளுக்குச் சரியான பதில் ஜோதிஷ சாஸ்திரத்தில் 30 வருஷங்களுக்குமேல் அனுபவம் வாய்ந்த ஜோதிஷரால் தெளிவாகவும், விவரமாகவும் எழுதியனுப்பப்படும். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:-1 முதல் 5 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1க்கு அணு 8. ஜாதகம் கணிக்க. ஜாதகம் ஒன்றுக்கு ரூ. 2. நவக்ரக கவசம் ரூ. 7/8.

1 வருஷத்துக்கு தசாபுக்தி அந்தரவாரியாக பலன் எழுத ரூ. 5.

விவரங்களுக்கு: Prof. T. S. கிருஷ்ணசாமி ஐயர், ஜோதிஷர்ஸ்ரீமானேஜர்.

சத்ய நாராயண அஸ்ட்ரலாஜிகல் ப்யூரோ,

தண்டலை, கள்ளக்குறிச்சி P. O. தென்னாற்காடு. (தென் இந்தியா)



501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின் குமாரரான முகமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தர மான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடி களின் ரகமும், மணமும், குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்:

ஸ்பேட் கிளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.



ஆஸ்தமாவை குணப்படுத்துவது

ஸ்வாஸஹாரி தான்.

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீர்ணத்தை குணப்படுத்தி நுரை ஈரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹாரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR

தராஸ் ஸ்டாகிஸ்டுகள்: தாதா & கோ, நைனியப்ப நாய்க்கன் தெரு.



1 பவுனில் 4 ஜதை

கவரிங் வளையல்கள்

கிடைக்கும்

காஸிம் பிரதர்ஸ், 192, சைனா பஜார், சென்னை.

யானைக்காலுக்கு

நிகரற்ற மருந்து (எலப்டோ பில்ஸ்)

ஆரம்ப அல்லது கடுமையான யானைக்கால் பிலேரியா வியாதிகளுக்கு நிச்சயமான நிவாரணி. பல நாள் அனுபவத்தின் பயனாக தயாரிக்கப்பட்டது. உத்திர வாதமுள்ளது. ஆபத்தில்லாதது. விலை ரூ. **9-8-0.**

தபால் செலவு பிரத்யேகம்.

SEENU & Co., P. B. No. 1638. (L) **MADRAS 1.**

ஆரூடம்!

உங்கள் எதிர்கால பலன்!!

★

தொழில், குடும்பம், காதல், பிரயாணம், வியாதி, வியாஜ்யம், வியாபாரம் முதலிய எல்லா விஷயங்கள் சம்பந்தமாகவும் குறிப்பாக பதில் அனுப்பப்படும். கட்டணத்திற்கான போஸ்டல் ஆர்டருடன் ஜாதகம் அல்லது கடிதம்எழுதும் நேரம்தேவை.

கேள்வி 3-க்கு ரூ. 2.

மேற் கேள்வி ஒவ்வொன்றுக்கும் அணா 8.

10 கேள்விகள் அல்லது **ஒரு வருஷ பலன் ரூ. 5.**

வெளி நாடுகளுக்கு 5 ஷில்லிங்.

மீனாக்ஷி ஜோதிடாலயம்,

P. B. நெ. 1015, பம்பாய்.



உயர் ரக கைக்கடியாரங்கள்

ஜுவல் பதித்தது.



ஸ்விஸ் தயாரிப்பு. சரியான மணிகாட்டும். உறுதியானது அழகிய டிசைன். தபால் செலவு அணா 14. நெ 1. வட்டம் குரோமியம் கேஸ் 4 ஜுவல் ரூ. 13. சிறந்தது ரூ. 14. நீண்ட சதுரம குரோமியம் கேஸ் 5 ஜுவல் ரூ. 18. சிறந்தது ரூ. 20. ரோல்ட்கோல்டு (10 வருஷ உத்தரவாதம்) 6 ஜுவல் ரூ. 25. சிறந்தது ரூ. 27. வட்ட. தட்டை கேஸ் 15 ஜ்வல் ரூ. 29. சிறந்தது 30. நெ. 2, நீண்ட சதுர குரோமியம் கேஸ் 6 ஜுவல் ரூ. 21, சிறந்தது ரூ. 22. நீண்ட சதுர ரோல்ட்கோல்டு (10 வருஷ உத்தரவாதம்) 7 ஜுவல் ரூ. 27. சிறந்தது ரூ. 30. அலாரம் டைம்பீஸ் 4 ஜ்வல் ரூ. 14. சிறந்தது 15.

வீட்டிலேயே அச்சடிக்கும் பாகெட் பிரஸ்:—

பெயர்கள், விலாசம், கடிதம், லேபில்—நேர்த்தியாக வீட்டில் அச்சடிக்கலாம். நெ. 1. ரூ. 2. நெ. 2. ரூ. 3. ஸ்பெஷல் ரூ. 3/8. சிறந்தது ரூ. 5. தபால் செலவு அணா 14.

FRENCH COMMERCIAL STORES (T. M. S.)
Post Box No. 12216, CALCUTTA 5.

ரூ. 500 இனம்

ஆச்சரியகரமான சக்திவாய்ந்த சித்த யந்திரம்.

சக்தி வாய்ந்தது. இந்த "கவசத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனால் நீர் விரும்பும் (ஆண், பெண்) எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 500 இனம்.

செப்பு மூடியுடன் ரூ. 5
மூன்று வாங்கினால் ரூ. *12.*

வெள்ளி மூடியுடன் ரூ. 7.
மூன்றுக்கு ரூ. *18.*

தங்க மூடியுடன் ரூ. *15.*
மூன்றுக்கு ரூ. 40.

Sri Kamrup Kamakshya Ashram,
199/B, P.O. Rajdhanwar, (Hozaribagh)

எலிஸபெத் இளவரசி தன் குழந்தையுடன் வீற்றிருக்கையில் எடுத்த படம்.

சகல விசேஷங்களுக்கும்
பட்டு & நூல் ஜவுளி தினுசுகள் சரசமான விலையில் கிடைக்கும்.
குடந்தையில் V. S. R. ஜவுளி கடை
"சுப்ரமணிய விலாஸ்" பெரிய தெரு, கும்பகோணம்.
மாயவரம் பிராஞ்சு:—
"ஸ்ரீ காமகோடி வஸ்த்ராலயம்"
மஹாதான தெரு, மாயவரம்.
அன்பர்கள் அனைவரும் விஜயம் செய்து ஆதரிக்கக்கோருகிறேம்.
Prop: விருபாக்ஷிபுரம் V. S. Ramaswamy,
(Son of V. N. S. Iyer)

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32–க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24–க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12–க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15–க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80–க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை.
மவுண்ட் ரோடு, சென்னை.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

★

சந்தா விவரம்

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்.)

	இந்தியா, சிலோன்,		வெளிநாடு	
1-வருஷம்	13	0	18	0
6-மாதம்	7	0	9	8
3-மாதம்	3	12	5	0

தனிப்பிரதி அணு 4

3-மாதத்திற்குக் குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்,
"சுதேசமித்திரன்" ஆபீஸ்,
மவுண்ட் ரோட், மதராஸ்.

வாழிய செந்தமிழ்! சுதேசமித்திரன் வாழ்க நற்றமிழர்!
வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரிஹு மார்கழிமீ 26உ ★ 1949-ஹு ஜனவரிமீ 9உ No. 50

நல்ல செய்தி

இந்திய மக்கள் களிப்பெய்தும்படியான ஒரு செய்தியோடு இந்த 1949-ம் வருஷம் ஆரம்பமாயிருக்கிறது. சென்ற 14 மாதமாக நடந்து வந்த காஷ்மீர யுத்தம் நின்றுவிட்ட செய்தியே அது; இந்திய அரசாங்கத்துக்கு இரு பெரும் பிரச்னைகளாகி வேதனை கொடுத்து வந்த ஹைதராபாத் விஷயம் முதலில் தீர்ந்தது. அதையடுத்து காஷ்மீர் போரும் நிறுத்தப்பட்டுவிட்டது. இது இப்போதைக்குத் தற்காலிகமானதே என்ருலும் நிரந்தரமான அமைதி காஷ்மீரத்தில் நிலைபெற இது அடிகோலுமென எதிர்பார்க்கலாம். இந்தப் பின்னணியோடு கவனிக்கையில் காஷ்மீர்ப் போர்நிறுத்தச் செய்தி நல்ல செய்திதான்!

அங்கு சகஜமான நிலைமீண்டு, மக்கள் தங்கள் எதிர்காலத்தைத் தங்கள் இஷ்டம் போல் முடிவு செய்துகொள்ள விடுவதென்பதே தற்போது இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் முக்கியக் கருத்து. உண்மையில் காஷ்மீர் விஷயம் அங்குள்ள மக்களின் பொறுப்பு என்றுதான் இந்திய சர்க்கார் ஆரம்பத்திலிருந்தே வற்புறுத்தி வந்திருக்கின்றனர். காஷ்மீர் ஏற்கனவே சட்ட முறைப்படி இந்தியாவுடன் இணைப்புற்றது. அங்குள்ள பொறுப்பு வாய்ந்த ஜனப்பிரதிநிதிகளும் இந்த இணைப்பு ஏற்பாட்டை உறுதிப்படுத்தினர். எனினும் இந்திய சர்க்கார் அதை ஒரு நிரந்தர ஏற்பாடாக ஏற்றுக்கொண்டு விடவில்லை. இப்பிரச்னைபற்றி பொதுஜனங்களின் கருத்தை அறிந்து, அக்கருத்துப்படியே தாங்கள் நடக்கப் போவதாக அவர்கள் அப்பொழுதே திட்டமாக அறிவுறுத்தியிருக்கின்றனர். ஆனால் காஷ்மீரில் மக்கள் தங்களுக்கு இஷ்டமானபடி இப்பிரச்னையை முடிவு செய்துகொள்வதில் பாகிஸ்தானுக்கு விருப்பமில்லை. காரணம் தெளிவு. பலாத்காரமாக அச்சமஸ்தானத்தைக் கபளீகரம் செய்துவிடுவதென்ற உறுதியுடன் அந்நாடு முதலில் மலை ஜாதிக் கொள்ளையரை காஷ்மீர்மீது ஏவிற்று. அதன் எண்ணம் சிறிதும் கைகூடுவதாயில்லை, பின்னர் பாகிஸ்தான் தன்து படைகளை பகிரங்கமாகவே இப்போர்முனையில் ஈடுபடுத்தத் துணிந்தது.

பாகிஸ்தானின் இந்தஅநீதியான தலையீட்டை ஒழித்து காஷ்மீர் மக்கள் தங்களுக்கு இஷ்டமான முறையில் தங்கள் எதிர்காலத்தை நிர்ணயித்துக்கொள்ள வழி செய்யவே, இந்தியப் படைகள் அங்கு செல்ல வேண்டியதாயிற்று. அதை அடுத்து இந்திய சர்க்கார் இப்பிரச்னையில் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் தலையீட்டைக் கோரியதும் அதே நோக்கத்துடன்தான்.

பாகிஸ்தான் மேற்கொண்ட விபரீதமுறை வெட்ட வெளிச்சமாயிருந்தும் ஐ. நா. சங்கம் அதைத் தடுக்க உடனடியான நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லை. அதற்குப்பதிலாக சம்பந்தமில்லாமல் விவாதம் நடத்தி குட்டை குழப்பிக் காலங்கழித்து வந்தது. இறுதியாக அச்சங்கம் அனுப்பி வைத்த ஒரு கமிஷனின் மூலம் இப்போதாவது ஒரு உடன்பாடு உருவாயிற்றே என்றுதான் திருப்தியடைய வேண்டும்.

—அடுத்த பக்கம் பார்க்க.

தற்போது ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் படி, பாகிஸ்தான் காஷ்மீரிலுள்ள தனது துருப்புகள் அனைத்தையும் வாபஸ் செய்து விட வேண்டும். மேலும் அச்சமஸ்தானத்தில் புகுந்துள்ள மற்ற பாகிஸ்தானிகளும் மலைஜாதியினரும் அங்கிருந்து வெளியேறும்படி செய்ய தன்னாலானவரை முயற்சி செய்வதாகவும் பாகிஸ்தான் ஒப்புக்கொண்டிருக்கிறது. இதன் பேரில் அங்குள்ள தங்கள் படைகளில் பெரும் பாகத்தை இந்திய சர்க்கார் வாபஸ் செய்ய வேண்டுமென்று இவ்வொப்பந்தம் விதிக்கிறது.

காஷ்மீரில் தங்கள் கோஷ்டியினர் யாரும் நீடிக்க ஒரு நியாயமுமில்லையென்று பாகிஸ்தான் சர்க்கார் இப்போது ஒப்புக்கொண்டது. இந்தியா சர்க்காரும், காஷ்மீர் ஜனப் பிரதிநிதிகளும் நெடுநாளாக வற்புறுத்தி வந்துள்ள கொள்கைக்கு வெற்றியாகும். அச்சமஸ்தானத்துக்குள் பெருவாரியாகப் புகுந்த அந்நியர் வெளியேறினாலேயே அங்கு அமைதியும், குறிப்பாக பொதுஜன வாக்கெடுப்புக்கு வேண்டிய ஒரு சூழ்நிலையும் ஏற்படக்கூடும். இவ்விஷயத்தில் தற்போதைய உடன்பாட்டின் மூலம் தாங்கள் ஏற்றுக்கொண்டுள்ள பொறுப்பை பாகிஸ்தான் சர்க்கார் அந்தரங்க சுத்தியுடன் நிறைவேற்றிவைப்பரென்று எண்ணுகிறோம்.

பொதுஜன வாக்கெடுப்புக்கு முன்னுள்ள இடைக்காலத்தில் பாகிஸ்தான் காவி செய்யும் பகுதி யாருடைய நிர்வாகத்திலிருப்பது என்பது முக்கிய விஷயம். ஐ. நா. கமிஷன் சிபார்சுசெய்யும் ஒரு அதிகாரியின் மேற்பார்வையின்கீழ் ஸ்தல அதிகாரிகளே அங்கு நிர்வாகம் நடத்துவராம். ஆனால் அந்த மேலதிகாரியை நியமனம் செய்யும் அதிகாரம் காஷ்மீர் சர்க்காரிடம் இருக்குமென்று கூறப்படுகிறது. கொள்கையளவில் இது அவர்களுக்கு ஒரு வெற்றிதானாயினும், காரியாம்சத்தில் நடக்கக்கூடியதென்னவென்பதுபற்றி திருப்தி கொள்வதற்கில்லை.

காஷ்மீர்–ஜம்மு சமஸ்தானம் முழுதும் பதிவாகும் வாக்குகளை மொத்தமாக எடுத்துக் கொண்டு அவற்றில் மெஜாரிட்டி குறிக்கும் இணைப்புப் பிரச்னை முடிவாவதா, அல்லது வழியில் இதற்கு ஜில்லா அல்லது பிரதேசவாரியாக வாக்குகள்கணக்கிடப்படுமாஎன்று தெரியவில்லை. எனினும் இவைபற்றி தற்போதைய ஏற்பாட்டை இந்திய சர்க்காரும், காஷ்மீர் சர்க்காரும் ஒப்புக்கொண்டிருக்கின்றனராதலின், அது கூடியவரை திருப்திகரமாயிருக்குமென்றே எண்ணுகிறோம்.

சென்ற ஒரு வருஷ காலத்தில் இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே காஷ்மீர் தகராறைப்போல் மாச்சரியத்தை வளர்த்து வந்துள்ள பிரச்னை எதுவுமில்லை. இது இனிது தீர தற்போது வழியேற்பட்டுள்ள நிலையில், தங்களிடையே இனி நிலையான நட்பு பெருகுமென்று இரு தேச சர்க்காரும் எதிர்பார்ப்பது இயற்கை. இவர்களிடையே தகராறுக்குக் காரணமான பிரச்னைகளும் துரிதமாகத் தீர்ந்து இரு நாடுகளும் ஒத்துழைப்பு முறையின் மூலம் தங்கள் வாழ்வை வளப்பமுறச் செய்யும் என்பதே அனைவரின் நம்பிக்கை.

—::—

ரடசணிய சேனையின் தலைவர் ஜெனரல் ஆர்ஸ்பர்னுக்கும் அவர் மனைவிக்கும் சென்னைக் கார்ப்பொரேஷன் சென்றவாரம் ஒரு உபசாரம் நடத்தியது. நடுவில் சென்னை மேயர் எஸ். ராமசாமி நாயுடு விற்றிருக்கிறார்.

அட்டைப்படம்

பூவும், பூவையும்

சேர மன்னன் போரில் தீரன். வானளாவி எழுந்த பகைவரின் கோட்டைகளை கணப்பொழுதில் கைப்பற்றும் திறமைகொண்டவன். இத்தகைய வீரச் சிறப்புபோல கொடைச் சிறப்பும் அவனுக்கு உண்டு. அவனுடையகைகளுக்குவழங்குவதைத் தவிர வாங்கும்தன்மைகிடையாதாம். கொடுத்துக் கொடுத்தே அவன் கைகள் சிவந்தனபோலும்! ஆனால் இந்த வேந்தன் கையேந்திக் கெஞ்சும்படியான கட்டமொன்று வந்ததாகப் புலவர் வர்ணிக்கிறார்.

சேரமன்னன் தன்னுடைய காதலியை ஒரு தடாகத்தருகே சந்திக்கையில் அவனுடைய தேவியின் ஊடலைப்பற்றிக் குறிப்பிட்டு புலவர் புனைந்த பாடலொன்று பதிற்றுப்பத்தில் அடங்கியிருக்கிறது. அது வருமாறு:...

''ஈரிதழ் மழைக்கட் பேரியலரிவை
ஒன்றிதழ் விழகங் கடுங்குஞ் சீறடிப்
பல்சில கிண்கிணி சிறு பாடலைப்பக்
கொல்புனற் றனிரின டுங்குவன ணின்றுநின்
எறியரோக்கிய சிறு செங்குவளை
ஈயென விரப் பவுமொல்லா ணீயெமக்
கியாரை யோவென பெயர் வோள்கையதை
கதுமென வுருத்த நோக்கமோடதுநீ
பா அல் வல்லா யாயினை பா அல்
யாங்குவல் லுநையோ வாழ்க நின்கண்ணி......

—பதிற்றுப்பத்து.



சேரமன்னனின், தேவி தடாகத்துக்கருகே கையில் சிவப்பு நிறமுள்ள குவளைப் புஷ்பத்தை வைத்துக்கொண்டிருக்கிறாள். அதைத் தன்னிடம் கொடுக்குமாறு மன்னன், யாரிடமும் எதையும் வாங்கி அறியாத தன் கரங்களை தாழ்த்திக் கேட்கிறான். ஊடல் கொண்ட தேவி ''நீ எமக்கு என்ன முறையையுடையையோ?'' என்று கோபத்தோடு கேட்கிறாள். இதுகண்டு மன்னனுக்கும் கோபம். ஆனால் இக் கோபம் மலரைக் கைப்பற்றுவதற்கு உதவ முடியவில்லை. இந்தக் கட்டத்துக்குக் கற்பனை மெருகுகொடுத்து புலவர் சிருஷ்டித்திருக்கும் பாடல்களில் ஒன்றே பகுதியில் மேலே தோன்றுகிறது.

அவலக்ஷணத்தின் காதல்

ப. ராதாகிருஷ்ணன்

போலீஸ் பொன்னுசாமியின் சிவப்புத் தலைப்பாகையைத் தூரத்தில் எங்காவது கண்டுவிட்டாலே வீட்டிற்குள் புகுந்து கதவைத் தாளிட்டுக்கொள்ளுவார்கள் ஜனங்கள். அநாவசியமான கெடுபிடிக்கும் அதிகார தோரணைக்கும் பெயர்போனவன் அவன். அவ்வூருக்குத் தானே ராஜா என்ற ஒரு அபிப்பிராயம் அவன் மனதில் வெகு பலமாக வேரூன்றியிருந்தது. போலீஸ் ஸ்டேஷனில் போனால் ஸப் இன்ஸ்பெக்டர் ஐயாகூட அவனை மரியாதையாகப் பெயரைச் சொல்லித்தான் அழைக்கவேண்டும். மற்றவர்களைக் கூப்பிடுவதுபோல் அவனையும். நம்பர் சொல்லி "ஏய் முன்னூத்தி ஏழு" என்று அழைத்தால் பிரமாதமான கோபம் வந்துவிடும் அவனுக்கு. சுபாவமாகவே பெரிய முரடனான அவன் விஷயத்தில் ஸப் இன்ஸ்பெக்டர் ஐயாவே கொஞ்சம் விட்டுத்தான் பிடிப்பார்.

பொன்னுசாமிக்கு நீண்ட நாளாக மனக்குறை ஒன்றுண்டு. தன் மூஞ்சி ரொம்ப அவலக்ஷணமாயிருக்கிறது என்று தான் அவன் அடிக்கடி வருந்துவான். இத்தனைக்கும் மேற்படி உண்மையை அவன் காதுகேட்க யாரும் சொல்லிக்கொண்டதும் கிடையாது. அப்படி யாராவது சொல்லத் துணிந்திருப்பார்களா என்ன? கடைத்தெருவில் அவன் ரோந்து போகும் போதெல்லாம் வழியிலுள்ள கண்ணாடிகளை உற்றுப் பார்த்துக்கொண்டேதான் செல்வான். அப்போதெல்லாம் அதில் காணப்படும் ஒரு பயங்கரமான உருவம் தன்னுடையதுதான் என்ற உணர்ச்சி அவன் முகத்தை வாடச் செய்யும். பலன்? அடுத்த கண்ணாடியில் மீண்டும் அவன் நோக்கும்போது முதலில் அவன் கண்ட உருவமே இன்னும் அவலக்ஷணமாகத் தோற்றமளிக்கும். அன்றாடம் அவன் வழியில் சந்திக்கும் பெண்மணிகளில் ஒருவராவது இதுவரை அவனை ஏறிட்டு நோக்கியதேயில்லை. தன் துரதிர்ஷ்டத்தை எண்ணி வெம்பி வெதும்பினான் பொன்னுசாமி.

இத்தனைக்கும் அவன் தன்னைச் சிங்காரித்துக்கொள்ளுவதிலும் ஒன்றும் குறைவு கிடையாது. காசு செலவில்லாமலேயே தினம் ஒரு ஸலூனாக நுழைந்து க்ஷவரம் செய்துகொண்டு இதர வாஸனா திரவியங்களையெல்லாம் தவறாமல் முகத்தில் அப்பிக்கொண்டுதான் வெளி வருவான். ஆனாலும் இம்முறைகளால் தன் இயற்கையழகுக்கு மெருகிட அவனால் இயலவில்லை. அவனது மனக்குறை குறையாமலே இருந்து வந்தது— பெண்ணுலகம் அவனைப் புறக்கணித்தே வந்தது.

இப்படியிருக்கும்போதுதான் அச்சம்பவம்— பொன்னுசாமியின் இதயத்திலேயே ஒரு புத்துணர்ச்சியை எழுப்பி அவன் வாழ்க்கையின் போக்கே அடியோடு மாறுவதற்குக் காரணமாயிருந்த அச்சம்பவம் நிகழ்ந்தது. அசைப்பில் பார்க்கும்போது தூக்கியடிக்கும்படியான சம்பவம் அது—உண்மையிலேயே பொன்னுசாமியைத் தூக்கியடித்துவிட்டது என்று அவனே ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். தெருவோடு பிரம்பை ஆட்டிக்கொண்டு நடந்துகொண்டிருந்த அவன் திடீரென்று ககன மார்க்கமாய்ப் பிரயாணம் செய்து கொண்டு போய், ஒரு ஓரமாக போய் விழுந்திருக்கிறானென்றால் அவ்வற்புதத்தை வேறெப்படி வருணிப்பது?

யுத்தகளத்தில் கையில் கத்தியுடனேயே வீரஸ்வர்க்கம் புகும் வீரர்களைப்போலே, கையில் பிரம்புடனேயே தெரு ஓரத்தில் விழுந்திருந்தான் பொன்னுசாமி. அதைப்பற்றியவண்ணம் பிரளய காள ருத்ரனைப்போல கீழே குதித்தான்—தன்னை அங்ஙனம் முட்டி ஒரே தூக்காகத் தூக்கி எறிந்துவிட்டுப் போயிருந்தது ஒரு சாதாரணப் பசுமாடுதான் என்பதைக் கண்டான்.

பொன்னுசாமியின் தலையை விட்டுப் பிரிந்து சென்று கீழே விழுந்திருந்த அவனது சிவப்புத் தலைப்பாகையை இன்னும் தாங்கிக் கொண்டிருந்தது அம்மிருகம். நல்ல சமயத்தில் ஓடித் தன் அதிகாரச் சின்னத்தைக் (தலைப்பாகையை) காப்பாற்றிக்கொண்ட பொன்னுசாமி, அம்மாட்டின் கொம்பைப் பிடித்து முறுக்கி அதைப் பிரம்பால் 'வெளு வெளு' என்று வெளுத்துவிட்டுத் தன்னைத் திருப்தி செய்துகொள்ள முயன்றான். மாடு 'மா' வென்று அலறிக்கொண்டு ஓட்டம் பிடித்தது. பின் அதை விட்டு விட்டு மாட்டுக்குடையவர் யாராவது அருகிலிருந்தால் கவனிக்கலாமென்று திரும்பினான்.

முகத்தில் கலவரத்தின் சாயை படர்ந்திருக்கக் கைகளைப்பிசைந்து கொண்டு நின்றுகொண்டிருந்தாள் ஒரு இளம்பெண். பயத்தினால் அவள் மேனி நடுங்கிக்கொண்டிருந்தது. மிரண்டு மிரண்டு தன் பெரிய கண்களால் பொன்னுசாமியைப் பார்த்து விழித்துக் கொண்டிருந்தாள் அவள். அவளைப் பார்த்தவுடன் துடித்துக் கொண்டிருந்த அவன் மீசை சற்று அசையாமல் நின்றது. ஏழைப் பெண்ணாகத் தோன்றினாலும் அவள் நல்ல அழகிதான் என்று அவனுக்குப்பட்டது. அவனது நெஞ்சில் கோபம் மறைந்து காதல் பிறந்தது. உள்ளூற அவன் மனம் இப்படிப் போராடினாலும் வெளிக்கு விட்டுக் கொடுத்துக் கொள்ளாமல் அவளை மிரட்டத் தொடங்கினான்.

“ஏ புள்ளே. உன்னுதா இந்த மாடு? இது அவ்வளவு தைரியமா என்னை வந்து முட்டறவரைக்கும் சும்மாப் பார்த்துக்கிட்டா நின்னே நீ?” என்று பொன்னுசாமி இரைந்தான்.

“இல்லிங்க போலீஸ் ஐயா. தூரத்திலேயிருந்தே உங்க சிவப்புத் தலைப்பாகையைப் பார்த்துட்டு மிரண்டுபோயி ஓடிச்சு என் மாடு. நான் எவ்வளவோ கத்திப் பார்த்தும் கேக்காமே ஓடிச்சு, நானும் அதன் பின்னாலே தானுங்க ஓடியாந்தேன்—ஆனால் என்னாலே அதைப் பிடிக்க முடியலிங்களே.........” என்று கூறிவிட்டுக் கண்ணைக் கசக்கத் தொடங்கினாள் அவள். பொன்னுசாமியின் கல்நெஞ்சம் இளகிவிட்டது.

“அட ஏம்பிள்ளே அழறே அதுக்குள்ளேயும்? அப்பிடி நான் என்னத்தைச் சொல்லிப்புட்டேன்? அது கேவலம் மிருகந்தானே, அதுக்கு என்ன தெரியும்? அதுக்காக உன்னைச் சொல்லித்தான் என்ன பிரயோசனம்? .... சரி—சரி. அழாதே.” என்று ஆறுதல் சொன்னான் அவன். அடுத்த சில நிமிஷங்களுக்கெல்லாம் அவள் ஒரு பால்காரப் பெண் என்பதையும் அந்தப் பால் வியாபாரத்தின்மூலம் அவளும் அவள் தாயும் ஜீவித்து வருகிறார்களென்பதையும் இன்னும் சில விவரங்களையும் கிரகித்துக்கொண்டான். மேலும் மேலும் அவனது மனம் அவளை நாடியது—ஆனால் இந்தச் சமயத்தில்தான் அந்த ஒரு சந்தேகம் எழுந்து அவன் மனத்தைக் குழப்பியது.

“நாம் அவளைக் காதலிப்பது என்னவோ உண்மைதான்—ஆனால் அவள் நம்மை...........” என்ற யோசனைதான் அது. ‘திரும்பிப் போகும்போதாவது தன்மீது ஒரு கடைக்கண் நோக்கைச் செலுத்திவிட்டுப் போகமாட்டாளா அந்தப் பெண்?’ என்று எதிர்பார்த்தான்—ஆனால் பாவம்! அவள் ஓடின ஓட்டம் புலியிடமிருந்து தப்பியோடும் மானையொத்திருந்ததேயன்றி அதில் கேவலம் நன்றியறிதல் கூடக் காணப்படவில்லை. முதலில் சற்று ஏமாற்றமடைந்த பொன்னுசாமி பின் மனந்தேறினான். அவளது வீட்டின் இருப்பிடத்தையும் அவள் வழக்கமாகப் பால் ‘சப்ளை’ செய்யும் வீடுகளையும் தெரிந்து வைத்துக்கொண்டிருந்தானாகையால், என்னவாயினும் விடாமல் அவளை வளைய வந்து தன்மேல் காதல்கொள்ளச் செய்யவேண்டுமெனத் தீர்மானித்துக்கொண்டான்.



* * * * *

சோம்பேறியிலும் முழுச்சோம்பேறியான பொன்னுசாமி அதிகாலையில் எழுந்திருக்கத் தொடங்கினான்—ஊரே அதிசயித்தது. ஆனால் அவன் மனதில் நிகழ்ந்து கொண்டிருந்த போராட்டங்களின் வன்மை உலகத்துக்கென்ன தெரியும்? அந்தப் பெண் (அவள் பெயர் லட்சுமி என்று அன்றே தெரிந்து வைத்துக் கொண்டிருந்தான் பொன்னுசாமி) அதிகாலையில் செம்பில் பாலை எடுத்துக் கொண்டு சென்று வீடு வீடாகப் பால் ஊற்றி வருவாள். அந்த சமயத்தில் தவறாமல் அந்தத் தெருவில் ஆஜராகியிருப்பான் பொன்னுசாமி. முதலில் சில முறை அவளுடன் பேச்சுக் கொடுக்க முயன்று பார்த்தான். ஆனால் அவள் அதற்கெல்லாம் தன் முகத்தை எங்கோ ஒரு பக்கம் திருப்பிக்கொண்டு உணர்ச்சியற்ற குரலில் சுருக்கமாகப் பதிலளித்தாளே தவிர அவன் எதிர்பார்த்த அன்பும் ஆசையும் அங்கு கிஞ்சித்தும் காணப்படவில்லை. பயனற்ற தன் காதலில் தானே வெறுப்புற்றுத் தற்கொலை செய்து கொள்ளலாமா என்று அவன் எண்ணமிட்ட போதுதான் அவனது அதிர்ஷ்டம் வந்து குறுக்கிட்டது.

அந்தப் பெண் அன்றுடம் பால் ஊற்றி வரும் வீடுகளில் பெரிய பண்ணை சிவராமய்யர் வீடும் ஒன்று. அந்த வீட்டுப் பாட்டியம்மாள் — அவள் அங்கு சமையற்காரியாகத் தானிருக்கவேண்டும்—காலையில் 5-மணிக்கெல்லாம் எழுந்து வாசல் தெளித்துவிட்டு, வாசற்படியில் ஒருசெம்பை வைத்துவிட்டு அடுப்பு மூட்ட உள்ளே சென்றுவிடுவாள். லட்சுமி வந்து பாலை அளந்து அந்தச்

செம்பில் ஊற்றி விட்டுப் போவாள்—இது தவறாமல் நடைபெறுவதை வெகு நாட்களாகக் கவனித்திருக்கிறான் பொன்னுசாமி. மற்ற ஸ்திரீகளைப் போல் நேரில்நின்று பாலை அளந்து பார்த்து வாங்குவதில்லை இந்த அம்மாள்—ஏன் இப்படி என்று அவனே சில சமயங்களில் யோசனை செய்திருக்கிறான்.

அன்று காலை சீக்கிரம் எழுந்திருக்கத் தவறிவிட்டான் பொன்னுசாமி—பிசகு அவனுடைய 'அலாரம்' கடிகாரத்தினுடையதுதான். மணி எட்டுக்குத்தான் அவன் விழித்துக் கொண்டதே. அடாடா! இந்நேரம் பால் சப்ளை எல்லாம் முடிந்து வீட்டுக்குத் திரும்பிப் போயிருப்பாளே அந்தப்பெண் என்று வருந்தினான் அவன்.

அன்று காலை அவன் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய்க்கொண்டிருந்தபோது, பெரியபண்ணையார் வீட்டு வாசலில் ஒரு சிறு கும்பலைக் கண்டான்- அது அவனுக்கு ட்யூடி நேரமல்லவாயினும் அது என்னவென்று விசாரிக்காமல் போக மனம் வரவில்லை. ஏக அதிகாரத்துடன் கும்பலை விலக்கிக்கொண்டு உள்ளே நுழைந்தான். என்ன ஆச்சர்யம்! அங்கே கண்ணீரும் கம்பலையுமாக நின்றுகொண்டிருந்தாள் அவன் இதயராணி. பண்ணையாரும் கூட்டத்தினரும் அவளை எதற்கோ மிரட்டிக்கொண்டிருந்தனர். வாசற்கதவுக்கருகில் அந்தப் பாட்டியம்மாள் நின்றுகொண்டு பாட்டிமார்களுக்கே சொந்தமான பாஷையில் அவளை ஏதோ திட்டிக் கொண்டிருந்தாள்.

"சொல்லடி திருட்டுச் சிறுக்கி. உன் கண்ணீரைக் கண்டு நாங்கள் ஏமாந்துவிடமாட்டோம். எங்கள் வெள்ளிச் சொம்பைத் திருடி எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்?" என்று அதட்டினார் பண்ணையார்.

"ஐய்யோ யசமான் சாமியாணையாக சொல்றேனுங்களே. நான் அந்தச் சொம்பை என் கண்ணாலே கூடப் பார்க்கலிங்களே. நிதமும் போலே இன்னைக்கும் பாலு ஊத்த வந்தேனுங்க. அப்பொ ஒரு சொம்பையும் காணோமுங்க திண்ணைமேலே. சரிதான்-கொஞ்சம் பொறுத்து மத்தவங்களுக்கெல்லாம் பாலு ஊத்திட்டுத் திரும்பி வரும்போது மறுபடியும் பார்க்கலாமின்னு பேசாமப் போயிட்டேனுங்க. அப்பிடித் திருமபி வரும்போதுதான் இந்த அம்மா என்னைப் பிடிச்சிக்கிட்டுத் 'திருடி'ன்னு திட்டினாங்க. அது வரைக்கும் எனக்கு விசயமே தெரியாதுங்க என்று தேம்பினாள் அவள்.

"கட்டையிலே போகிறவள்' கண்ணைப் பார் கண்ணை. நான் தான் முட்டாள். வழக்கமாக வைக்கிற வெண்கலச்சொம்பையே இன்றைக்கும் திண்ணையிலே வைச்சிருந்தேன்னா, எடுத்திருப்பளா இந்தச் சிறுக்கி. என் புத்தியில்லாத்தனம்தான் கல்லுப் போன்ற வெள்ளிக்கூஜாவை..." என்று பிரலாபித்தாள் பாட்டி.

"உங்களைச் சொல்லி என்ன பிரயோஜனம் பாட்டி? நீங்கள் கேவலம் வெள்ளிச் சொம்பை என்ன, தங்கக் குடத்தையே வைத்தாற்கூடத் தெருவில் போகிறவர்கள் அதை எடுத்துக்கொண்டு போவதுதான் நியாயமா? இவளையல்லவா உதைக்கவேண்டும்?" என்று வாதித்தார் கூட்டத்திலொருவர். இந்த நிமிஷத்தில் தான் விஷயங்களைப் புரிந்துகொண்ட பொன்னுசாமி பண்ணையார் முன்னால் வந்து நின்றான். அந்தப் பெண்ணின் களங்கமற்ற முகத்தை நோக்கும்போது அவள் திருடியிருப்பாள் என்று அவனால் நம்பமுடியவில்லை. இதில் ஏதோ சூதிருக்கவேண்டுமென அவனுக்குப்பட்டது. தன்னையே தியாகம் செய்துகொண்டாயினும் அவளைக் காப்பாற்ற உறுதி பூண்டான்.

அவனைக் கண்டதும் பண்ணையார், 'வாப்பா பொன்னுசாமி. பாலுக்காக எங்கள் வீட்டுத் திண்ணையில் வைத்திருந்த வெள்ளிச் சொம்பை அமுக்கிக் கொண்டு விட்டாள் இந்தப் பெண். இவளை ஸ்டேஷனுக்கு இழுத்துக் கொண்டுபோய் நன்றாக விசாரணை செய்" என்றார். 'போலீஸ் ஸ்டேஷன்' என்ற பெயரைக் கேட்டதுமே அந்தப் பெண்ணின் உடல் முழுவதும் அச்சத்தினால் சிலிர்த்ததைக் கண்டான் பொன்னுசாமி. அவனது தீர்மானம் இன்னும் உறுதியாயிற்று.

"தேவையில்லை யஜமான். அந்தச் சொம்பைத் திருடியது அவளல்ல.....நான்தான். நியாயப்படி என்னைத்தான் போலீஸுக்கு அனுப்பவேண்டும். அவளை விட்டு விடுங்கள். அவள் குற்றமற்றவள்." என்றான். பண்ணையார் உட்பட எல்லோரும் ஸ்தம்பித்து விட்டனர்.

"நீயா? நீயா திருடினாய் அந்த வெள்ளிச் சொம்பை...? பொன்னுசாமி. எனக்கு அதில் நம்பிக்கையில்லை. நீ எவ்வளவு யோக்யன் என்று எங்களுக்கெல்லாம் தெரியாதா?.........ஆ! சும்மா இந்தப் பெண்ணைக் காப்பாற்றுவதற்காகவென்று நீயே இக்குற்றத்தைச் செய்ததாக ஒப்புக்கொள்கிறாய்.........என்றார் பண்ணையார்.

"யஜமான் உண்மை எப்படியிருந்தாலென்ன? உங்கள் சொம்பை இந்தப் பெண்தான் எடுத்தாளென்று உங்களால் எப்படிச் சொல்லமுடிகிறது? நான் கூடத்தான் தினம் காலையில் இந்தப் பக்கமெல்லாம் நடமாடிக் கொண்டிருக்கிறேன். அதை நானே ஏன் எடுத்திருக்கக் கூடாதா? நான் எடுத்தேன் என்றுதான் நான் ஒப்புக்கொள்கிறேன். கோர்ட்டில் போனால் நான் சொல்வதை ஒப்புக் கொள்கிறார்களா அல்லது இந்தப் பெண்ணின்மீது குற்றம் சுமத்துகிறார்களா என்று பார்க்கலாம்...... முதலில் எல்லாரும் வழி விடுங்கள் இந்தப் பெண் தன் வீடுசெல்லட்டும்.'' என்று கூறியவண்ணம் அவளது அழகிய கையைப் பற்றிக் கூட்டத்திற்கு வெளியே அழைத்துச் சென்றான். அவனை ஒருவரும் பின்தொடரத் துணியவில்லை.



அவளுடன் அவளது வீடு நோக்கிச் சென்றவன் சற்றுச் சந்தடியற்ற ஒரு இடத்தில் நின்று அவளது வதனத்தை ஏறிட்டு நோக்கினான். அவன் பார்வையில் அன்பும் கடுமையும் கலந்திருந்தன. "ஏ புள்ளே. உன்னைப் போலீஸிடமிருந்து தப்ப வைப்பதற்காக நானே திருடியதாக ஒப்புக் கொள்ளப்போகிறேன். எனக்கு ஆறு மாதத்திற்குக் குறையாமல் தீட்டி விடுவார்கள்– வேலையும் போய்விடும். ஆனால் ஒன்று. உண்மையை ஒளியாமல் சொல்லிவிடு. நீ அந்தச் சொம்பைத் திருடினது உண்மைதானா?'' என்று கேட்டான்.

அவள் குரல் நடுங்கியது—கண்களில் மீண்டும் நீர் சுரந்தது. "ஐயா துரையே! நீங்கள் ஒருவராவது என்னைச் சந்தேகிக்க மாட்டீர்களென்று நினைத்தேன். இதுவரை என் மனத்தால் கூட வேறொருவர் பொருளை அபகரிக்க எண்ணியது கிடையாதே. என் பேரிலா இந்தப்பழி!'' என்று அவள் கூறிவரும்போதே உணர்ச்சிமேலிட்டால் அவளது கரத்தைப் பற்றிக்கொண்டான் பொன்னுசாமி. அவன் தன் கையை இழுத்துக்கொள்ள முயலவில்லை. இருவர் கண்களும் ஒரு கணம் சந்தித்தன. பொன்னுசாமி புளகாங்கிதமடைந்தான்.

அந்தச் சில நிமிஷங்களுக்குள்ளும் அவளது மனத்தின் ஆழத்தை அறிந்துகொண்டான் பொன்னுசாமி. "லட்சுமி நான் ஜெயிலுக்குப் போவதென்னமோ நிச்சயம்தான். ஆனால் நான் வெளியே வரும்வரை நீ எனக்காகக் காத்திருப்பாயோ?'' என்று கேட்டான். "கட்டாயம் உங்களையன்றி வேறு எவரையும் மணம் புரிந்துகொள்ள மாட்டேன், கவலை வேண்டாம்.'' என்று வாக்குறுதி அளித்தாள் அவள். பிரியா விடைபெற்று ஸ்டேஷனை நோக்கி நடந்தான் காதலன் பொன்னுசாமி.

* * * *

"பொன்னுசாமி. உனக்கென்ன பைத்தியம் பிடித்துவிட்டதா? இத்தனை வருஷமாக மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் போலீஸில் வேலை பார்த்திருக்கிறாய். இப்போது வந்து ஒரு அற்பத் திருட்டைச் செய்துவிட்டேன் என்று ஒப்புக்கொள்கிறாயே. போ அப்பா போ. வேறு யாரையாவது இதில் சிக்கவைக்க முடியுமா பாரு'' என்று கடிந்து கொண்டார் ஸப் இன்ஸ்பெக்டர் ஐயா.

"அதெல்லாம் வேண்டாமுங்க. நான் கொஞ்ச நாள் ஜெயிலிலே நிம்மதியா இருந்துட்டு வெளியே வந்து கல்யாணம் பண்ணிக்கப் போறேனுங்க. எனக்கு இந்தப் போலீஸ் வேலையே பிடிக்கலை.'' என்றான் பொன்னுசாமி.

"அட என்னப்பா அப்படிச் சொல்லிட்டே. நீ இருக்கறதினாலேயே இந்த ஊரிலே ஜாஸ்தி

கலாட்டா இல்லாம இருந்துக்கிட்டிருக்கு. இப்போ நீயே போறேன் எங்கிறாயே, என்னத்தைச் சொல்றது, சரி நீ பிடிவாதக்காரன், உன்னோடு வாதாடிப் பிரயோசனமில்லை......'' என்று கூறிய வண்ணமே லாக் அப் ரூம் சாவியைக் கையிலெடுத்தார் இன்ஸ்பெக்டர் ஐயா.

மறுகணம் போலீஸ் ஸ்டேஷன் வாசலில் ஒரு ஜட்காவண்டி வந்து நின்றது. பெருமூச்சு வாங்க அதனுள்ளிருந்து இறங்கி உள்ளே பிரவேசித்தார் பெரிய பண்ணை சிவராமய்யர், லாக் அப் ரூம் கதவைத் திறந்து இன்ஸ்பெக்டர் சற்றுத் திரும்பிப்பார்த்தார்.

“இன்ஸ்பெக்டர் ஐயா, பொன்னுசாமியையா லாக்கப்பில் தள்ளுகிறீர்கள்? வேண்டாம், வேண்டாம். அவன் நிரபராதி. தவறு என்னுடையது. என் வெள்ளிச் சொம்பைத் திருடியது வேறு யாருமில்லை. எங்கள் வீட்டில் வேலைசெய்பவர்களில் ஒருவரே தான். இதனால் தான் இவ்வளவு கஷ்டங்கள், வேண்டாம். நீங்கள் இந்தக் கேஸைத் தள்ளுபடி செய்துவிடுங்கள்'' என்று பதறினார் பெரிய பண்ணையார்.

“என்ன பண்ணையார்வாள். கொஞ்சம் நிதானமாக உட்கார்ந்து விளக்கமாகச் சொல்லுங்கள்'' என்றார் இன்ஸ்பெக்டர்.

“சொல்கிறேன். எல்லாம் அவளால் வந்தது. என் முட்டாள்தனம் நான் அவளைமட்டும் சந்தேகிக்கவில்லை. அவளே வெள்ளிச் சொம்பை அமுக்கிப் பெட்டிக்குள் வைத்துப் பூட்டிக்கொண்டு பழியை அந்தப் பால்காரப் பெண் மீது சுமத்திவிட்டாள். அவளுக்குப் பரிந்து கொண்டுதான் பொன்னுசாமி அந்தக் குற்றத்தைத் தன் மீது ஏற்றுக்கொண்டான். அப்புறம் நானும் இந்த விஷயத்தில் சந்தேகம் கொண்டு பெட்டியைத் திறந்து காட்டும்படி கட்டாயப்படுத்தினதன் பேரில் வெள்ளிச் சொம்பு கல்லுப்போல அதில் இருந்தது. அந்த அயோக்ய நபரை உடனே ‘டிஸ்மிஸ்’ செய்துவிட்டேன்............பொன்னுசாமி என்னை மன்னித்துக்கொள்ளப்பா என்னால் உனக்கு ரொம்பக் கஷ்டம்......'' என்று குழைந்தார் பண்ணையார்.

“ஆமாமப்பா பொன்னுசாமி, நானும் அப்பவே நினைச்சேன். ஏனப்பா, அந்தப் பால்காரப் பெண்ணுடன் எத்தனை நாளாக.........?'' என்று கேலியில் ஆரம்பித்தார் இன்ஸ்பெக்டர். அவரும் பண்ணையாரும் விழுந்து விழுந்துசிரித்தனர். வெட்கத்துடன் வெளியே ஓடினான் பொன்னுசாமி. வாசலில் வைத்திருந்த இன்ஸ்பெக்டரின் சைக்கிளில் வெகு ஸ்வாதீனமாக ஏறிக்கொண்டு தன் காதலியின் வீடு நோக்கி விரைந்தான்.

* * * *

இப்பொழுது கூட பொன்னுசாமி போலீஸ் வேலையை விடவில்லை. ஆனால் லட்சுமி பால் வியாபாரத்தை விட்டுவிட்டாள்-பொன்னுசாமியின் மனைவியாக அவன் வீட்டை அலங்கரித்து வருகிறாள். அன்று அவனை முட்டித் தள்ளிய அதே பசுமாட்டைக் கறந்து அவளளிக்கும் பாலெல்லாம் சாப்பாட்டு ராமனான பொன்னுசாமி ஒருவனுக்குத்தான் போதுமானதாயிருக்கிறது.

இலவசம்!



“என்னாங்க, நூத்தி எட்டு, பஸ் சார்ஜையெல்லாம் அதிகம் பண்ணிட்டாங்களாமே''

“அடே! அதிகம் பண்ணினா என்ன, இல்லை குறைச்சாத்தான் என்ன; எல்லாம் நமக்கு ஒண்ணுதானே, ஐநூத்தி நாலு!''

அன்புள்ள கீதாவுக்கு!

நீ வாரத்துக்கு ஒரு கடிதம் தானே எழுதச் சொன்னாய்? நாளொன்றுக்கு ஒரு கடிதம் எழுதினால்கூடப் போதாது போலிருக்கிறது. எழுதவேண்டியது அவ்வளவு நிறைய இருக்கிறது.

நாம் நினைப்பது ஒன்று, நடப்பது ஒன்று என்பதை இங்குதான் கண்டேன். "ரொம்பவும் முரடாக இருக்கிறதே! முன் பின் தெரியாத இடம். புதிய சம்பந்தம். பாவம்! ரமா அங்குபோய் எப்படிக் குடித்தனம் செய்யப்போகிறதோ?" என்று அம்மா அடிக்கடி உன்னிடம் சொல்லிக் குறைபட்டுக் கொள்வாளே, ஞாபகத்துக்கு வருகிறதா? 'இவரை' (கணவர்)ப்பற்றித்தான் சொல்கிறேன். ஆவணி அவிட்டம், தீபாவளி முதலியவைகளுக்கு வந்திருந்தபோது, செய்தது போறாது என்று வேஷ்டியையும், மோதிரத்தையும் வீசி எறிந்து விட்டுத்திரும்பிக்கூடப் பாராமல் விரைப்புடன் சென்ற 'பேர் வழி' இவர் தானா என்ற சந்தேகம் எனக்கு அடிக்கடி ஏற்பட்டு விடுவதுண்டு. புலி பசுத்தோலைப்போர்த்துக்கொண்டிருக்கிறது என்று சொல்வார்கள். இவரைப்பற்றிச் சொல்ல வேண்டுமானால் பசு புலித் தோலைப் போர்த்துக்கொண்டிருக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். அதாவது மாப்பிள்ளை என்றால் அப்படியெல்லாம் கெடுபிடியுடன் விரைப்பாக நடந்து கொண்டால்தான் நாலுபேர் மதிப்பாக நினைத்துக்கொள்வார்கள் என்று எண்ணிக்கொண்டாரோ அல்லது. மாப்பிள்ளைக்கு உள்ள லக்ஷணம் அது என்று எண்ணிக்கொண்டுவிட்டாரோ, அல்லது அம்மாவின் (மாமியார்) தூண்டுதலின்பேரில் அவ்விதம் நடந்துகொண்டாரோ, அதற்குக் காரணம் எதுவாகவாவது இருக்கட்டும். அதைக்கொண்டு அவருடைய குணத்தை நிர்ணயம் செய்துவிட்டது ரொம்பவும் முட்டாள்தனம் என்றுதான் சொல்கிறேன. அது இங்கு வந்த பிறகு தான் தெரிந்தது.

எனக்கு மாத்திரம் உள்ளுக்குள் திகில்தான். நாமோ ரொம்பவும் செல்லமாக வளர்ந்தவர்கள். சீ என்று ஒருவர் சொல்லிக்கேட்டது கிடையாது. அனாவசியமாக, ஒருவர் ஒரு வார்த்தை சொன்னால் ரௌத்ராகாரமாகக் கோபம் வந்துவிடும். 'இப்படி அடியோடு சகிப்புத்தன்மையே இல்லாவிட்டால் நீ புக்ககத்தில் எப்படித்தான் குடித்தனம் செய்யப்போகிறாய்! ஆணாகப் பிறந்திருந்தாலும் பரவாயில்லை. பெண் ஜன்மம் எடுத்தாய்விட்டது. பெண் ஜன்மம் என்று எப்பொழுது எடுத்தாயிற்றோ அப்பொழுதே ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டாகவேண்டும் என்பது நிச்சயமாகிவிட்டது. புக்ககம் என்று போனால் நாலுபேர் நாலுவிதமாகத்தான் சொல்வார்கள். அதில் இல்லாததுமிருக்கும், பொல்லாததுமிருக்கும். அதற்குத் தகுந்தபடி நடந்துகொண்டு அதையெல்லாம் நேர்ந்து நிரவிக்கொண்டுதான் போகவேண்டும். இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு இவ்வளவு ரோஷம் கூடாது என்று அம்மா அடிக்கடி என் பலஹீனமான குணத்தைப்பற்றிச் சுட்டிக்காட்டியதுதான் உனக்குத் தெரியுமே. அதற்குத் தகுந்த மாதிரி ஆவணி அவிட்டம், தீபாவளி முதலிய சந்தர்ப்பங்களில் இவர் தன்னுடைய சொரூபத்தைப் பிரகடனப்படுத்திவிட்டுப் போயிருக்கிறாரா? நம்முடைய போக்கிற்கும் அந்த இடத்துக்கும் எப்படியம்மா சரிப்படப் போகிறது என்ற திகிலுடன் தான் இங்கு வந்து சேர்ந்தேன். அம்மாவிடமும் உன்னிடமும் மாத்திரம் மேலுக்காவது தைரியமாகப் பதில் சொல்லிக் கொண்டிருந்தேனே தவிர உள்ளுக்குள் என்னவோ திகில் தான். என்னமோ படித்திருக்கிறோம், நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்திருக்கிறோம், பொய் புனைசுருட்டு ஒன்றும் தெரியாது, நியாயத்துக்கு விரோ

தமில்லாமல் நடந்துகொள்வோம், கடவுள் விட்ட வழியாகிறது பார்ப்போம் என்ற ஒரே தைரியத்துடன்தான் இங்கு வந்து சேர்ந்தேன்.

குடும்பம் என்னவோ பெரிய குடும்பம்தான். மாமியார் மாமனார், இரண்டு மைத்துனர்கள்-ஒருவர் மூத்தவர், ஒருவர் இளையவர். மூத்தவருக்குக் கலியாணமாகி ஐந்து வயதில் ஒரு ஆண் குழந்தையும் இரண்டு வயதில் ஒரு பெண் குழந்தையும் உண்டு. இளைய மைத்துனருக்கு இன்னும் கலியாணமாகவில்லை. காலேஜில் படித்துக்கொண்டிருக்கிறார், இரண்டு நாத்தனார்கள். ஒருத்தி விதவை, அவளுக்கு இரண்டு பசங்கள். ஒன்று ஆண், மற்றொன்று பெண். இங்கேயே வந்திருக்கிறாள். ஒரு அத்தை இருக்கிறாள். வாழா வெட்டி இங்கேயே வந்து விட்டாள். குழந்தை குட்டிகள் கிடையாது. அகமுடையான் வேறு கலியாணம் செய்துகொண்டு விட்டானும். இன்னொரு நாத்தனாருக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை. காலேஜில் படித்துக் கொண்டிருக்கிறாள். பெரிய மைத்துனருக்கு தபால் இலாகாவில் உத்தியோகம். மாதம் இருநூற்றுஐம்பதுரூபாய் சம்பளம். மாமனருக்கு நூறு ரூபாய் பென்ஷன் வருகிறது. இது தவிர கிராமத்தில் பிதுரார்ஜித சொத்து இருபது ஏக்ரா பூமி இருக்கிறது. சொந்த வீடு. கடன் ஒன்றும் கிடையாது. மாமனர் பாங்கியில் ஏதோ கொஞ்சம் பணமும் வைத்திருக்கிறதாகக் கேள்வி.

பெரிய மைத்துனருக்கு கொஞ்சம் பணக்கார இடத்தில் கலியாணம் போலிருக்கிறது. மாமன், மைத்துனன் என்று அடிக்கடி காரில் வந்து போகிறார்கள். ஓரகத்திக்குக் கொஞ்சம் பிறந்தகத்துச் சலுகை இருக்கும்போல் தோன்றுகிறது. மைத்துனரும் அவருடைய 'சொல்லுக்கு' அடங்கினவராகக் காணப்படுகிறார். இதன் காரணமாக அவளுக்குக் குடும்பத்தில் செல்வாக்கு கொஞ்சம் அதிகம் இருக்கிறமாதிரி தெரிகிறது.

பெரிய நாத்தனர் ஒரு அசடு போலிருக்கிறது. அவளை யாரும் லட்சியம் செய்வதாகத் தெரியவில்லை. அத்தை ஒருத்தி இருக்கிறாள் என்று சொன்னேனே, அவள் பலே பேர்வழியாக இருப்பாள்போல் தெரிகிறது. எல்லோரும் அவளுக்கு வேண்டியவர்கள் என்ற மாதிரியில் ரொம்ப கெட்டிக்காரத்தனமாக நடந்துகொள்கிருள். ஆனல் அவளைப் பார்க்கும் போதே என்ன காரணமோ தெரியவில்லை. அவள் மீது எனக்கு நல்ல எண்ணமே உண்டாகவில்லை. அவளுடைய முகத்தில் அப்படிப்பட்ட ஒரு குரூரத்தனம் பிரதிபலிக்கிறது. 'இவருக்கும்' அவளிடத்தில் அவ்வளவாக ஒரு நல்ல அபிப்பிராயமோ, மதிப்போ இருப்பதாகத் தெரியவில்லை. அதனல் வந்தது முதல் அவள் என்னை ஒரு தினுஸாகப் பார்க்கிறாள். நானும் அவளிடம் ஒரு தினுஸாகத்தான் நடந்து கொள்கிறேன்.

"..................அவள் ஒரு மாதிரியாக பார்ப்பாள்.................."

இளைய நாத்தனர், மகாதீசல். யாரும் லட்சியம் கிடையாது. வீட்டில் சர்வசுதந்திரம் அவ

ளுக்கு. படிக்கிற பெருமைபோ லிருக்கிறது!

இளைய மைத்துனர், சாப்பிடுகிறவேளை, இரவு படுக்கிற வேளைதவிர மீதி வேளைகளில் அவர் வீட்டிலே தங்குவதையே காணேம்.

மாமியார், மாமியாருக்குள்ள லட்சணத்தில் கொஞ்சமும் குறைவில்லாமல் இருக்கிருள். எல்லாரையும்விட பெரிய பெண்ணினிடத்திலும், அவள் குழந்தைகளிடத்திலும் அசாத்திய பிரீதி. இது ஒவ்வொரு குடும்பத்திலும் உள்ளதுதானே என்கிருயா? இருந்தாலும் இந்தக் குடும்பமும் அந்த நியாயத்துக்கு விதிவிலக்கு அல்ல என்பதைத் தெரிவிப்பதற்காகவே இதைச் சொன்னேன்.

அத்தைக்கும் மாமியாருக்கும் பொருத்தம் கொஞ்சம் சரியாக இருக்காதுபோல் தெரிகிறது. ஆனல் மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் அந்த மாதிரி இருப்பதாக யாருக்கும் தெரியாது. ஆழ்ந்து பார்த்தால்தான் தெரியும். வெளிக்கு இரண்டு பேரும் மனேவேற்றுமையே இல்லாததுபோல்தான் நடந்து கொள்கிருர்கள்.

மாமனருடைய குணத்தைப் பற்றி வந்தவுடனேயே தெரிந்து கொண்டுவிட்டேன். நான் வந்தசமயம் எல்லோரும் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். குழம்பு பறிமாறப்பட்டது. குழம்பு நன்ருகத்தான் இருக்



"......பட்டணுவும் அப்படித்தான் நினைப்பான் என்று......"

கிறது, உப்பு, புளி எல்லாம் சரிதான். காரம் கொஞ்சம் குறைவாக இருந்தால் பலே ஜோராக இருக்கும். பட்டணுவின் அபிப்பிராயமென்ன?' (பட்டணு என்பது இவருடைய செல்லப் பெயர்) எல்லாவற்றையும் ருசி பார்த்து சாப்பிடுகிறவனுயிற்றே என்ருர் மாமனர். பிறகு எனக்கும். அந்தக் குழம்பைச் சாப்பிடும் பாக்யம் கிடைத்தது. காரமாவது காரம்! அடியம்மா கண்களில் ஜலம் தத்தளித்தது. அன்று சமையல் ஓரகத்தியின் உபயம். எதற்காக இந்த சம்பவத்தைச் சொன்னேனென்ருல் அப்படிப்பட்ட ஒரு விஷயத்தை எவ்வளவு அடக்கமாகச் சொல்லியிருக்கிருர் என்பதற்காகத்தான். மொத்தத்தில் சாந்த குணம், நல்ல ரஸிகர்.

'இதுதான் எங்கள் குடும்ப பாத்திரங்கள்' இந்தப் பாத்திரங்கள் குடும்பத்தில் எப்படி எப்படிப் பயன்படுகின்றன என்பதை அடுத்த கடிதங்களில் எழுதுகிறேன்.

இப்படிக்கு

உன் அன்புள்ள சிநேகிதி

ரமா

தேவியின் கோபம்

(ஸாவித்திரி)

கார்மேகத் திவலைகளின் கொடுமையினின்றும் துள்ளியெழுந்து வெள்ளி படர்ந்து எள்ளி நகைத்து நின்றது நீலவானம். மரகதப்பச்சை படர்ந்து நிற்க, தலை நிமிர்ந்து நீலவானை நோக்கிப் புன்னகை பூத்தது சித்ரகூட பர்வதம். அம்மலைச் சாரலின் பசுஞ்சோலைகளின் நடுவே சாந்தம் குலவ விளங்கிற்று கோசலைச் செல்வனின் ஆசிரமம்.

தயங்கித் தயங்கித் தவழ்ந்து வந்த மந்தமாருதம் மிதிலைச் செல்வியைத் தழுவியணைத்தது. தன் மதுர இதழ்களில் மோகனப் புன்னகை தவழ, நித்திரையினின்றும் பெயர்ந்தாள் மனோகரியாகிய சீதை. அருகே தன் நாயகனைக் காணாத சீதையின் மனம் சஞ்சலமடைந்தது, "இன்னும் கதிரவன்கூட உதயமாகவில்லையே, எங்கு சென்றிருப்பார்" என்று. இணைபிரிந்த அன்னம்போன்று தன் நாயகனைத் தேடிக்கொண்டே, ஆசிரம வாயிலை அடைந்தாள் ஜனக புத்ரி. வெள்ளி மலைபோல் அங்கு நின்று, ஆசிரமத்துப் பொக்கிஷமாகிய மிதிலைப் பொன்னிற்குக் காவல் புரிந்து வந்த லக்ஷ்மணன், ஜானகியின் மனக்குறையையுணர்ந்தவனாய், "தேவீ! மாரிகாலம் முடிவுற்று மிளிரும் வனப்புடன் புத்துயிர் பெற்று விளங்கும் இக்கானகத்தையும், மலைச்சாரலையும் கண்டு வரச் சென்றிருக்கிறார் ரகுநாதன்" என்றான். தேவியின் மனதில் மீண்டும் சாந்தம் நிலவியது. "அதோ சூரியனும் உதயமாகிவிட்டான். என் நாதனும் வந்துவிடுவார்" என்றெண்ணி மகிழ்ந்தாளவள்.

கோடி சூரியப் பிரகாசத்துடன் ஆசிரம வாயிலில் நின்றுகொண்டிருந்தாள் சீதை ரகுராமனை எதிர்கொண்டழைப்பதற்காக. 'ஆசிரம வாயிலே கிழக்கு, தேவியின் முகமே சூரியன்' என்றெண்ணி அவளை நோக்கி மகிழ்ந்து தலையசைத்தன எண்ணற்ற சூரியகாந்திகள். நித்திரையினால் கலைந்து புரண்டு, மென் காற்றிலசைந்து விளையாடும் அவள் கேசக் குவியலைக் கண்டு, கார்மேகத்தைக்கண்டுவிட்ட களிப்புடன் மயிலினங்கள் தோகை விரித்துக் களி நடனம் புரிந்தன. அவைகளின் களிப்பில் கலந்துகொண்ட ஜானகியின் சுந்தரப் புன்னகையைக் கண்டு மதிமயக்கம் கொண்ட சோலைப் பசுங்கிளிகள் கானகத்துக் கோகிலங்களுடன் குலவி மகிழ்ந்தன.

ஆசிரமத்தைச் சுற்றிலும் அன்று அபூர்வ எழில் மருவி நின்றது. தேன் சிந்தும் நறுமலர்கள் விரிந்தும் விரியாமலும் வண்டினங்களைக் கவர்ந்துகொண்டிருந்தன. மொட்டவிழும் அம்மலரொளியைக் கண்ணுற்ற வைதேகி, தன் நாயகனின் இதழ்க்கடையிலரும்பும் புன்முறுவலின் நினைவு பெற்றவளாய் கலீரென நகைத்தாள். பல வர்ணப் புஷ்பக் கொத்துகளின் சுமை தாங்காது, காற்றில் அசைந்தாடிற்று இளங்கொடியொன்று. பச்சை ரத்னக் கல்லும், பவழமும் மாறி மாறிக் கோத்த சரம்போன்று கனிந்தும் கனியாமலுமிருந்த குலைகளைத் தாங்கமுடியாமல் தவித்து நின்றன கதலி வாழைகள். பொங்கி வழியும் தன் சௌந்தரியத்தின் பாரம் தாங்கமாட்டாது இப்படித்தான் மென் நடை நடக்கிறாள் சீதை" என்றெண்ணியவாறே வந்து நின்றான் ஸ்ரீராமசந்திரன். பசுவைக் கண்ட கன்றுபோலத் துள்ளியோடித் தன் பதியையணுகினாள் வைதேகி.

"நாதா! கானகத்தின் ஒப்பிலா வனப்பைக் கண் குளிரக் காண்பதற்கு அடியாளையும் அழைத்துச்செல்லலாகாதா?"

"சீதா! அயர்ந்து நித்திரை புரியும் உன்னையெழுப்ப மனமில்லாதவனாய்த்தான் தனி

யாகவே சென்றேன். ஆம் என்றுமிலா வனப்புடன்தான் கானகம் காட்சியளிக்கிறது.''

"ரகுநாதா! இத்தனை நேரம் காட்டில் என்னதான் பார்த்துக் கொண்டிருந்தீர்கள்?''

"தேவி! சீக்கிரமாகவேதான் திரும்பிக் கொண்டிருந்தேன். ஆனால் வரும் வழியில் நீ தினந் தோறும் நீராடச் செல்லும் பொய்கையினருகில் ஒரு காட்சியைக் கண்ணுற்று, மெய்மறந்து நின்றுவிட்டேன்.''

"ஆர்ய புத்ரா! அக்காட்சி யாதென்று அறியலாமோ?''

"சீதா! அக்காட்சி வேறொன்றுமில்லை. உன்னைப்போன்ற ஒரு பெண்ணைத்தான் பார்த்தேன். தேவி! அம்மோகினியைப்பார்க்கும பொழுது உன் நினைவாகவே இருந்தேன். இப்பொழுது உன்னைப் பார்க்கும்பொழுதோ அவளைப் பார்ப்பதுபோலவே யிருக்கிறது. உங்களிடையே எவ்வளவு ஒற்றுமை!''

தேவியின் மனம் துணுக்குற்றது. "என்ன! ஒரு பெண்ணைப் பார்த்து மதிமயங்கியா நின்றுவிட்டார் என் ராகவன்? ரகுவம்சதிலகனாகிய என் நாதனின் மனம் என்றுமில்லாமல் இன்று ஏன் பேதலித்து விட்டது? ஏக பத்னி விரதத்தை அனுஷ்டிக்கும் புருஷோத்தமராயிற்றே என் ராமசந்திரன்!'' என எண்ணலுற்றாள். கபடமற்ற சீதையின் உள்ளத்தில் சஞ்சலம் குடிகொணடு விட்டது. விம்மலுடன், "நாதா! அவ்வனிதை யார்?'' என வினவினாள்.

'மைதிலி! 'நீயாரம்மா' என்று அவளிடம் கேட்டேன். 'என்னைக் குமுதம் என்று அழைப்பார்கள்' என்றாளவள். 'உனக்குப் பொருத்தமான இனிய பெயர்தான்' என்றேன். நாணத்தினால் முகம் சிவக்க வெட்கித் தலைகுனிந்தாளவள்' அவள் வரலாற்றைக் கேட்டேன். அவள் சொன்னாள்:

"விதியின் கொடுமையால், வறுமையென்கிற சேற்றில் பிறந்த குழந்தையவள். அடர்ந்து சுருண்டகேசம், பொன்னிறமேனி, செவ்விதழ்கள். இவைகள்தான் அவள் ஆபரணங்கள். இரு கருநீலக் குளங்கள், இவைகளில் துள்ளி விளையாடும் இரு கயல்கள்—இவைகளே அவள் விழிகள். மெய்சிலிர்க்கவைக்கும் ஓர் மென்நகை, அப்பொழுது மதிமயக்கம் தரும் வண்ணம் சிவந்து குழியும் அவ்விரு ரோஜாக் கன்னங்கள். அவள் தளர் நடையிலும், தளிர்க் கரங்களின் அணைப்பிலும், அவளளித்த செவ்விதழமுதத்தின் வெறியிலுமே, சிதைந்த தன் நெஞ்சைத் தேற்றிக்கொண்டாள் அவள் தாய்.

"ஏழ்மையில் பிறந்தவள் துர்ப்பாக்கியமென்னும் இருளில் வளர்ந்தாள். காலம் கடிதே சென்றது. நள்ளிரவில் மலரும் காட்டு மல்லிகை போன்று, வறுமைச் சின்னங்களிடையே மங்கைப் பருவத்தையடைந்து நின்றாளவள். வசந்த காலத்து விருக்ஷங்கள் புஷ்பக் கொத்துக்களின் சுமை தாங்காது மென்காற்றிலசைந்தாடுவதுபோல், தன் அவயவங்களில் களிநடனம் புரியும் எழிலைத்தாங்கவல்லாளாய், தன் வாழ்க்கைப் பாதையில் அன்னம்போல் அசைந்து சென்றுகொண்டிருந்தாள்.

"துள்ளி விளையாடும் யௌவனத்தினால் ஒருவிதச் செருக்கு; கொஞ்சி விளையாடும் சௌந்தரியத்தினால் ஓர் பெமிதம், ஏழ்மையிலும் ஓர் இன்பம், வசந்தகாலத்துப் புள்ளினங்களைப்போன்ற குதூகலம், இவ்வித உணர்ச்சிகளே பொங்கி வழிந்தன மாசற்ற அவள் இதயத்தினின்றும்.

"இந்நிலையில் பார்த்துவிட்டான் அந்த ரூபராணியை பாஸ்கரன் என்ற ஓர் துஷ்டன். அவள்மனதை ஒரே நொடியில் கொள்ளை கொண்டு விட்டான் கூரிய தன் பாணங்களின் சக்தியால். தினந்தோறும் அவன் வரவுக்காகவே ஏங்கி நிற்பாள் அப்பேதை. அவன் காதலொன்றையே கருத்தில் கொண்டிருந்த காரிகைக்குக் காலம் சென்றதே தெரியவில்லை. மகிழ்ச்சியுடன் அவர்கள் மருவிக் களித்த நாட்களெத்தினையோ!

"திடீரென மீண்டும் துர்ப்பாக்கியம் அவளையணுகி விட்டது. மோகினி அவதரித்தது



"என்னடா. பஜனைக்கு மணியாகலையா. இன்னும் படுத்துண்டிருக்கியே...''

"அடபோடா! வாவா குளிர் தாங்கமுடியலே! இனிமே, அடுத்தாத்து நடராஜுவை நம்ப பங்க பொங்கலே கையோடே வாங்கிண்டுவர சொல்லிட்டேன்!''

போன்று வந்துவிட்டாள் ஒரு மின்னற்கொடியாள் இக்குழந்தையின் வாழ்க்கையைக் குலைப்பதற்காக. பாஸ்கரனைக் கவர்ந்துசென்றாள், அவன் முகத்துடன் முகம் பதித்து, தன் கருங்கேசம் நாற்திசையிலும் புரண்டு இப்பூமண்டலத்தையே இருளவைக்க, அவன் சுந்தர முகத்தை மறைத்துவிட்டாள் குமுதத்தின் பார்வையினின்றும்.

“அச்சிறுமியின் வாழ்க்கை இருண்டுவிட்டது. கூரிய தன் விழிகளால் சுற்றும் நோக்கினாளவள். தன்னைச்சூழ்ந்த வறுமையை நனகுணார்ந்தவளாய் மனம் நொந்தாள். நித்திரையின்றி, அவள் கண்ணீர் பெருக்கிய நீளிரவு எத்தனையோ! விம்மலுக்கும் பெருமூச்சுக்குமிடையே கடத்திய நாட்களெத்தனையோ! “இரவு நீடித்து நிற்காதடி குழந்தாய். இருளுக்குப்பின் ஒளி வந்தே தீரும்” என அவள் தாய் சமாதானம் கூறுவாள்.

“இருள் நீடிக்கவில்லை. தேனுண்ட வண்டினங்கள் மலரை விட்டுப்பறந்திடுவதே போல், மின்னற்கொடியாகிய மோகனாங்கியும் பாஸ்கரனின் காதலையுண்டு சலித்தவளாய் நீங்கிவிட்டாள். விரிசுடர்க் கதிரவனும் விடுதலையடைந்தவனாய், தன் ஜோதிக் கிரணங்களாகிய காதலம்புகளை மீண்டும் குமுதத்தின் மீது எய்தான். வாடும் அவள் யௌவனம் புத்துயிர் பெற்றெழுந்தது. சோகத்திலுறங்கிய சௌந்தரியம் தளிர்த்துச் செழித்தது. அவள் வறுமையைத் தன் செல்வத்தினால் மூடிப் புதைத்துவிட்டானவன். அவள் அன்பையும் அழகையும் பருகி மகிழ்ந்தான். அவன் இனிய அன்பில் தன் நீண்டநாள் சோகத்தையும் ஏழ்மையையும், தன்னையுமே மறந்துவிட்டாள் அப்பேதை.

“ஜானகீ! இந்நிலையில்தான் நான் அவளைக்கண்டேன். மெய்மறந்து அவ்விடம் சற்றே நின்றுவிட்டேன்” எனக் கூறி முடித்தான் ராகவன்.

அவதார புருஷனாகிய தாரக ராமனையே சந்தேகித்துவிட்டாள் தேவி. நாயகன் கூறியதை அரைகுறையாகவே கேட்ட நாயகியின் மனம் கோபத்தினால் துடித்தது.

திருமகளின் அவதாரமாகிய சுந்தரி பெருங்கோபம் கொண்டு விட்டாள். அவள் முகம் சிவந்தது. பார்வை இருண்டது. மின் வெட்டுப் போல பல் திசைகளிலும் துள்ளின அக்கருவிழிகள். வில்லையொத்த புருவங்கள் நெளிந்தன. செவ்விதழ்கள் துடித்தன.

உடனே அண்ட பேரண்டங்களெல்லாம் கிடுகிடுத்தன! கருமேகக் குவியல்கள் திரண்டு வந்தன! புவனமே காரிருளினால் மூடப்பட்டது! நெளிந்து செல்லும் மின்னற்கொடிகள் மேகக் கூட்டங்களைப் பிளந்து சென்று வானைத்துளைத்தன! சராசரங்களனைத்தையுமே அழித்து விடுவதுபோன்ற பேரொலியுடன் முழங்கின வானிடைத் தோன்றிய இடிகள்! வைதேகியின் நெஞ்சினின்றும் சீறியெழுந்த பெருமூச்சொன்று சண்டமாருதத்தைக் கிளப்பிவிட்டது! “ஓ” வென்றலறினான் வாயுதேவன்! தாவரவர்க்கங்கள நடு நடுங்கித் தலைசாய்த்தன! கொந்தளிக்கும் கடல்களிலெல்லாம் சுருளலைகள் சீற்றமுடன் குமுறின! பாறைகளும் மலைகளும் வெடித்து அனலைக் கக்கின! பூமி வெடித்தது. அதனுள்ளிருந்து வெள்ளம் கடல் போல் பொங்கியெழுந்து கரை புரண்டோடியது!

எங்கும் இருள்! எங்கும் பேரிரைச்சல்! எங்கும் பயங்கரம்! ஆனால் ரகுவீரனின் இதழ்க் கடையில் மட்டும் ஓர் இளநகையரும்பி நின்றது. “தேவி! சீதா! கோபம்கொண்ட நின் திருமுகம் பன்மடங்கு எழிலுடனேயே பிரகாசிக்கின்றது. உன் இதயத்தில் கோபக்கனலையெழுப்பிவிட்டு உன் மதிவதனத்தின் அதி சௌந்தரியத்தைக் காணவேண்டுமென எத்தனை தினங்களாகவோ ஆவல் கொண்டிருந்தேன், இன்று அது பூர்த்தியாயிற்று” என நகைத்தான்.

மிதிலை மின்னாளின் மனம் வெதும்பியது. அவள் திருக்கண்களிருந்து வெளிப்பட்டன இரு நீர்த்துளிகள். வானும் புவியும் கண்ணீர் விட்டழுவதுபோலச் சொரிந்தது ஓயா மாரி. அயோத்திமா நகரின் தவப்புதல்வன் மனம் கலங்கி விட்டான்.

"ஜனக புத்ரீ! என்ன விபரீதம்! உன சோகமும் கோபமும் அண்டங்களனைத்துமே அழித்து விடும் போலிருக்கின்றனவே! மைதிலீ! என்னுடன் வந்து நீயே பார்த்துவிடு அந்த ரூபராணியை, உன் ஐயம் தீர்ந்துவிடும்" என மனம் குழைந்து கூறினான் தசரத சுதன்.

அண்ணல் முன்னே செல்ல அவனை மௌனத்துடன் பின்தொடர்ந்தாள் சீதை. மாரியும், அழுது ஓய்ந்த பிள்ளைபோல விம்மி விம்மித் தணிந்தது.

பச்சைமாமலையும் கோடி சூரியனும்போல வந்து நின்றார்கள் பொய்கையருகினில் எம்பெருமானும் பத்னியும் .

"ராணீ! உன் கோபத்தினால் மீண்டும் அந்த சுகுமாரியின் வாழ்வைக் குலைத்துவிட்டாயே" எனப் பகன்றான் ராமச்சந்திரன்.

பதை பதைத்தவளாய் 'நாதா! என்ன சொல்கிறீர்கள்? எங்கே உங்கள் மதியை மயக்கிய மோகனாங்கி', என்றாள் வைதேகி.

'அதோ பார்' எனச் சுட்டிக் காட்டினான் ஸ்ரீராமன் இதழ்கள் குவிந்து துவண்டு நின்றது ஓர் செந்தாமரை மலர். அதன் செவ்விதழ்களினின்றும் மழைத் துளிகள் சிந்தின.

ஜனகனின் செல்வி, அச் செங்கமலத்தின் காதலனெங்கேயென நாற்திசையிலும் பரந்தவானத்தை நோக்கினாள். சீதா! உன் கோபத்தினால் மறைந்துவிட்டான் பகலவன். இத்தாமரைச் செல்வியோ உன் திருமுகத்தைக் கண்டதுமே, தன் காதலன் வந்து விட்டானென்றெண்ணி, அகமகிழ்ந்து, மலருகிறாள் பார்" என்றான் ராமன்.

சீதை கலகல வென நகைத்தாள். மறுகணமே, மேகத்திரைகளை விலக்கிக்கொண்டும், பொன்னை வாரியிறைத்துக் கொண்டும் வந்தான் தினகரன் தன் இளம் காதலியைத் தேடிக் கொண்டு.

கமலத்தை யணைத்துக்கொண்டான் கதிரவன். சீர்பெற்ற சித்ரகூடச் சிகரத்தை அணைத்து முத்தமிட்டது வானவில் தோற்றத்துடன் கூடிய வெள்ளி வானம். அண்ணலின் காதற் திருமார்பில் புதைத்துக் கொண்டாள் தன் கமலத் திருமுகத்தை ஜோதி வடிவாகிய சீதை.



சென்னை ஸங்கீத வித்வத் சபையின் ஆதரவில் சென்ற வாரத்தோடு பூர்த்தியடைந்த கச்சேரிகளில், ஒன்றிரண்டைத்தவிர பெரும்பான்மையும் "அமர்க்களம்," 'பிரமாதம்" என்றெல்லாம் சொல்லி குதூகலிக்கும்படியான நிலைமையை உண்டுபண்ணாமல் சாதாரணப் போக்கிலேயே அமைந்திருந்தன. ஆனால் நிபுணர்கள் கமிட்டியில் நடந்த விவாதங்களில் ஒரு புதுமை உண்டு. வட இந்தியப் பிரமுகர்கள் நிபுணர் கமிட்டி சர்ச்சைகளில் ஈடுபட்டு அநேகம் உபயோகமான விஷயங்களை உணர்த்தியிருக்கின்றனர். இது தென்னிந்திய ஸங்கீதக்காரர்களுக்கும், வட இந்திய 'வஸ்தாது'களுக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தித் தர உதவக்கூடும். மகாநாட்டின் தலைவர் பகலில் நடந்த சர்ச்சைகளில் பிரசன்னமாயிருந்தார். மாலையில் நடைபெற்ற கச்சேரிகள் பல தலைவரின்றியே நடந்தன.

ஸ்ரீ. ஜி. என். பி.

டிஸம்பர் 27-ந் தேதியன்று ஸ்ரீ. ஜி. என். பி. கச்சேரி. ஸ்ரீமான்கள் ராஜமாணிக்கம்—பிடில்; பாலக்காடு மணி ஐயர்-மிருதங்கம். கச்சேரி ரஞ்சகமாக அனைவருக்கும் திருப்திதரும்படியிருக்கவேண்டுமென்ற சிரத்தையும், கலையும் இவர் பாடிய ஒவ்வொரு கீர்த்தனையிலும், ராக ஆலாபனையிலும் தொனித்த வண்ணமிருந்தது. சாரீரம் அன்று சபை நிறைந்து, பூரண காத்திரத்துடன் ஒலித்ததுடன் கீர்த்தனைகளும், ஸ்வரப்பிரஸ்தாரமும் கவர்ச்சியோடும், விறுவிறுப்புடனும் விளங்கின.

விரிவான ஆலாபனைக்குட்பட்ட ராகங்கள் பைரவி, கல்யாணி, கனராகமாக எடுத்துக்கொண்ட காம்போஜி இவற்றையெல்லாம் இவர் தமது வழக்கமான நாக்ரிகச் சிறப்போடு அமைத்துக் கட்டுப்பாட்டுடன் பாடினார். ஆனால் காம்போஜி ராக ஆலாபனையின் பிற்பகுதியில் சாரீரத்தின் ஓட்டம் பிருகாமயமாக மாறியது. தாரஸ்தாயி ஸஞ்சாரத்தின்போது அவர் செய்த வேலைப்பாடுகளெல்லாம் குழப்பமின்றி, சந்தடியில்லாமல் செவியுற முடிந்தது. ரஸிகர்கள் 'கை அடக்கமே' காரணம். பாடிய கீர்த்தனைகளுக்குள் ஹிந்தோள உருப்படி "ஸாமஜவரகமனா" ரொம்ப அழகு. இதில் அவர் புகுத்திப் பங்கீடு செய்து வைத்துள்ள ஸங்கதிகள் பாவச் செழிப்போடிருந்ததைக் குறிப்பிடவேண்டும். பல்லவியும், அதை அடுத்த ராகமாலிகையாக அடாணா, ஸிந்துபைரவியும் மிதத்தோடும், களையோடும் விளங்கின. ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை, தமது தலைமைப் பிரசங்கத்தில் என்ன சொன்னாரோ அதையே பக்கவாத்தியமாக வாசிக்கும் இச் சந்தர்ப்பத்தில் அனுஷ்டித்துக் காட்டினார்.

ஸ்ரீமான் மணி ஐயர் பூர்ண உற்சாகத்தோடு வாசித்தார். இக்கச்சேரியில் இவர் வாசித்த தனி ஆவர்[illegible]ர் இதர கச்சேரிகளில் வாசித்ததைவிடத் 'தனி'மையானதுதான்.



ஸ்ரீ ஜி. என். பி.

ஸ்ரீ சிவானந்தம் வீணை

அன்றிரவு 9–15 மணிக்கு ஸ்ரீமான் கே. பி. சிவானந்தம் வீணைக் கச்சேரி. இவர் வாசிப்பில் மென்மையும், மெருகும் விசேஷமாக வெளிப்படுவதுண்டு. ஆனால் இக்கச்சேரி சம்பந்தப்பட்டமட்டில் வாசிப்பு சர்வ சாதாரணமாகவே யிருந்தது. ரொம்ப விசேஷங்களையெல்லாம் எதிர்பார்த்துக்கொண்டு வந்தவர்களுக்கு ஏமாற்றமாக விருந்திருக்கும். ஆயினும் இவர் வாசித்த நீலாம்பரி, கனராகமான கல்யாணி இரண்டும் தரம். நாதம் நலிவின்றி சுத்தமாக விருக்கிறது

ஸ்ரீ அரியக்குடி

டிஸம்பர் 28-ந் தேதி மாலை 5 மணிக்கு காயக சிகாமணி அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்கார், ஸ்ரீமான்கள், பாபா பிடிலோடும், பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர்—மிருதங்கத்தோடும் கச்சேரி செய்தார். சபையோரைப் பெரிதும் உற்சாகப்படுத்தியது கச்சேரி.

ஸ்ரீ ஐயங்கார் கச்சேரியைப்பற்றிக் குறிப்பிட்டுப் பேச நேரும் சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் அவருடைய ஸங்கீத நடையின் விசேஷம், அவருக்குள்ள ஆற்றல், அனுபவம் முதலியவற்றையெல்லாம் பற்றி ஒரு அத்தியாயம் சொல்லிக்கொண்டே இவருடைய கச்சேரிகளைக் கேட்டானந்திக்கிறோம். இந்தக் கச்சேரி சம்பந்தப்பட்டவரையில், வயதின் ஏற்றத்தை அலட்சியம் செய்து, வாலிப முறுக்குடனேயே அவர் பாடினார். ஆனால் வயது அவரை அலட்சியம் செய்து விடவில்லை. சாரீரத்திலும் அது தன் வேலையை ஓரளவு காட்டியேயிருக்கிறது.

கச்சேரியில் போட்டிருந்த நிகழ்ச்சியை ஆதியோடந்தமாகப் பின்பற்றியவர்களில் ஸ்ரீ ஐயங்காரும் ஒருவர். ஆனந்த பைரவி உருப்படி 'மரிவேரதி'யின் சிட்டை ஸ்வரத்தை புது அழகுடன் பாடியதும், சங்கராபரண உருப்படியின் சரணத்தில் செய்த நிரவலும் குறிப்பிடத்தக்கவை.

தோடிராக ஆலாபனை ரொம்ப விரிவாக விருந்தது. இந்தக் கட்டத்தில் ஸ்ரீ ஐயங்கார் தமது சாரீரத்தின் எல்லையையே காட்டிவிடுவதென்ற உறுதியோடிருந்தார் என்பது புலனாயிற்று. குறஞ்சி ராகக் கீர்த்தனை லட்சணமாக விளங்கிற்று.

பைரவி கனராகம்; தானம்; பல்லவி. லய நுட்பங்கள் நிறைந்த பல்லவியை வெகு சுலபமாகவும், லாகவமாயும் பாடியது விசேஷம்.



ஸ்ரீ அரியக்குடி

ஸ்ரீ திலீப் சந்திர வேதி

இரவு 9-15 மணிக்கு ஹிந்துஸ்தானி ஸங்கீதம். லக்ஷ்மணபுரியிலிருந்து வந்த இப் பாடகர் கச்சேரி தினத்தன்று அணிந்திருந்த உடுப்பு. முக்கியமாக அவர் கட்டியிருந்த கிறுக்கு முண்டாசு மேடையில் அவர் அவ்வப்போது பாட்டோடு செய்துவந்த சிறு சிறு ஸங்கீத உபந்நியாசங்கள் இவற்றையெல்லாம் கவனித்தவர்களுக்கு இசை ரஸத்தைவிட ஹாஸ்ய ரஸமே மேலோங்கிற்று. ரொம்ப நன்றாகப் பாடக்கூடியவரென்றும், வெகு தூரம் பிரயாணம்செய்து சென்னை வந்து களைத்திருப்பதால் அவ்வளவாக சோபிக்கவில்லையென்றும் என்னென்னவோ, கச்சேரிக்கு சம்பந்தமில்லாத தகவல்களையெல்லாம் ஒருவருக்கொருவர் சொல்லிப் பிரலாபித்துக்கொண்டு பெரும்பான்மையோர் வெளியேறினர். விடாப்பிடியாக என்னதான் நடக்கிறதென்று பார்த்து விட முடிவு செய்யக் காத்திருந்தவர்களுக்கு நேரிட்ட அனுபவமும் அவ்வளவு மகிழ்ச்சிகரமாயில்லை. பிராப்தம் அவ்வளவுதான்!

இரு நடனங்கள்

இவ்வருஷ வித்வத் ஸபையில் "கால வித்தியாச"த்துடன் நடந்த பரதநாட்டியக் கச்சேரிகள் இரண்டு. ஒன்று மாலை 5-முதல் 8 மணி வரை. மற்றொன்று இரவு 9-15 முதல் 11-30 மணி வரை.

டிஸம்பர் 29-ந்தேதியன்று குமாரி கமலாவின் பரத நாட்டியம். நாட்டியங்களுக்குஇப்போது ஏற்பட்டிருக்கும் 'மவுஸ்' இவ்வளவு அவ்வளவல்ல இது சீரான முறையில் சாஸ்திரத்தையொட்டியேதான் பெரும்பாலும் நடக்கிறதாவென்பது வேறு விஷயம். ஆனால் இக்கலையில் ஏற்பட்டிருக்கும் உற்சாகம் மட்டும் அபாரமாயிருக்கிறது. குமாரி கமலாவின் இந்த நிகழ்ச்சி பத்திரிகைக்காரர்கள் சம்பந்தப்பட்டவரையில் அநேகமாக ஒரே கறுப்பாகத்தான் இருந்தது! நாட்டிய மேடையின் இடப்புறக் கோடியில் அவர்களுக்கு கொடுத்த இடத்திலிருந்துதான் அவர்கள் இதைக்காணவேண்டியிருந்தது. எனவே அவர்கள் அடிக்கடி கண்டதெல்லாம் கறுப்புப் படுதாவைத்தான்! குமாரி கமலா மேடையின் முன்னணிக்குச் சென்று அபினயிக்கும்போது அவருடைய சாயை பின்னணியிலிருந்த கறுப்புத் திரையில் விழுவதுதான் பத்திரிகைக்காரர்களுக்குத் தெரிந்தது! ஆகவே பொம்மலாட்டத்தைப் பார்த்த உணர்ச்சியையே இந்த நிகழ்ச்சி உண்டு பண்ணியது. சபை மத்தியில் இடம்பெற்ற ரஸிகர்கள் அவ்வப்போது செய்துவந்த கரகோஷத்திலிருந்து நடனம் நன்றாக விருந்திருக்குமென்று ஊகிக்க நேர்ந்தது.

ஜனவரி 1-ந்தேதி பந்தணை நல்லூர் முறையில் பயிற்சி பெற்ற ஸ்ரீமதி கௌஸல்யாவின் நடனத்தைக்காண வசதி ஏற்பட்டிருந்தது. இரவு 9-மணிக்கு நடந்த கச்சேரியல்லவா? மிக்க நேர்மையோடு கற்ற வித்தையை திறமையோடும், லாகவமாகவும் இவர் பயன்படுத்தினார். வெவ்வேறு உணர்ச்சி பாவங்களைச் சுலபமாக வெளியிடும் நுண்ணறிவையும் பெற்றிருக்கிறார்.

கானக்ஷேபம்!

இது அச்சுப்பிழையல்ல! கானக்ஷேபமேதான்! பிரும்மஸ்ரீ எம்பார் ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் 29-ந் தேதி இரவு 9-15 மணிக்குச் செய்த "பாமா பரிணயம்" ஹரி கதையை காலட்சேபம் என்று சொல்வதைவிட 'கானக்ஷேபம்' என்று சொல்வதுதான் பொருத்தம். ஸ்ரீ விஜயராகவாச்சாரியார் அன்று தமது கதையிடையே புகுத்திப் பாடிய அபூர்வ ராகங்கள் ஒவ்வொன்றும் முதல்தரமாயிருந்தன. சுக பாவமும், ராக பாவமும் அவற்றில் ததும்பி நின்றன. நல்ல வித்வத் அம்சங்கள் நிரம்பப் பெற்றவரென்பதைச் சந்தேகத்துக்கிடமின்றி இவர் நிரூபித்தார். அவர் பாடிய சாரங்கா, பைரவி, ரீதிகௌளை, குந்தலவராளி போன்றவை இணையில்லாதிருந்தன.

ஹரிகதைகளுக்கு இருந்து வந்த செல்வாக்கு என்ன காரணத்தாலோ சமீப வருஷங்களாக இல்லாமற் போய்விட்டது. திருப்பயணம் ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்

திரியார், ஸ்ரீ காயக சிகாமணி முத்தைய பாகவதர் போன்ற பிரபல ஞானஸ்தர்கள் ஹரிகதையினாலேயே புகழைத் தேடிக்கொண்டார்கள். அந்தக் சியாதியைப் படைத்த ஹரிகதை இன்று எந்த அளவு ஆதரவுக்காளாக வேண்டுமோ அந்த அளவு ஆதரவைப் பெறவில்லை. இதில் ருசியை ஊட்டி, சிரத்தை எடுத்துக் கொண்டால் நாட்டியக் கலையில் ஏற்பட்டிருக்கும் ஊக்கத்தை, இத்துறையிலும் மலரும்படி செய்யலாம். வித்வத் ஸபையினர் இந்த நிகழ்ச்சியை ஒதுக்காமல் சேர்த்தது உண்மையில் பாராட்டத்தக்கது. அதிக அவகாசம் கொடுத்து ஸ்ரீ விஜயராகவாச்சாரியாரைக் கதை செய்யச் செய்திருந்தால் வெகு உயர்வாயிருந்திருக்குமென்பது திண்ணம்.

மதுரை ஸ்ரீ மணி ஐயர்

கான கலாதர மதுரை ஸ்ரீ மணி ஐயர் டிஸம்பர் 30-ந் தேதி மாலை 5-மணிக்கு கச்சேரி செய்தார். மாயவரம் ஸ்ரீ கோவிந்தராஜப் பிள்ளை-பிடில்; பழனி ஸ்ரீ சுப்பிரமண்யப்பிள்ளை-மிருதங்கம்.

கச்சேரிக்கு 2, 3, தினங்களுக்கு முன்னதாக தேக அசௌகரிய முற்றிருந்தகையோடு இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டதால் அவரது பாட்டில் பொதுவாக ஓரளவு அயர்ச்சி தென்பட்டது, ஆயினும் வழக்கமாகவுள்ள உற்சாகம் குன்றுமலேயே கீர்த்தனைகளையும் பாடி ஸ்வரப்பிரஸ்தாபங்களையும் செய்து வந்தார். நிகழ்ச்சி

ஸ்ரீ மதுரை மணி ஐயர்

நிரலில் குறிப்பிடாதிருந்தவற்றையும் பாடினார். காம்போஜியில், "காணக்கண்கோடி" என்ற கீர்த்தனை வரவேற்கத் தகுந்த மாறுதலாக விளங்கிற்று. இதை அவர் எப்போதையும்போல் சுவைத்து விரிவுபடுத்தினார்.

கீரவாணி ராகத்தை விஸ்தாரமாக்கி பல்லவியைப் பாடினார். இதையடுத்துப் பாடப் பெற்ற கானடா, இவை பாவத்தோடு அமைந்திருந்தது. ஸ்ரீ கோவிந்த ராஜப் பிள்ளை, பாடகரின் ஸங்கீதப் பண்பை அறிந்தவராதலின் அனுசரணையைப்பற்றிச் சொல்லத் தேவையில்லை. பழனி ஸ்ரீ சுப்பிரமண்யப்பிள்ளையின் இக்கச்சேரி வாசிப்பில் வெளியான சுகநாதமும், லய விவரமும் விசேஷமாகும்.

ஸ்ரீ நாயுடுகாரு பிடில்

இரவில் நடந்த பிடில் கச்சேரி ஸங்கீத கலாநிதி ஸ்ரீ த்வாரம் ஸ்ரீ நாயுடுகாருவினுடையது. இவருடைய வாசிப்பின் உயர்தர அம்சங்கள் அனைவரும் அறிந்தது தான். இந்தக் கச்சேரியைப் பொறுத்தவரையில், பல்லவிக்குப் போட்டிருந்த கனராகமான காம்போஜியையும் மாற்றிக்கொண்டு தோடியை வாசித்தார். புதுமையாக எதுவும் குறிப்பிட இடமில்லாதிருந்ததென்றாலும் வாசித்த வரையில் திருப்தியைக்கொடுத்தார். பல்லவியை அடுத்து வந்த பியாக், கானடா இவை சுகம்.

விதூஷிகள் தினம்!

டிஸம்பர் 31-ந் தேதியை வித்வத் ஸபையார் விதூஷிகளின் நிகழ்ச்சிக்கென்றே பிரத்யேகமாக ஒதுக்கிவிட்டார்கள்! பிற்பகல் 3-30 மணிக்கு திருப்பத்தூர் ஸ்ரீமதி செல்லம்மாள் கச்சேரி நடந்தது. இவருக்கு மெல்லிய சாரீரம். அதை அவர் முடிந்தவரை சாதகப்படுத்த முயன்றிருக்கிறார் என்பது அவர் பாடிய கீர்த்தனைகள் ருசுப்பித்தன. காம்போஜி உருப்படிக்கு ஸ்வரம் பாடுகையில் தமது ஞானச் சிறப்பை நன்கு துலங்கச்செய்தார்.

ஸ்ரீமதி பட்டம்மாள்

சகல அம்சங்களிலும் சிறந்து விளங்கிய கச்சேரிகளுள் இவ

ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள்

ருடைய இவ்வருஷ நிகழ்ச்சியும் ஒன்று. ஆணி அறைந்தாற்போல அளவாகவும், கணிப்பாகவும் கீர்த்தனைகளையும் ராகங்களையும் பாடினார். பைரவியிலும், நாயகியிலும் பாடிய கீர்த்தனைகள் மிக்க உயர்தரமாயிருந்தன. நாயகி கீர்த்தனையின் பின்பகுதிகளிலேயே தான் ராகத்தின் பாவத்தை நன்கு செவியுற முடிந்தது. தீட்சதர்க்ருதியான ஸ்ரீ கமலாம்பாவை அவர் அழகுடனும், ஜாக்கிரதையுடனும், பாவச் சிதைவின்றி பாடியது விசேஷமே. தோடி கனராகம். மிதத்தோடு ராகாலாபனை செய்து பல்லவியைப் பாடினார். இவருக்குப் பக்கவாத்தியங்கள் மாறாமல் தொடர்ந்து ஒவ்வொரு கச்சேரியிலும் இடம் பெறுவதால், பாட்டின் போக்கை முன்னுக்கு முன்னதாக நிதானித்துக்கொண்டு அவர்கள் வாசிக்கின்றனர். இருப்பினும் பல்லவியை அடுத்து மிருதங்கக்காரர் சற்று உரம் கொடுத்து வாசித்தார்.

இரவு 9-15 மணிக்கு ஸ்ரீமதிகள் பிருந்தாவும், முக்தாவும் பாடினர். இவர்களிடம் சில அருமையான ஸங்கீத வழிகளும், ஜாவளிகளும், பதங்களும் சிக்கியிருக்கின்றன. ஸ்ரீமதி தனம்மாள் மெருகுதிட்டி வைத்த இவற்றிற்கு கார்டியன்களாக இவ்விரு சகோதரிகளும் இருந்து வருவதால் ரஸிக ஸமாஜத்திலுள்ள ஒரு பெரும் பகுதிக்கு இந்தப் பாட்டில் தீவிர சிரத்தை. பிராசீன சம்பிரதாய அமைப்புகள் இப்பாட்டில் நலியாமலிருப்பதே காரணம். கச்சேரியும் அவர்கள் திருப்தியைக் கவரும் வண்ணமே அமைந்தது. ஆரம்பத்தில் சற்று

சுருதி சிரமமிருந்தாலும் பின்னர் சரியாகிவிட்டது.

ஸ்ரீ பாலசுப்பிரமண்யம்

1949-ம் வருஷம் ஜனவரி 1-ந் தேதியன்று ஸ்ரீ எஸ் பாலசுப்ரமண்யம் பாட்டு: ஸ்ரீ மரேல்லா கேசவராவ்பிடில், ஸ்ரீ லட்சுமணன் மிருதங்கம். பாடகருக்கு நல்ல பேச்சுக்களும், உதவுபடிகளும் உள்ள பாரியான சாரீரம் இதை இவர் நன்கு சிறக்கப் பயன்படுத்தி பக்குவப்படுத்திக்கொள்வது அனுபவத்தைப் பொறுத்தது என்பது தெளிவு. கனராகமாக எடுத்துக் கொண்ட சங்கராபரணத்தை லட்சணமாகப் பாடினர். ஊக்கத்தோடும், உள் வலிமையுடனும் கீர்த்தனைகளை, வேலைப்பாடுகளுடன் பாட தயார்படுத்திக் கொண்டிருக்கிறர்

ஸ்ரீ ஆலத்தூர் சகோதரர்கள்

ஸ்ரீ ஆலத்தூர் சகோதரர்கள் மாலை 5 மணிக்குப் பாடினர். திருவாலங்காடு சுந்தரேசய்யரவர்கள் பிடில்; ஸ்ரீ ரகு மிருதங்கம். இந்தச் சகோதரர்களுக்குள்ள ஸங்கீத ஒருமைப்பாடும், ஞான விசேஷமும் புதிதாகச் சொல்லவேண்டிய விஷயங்களன்று. மணிரங்கு ராகத்தை அன்று கேட்டவர்களுக்கு சகோதரரில் ஒருவருக்குள்ள ஞானச் செழுமை புலப்பட்டிருக்கும். ஸ்ரீரஞ்சனியில் அவர்கள் பாடிய கீர்த்தனை ரொம்ப அழகானது. ஸ்வரப்பிரஸ்தாரங்களில் ஒரு அலாதியான விறுவிறுப்பும், மிகுவும் கூடிய பாடகர்கள்.

லய விந்நியாச, நுணுக்க வேலைப்பாடுகளெல்லாம் வழக்கம் போல இவர்கள் பாடிய வாசஸ்பதி பல்லவியில் வெளிப்பட்டன. பிலஹரி, கேதாரம் இவற்றில் பாடப்பெற்ற ஸ்வர ஆவர்த்தங்கள் கவர்ச்சியோடிருந்தன.

ஸ்ரீ சுந்தரேசய்யரவர்கள் அழுத்தமாகவும் சுருக்கமாயும் அத்துடன் அற்புதமான சுகநாதம் கொடுத்தும் வாசிக்கக்கூடியவரென்பது தெரிந்த விஷயம். தோடி ராகத்தை அவர் வாசித்து நிறுத்திய முறையொன்றே போதுமெனலாம்

ஸ்ரீ ரகு நல்ல தேர்ந்த கை எனவே கைதேர்ந்த வாசிப்பாக விருந்தது அவரது மிருதங்க கைங்கர்யம்.

ஸ்ரீ மகாராஜபுரம்

ஸங்கீத கலாநிதி மாகாராஜபுரம் ஸ்ரீ விச்வநாதய்யரின் கச்சேரி கடைசி நாளன்று (2-1-49) நடைபெற்றது. இதை இந்த ஸிரீஸின் கிரீடமென்று சொல்வது தான் பொருத்தம். இதே இடத்தில் டிஸம்பர் முதற் பகுதியில் ரஸிகரஞ்சனி சபை ஆதரவில் நடைபெற்ற இவரது கச்சேரியை எண்ணி வருந்தும்பிய வர்களுக்கு இந்த நிகழ்ச்சி நஷ்டஈடாக மாத்திரமின்றி ஒரு பெரும் புதையலே கிடைத்ததற்கு ஒப்பாக விளங்கிற்று.

மாஸ்டர் ஸ்ரீ கிருஷ்ணன் பிடிலோடும், பழனி ஸ்ரீ சுப்ரமண்யப் பிள்ளையவர்கள் மிருதங்கத்துடனும் நடந்த இக்கச்சேரியில் இன்ப ரஸமாகப் பெருக்கெடுத்த ஆரபியைச் சொல்வதா? அல்லது அருவியைப் போல பிரவகித்த மோகனத்தைக் குறிப்பிடுவதா? எங்கேயோ வான வீதியில் கந்தர்வ நாதம் ஸஞ்சரிப்பதுபோன்ற உணர்வை உண்டுபண்ணிய முகாரி ராகம், கீர்த்தனை இவற்றைப்பற்றித்தான் தெரிவிப்பதா? இவை ஒவ்வொன்றும் வர்ணனைக்கப்பால் போன விஷயங்கள். ஸ்ரீ மகாராஜபுரத்தின் சாரீரம் இரவு 7-மணி முதல் இழைந்து குழைந்து அமோகமான பேச்சுக்களுடன் இயங்கியது நாதபாவமும் நயபாவமும் ஒன்றோடொன்றையொன்று மிஞ்சின. தவிர்க்கமுடியாதபடி இப்பாடு டன் ஒட்டிக்கொண்டிருக்கும் சில அதட்டல்களும் உருட்டல்களும் இடம்பெற்றனவென்றாலும்

ஸ்ரீ மகாராஜபுரம்.

அவை சொற்பமே. அன்று பாடிய புன்னுகவராளிக்ருதியை இன்னும் அழகு கொடுத்து இவர் பாடுவதுண்டு. ஆனுல் இது போதுமென்ற எண்ணம்போலும்.

கல்யாணியில் பல்லவி. ராகத்தை ரொம்ப விஸ்தாரப்படுத்தாமல், பல்லவியையும் சுருக்கமாக—ரத்தினம்போல் ஜொலித்ததால் ரத்தினச் சுருக்கமாக என்றுகூடச் சொல்லலாம்—பாடி சுமார் 20 நிமிஷம்வரை ச்லோகங்களை ராகமாலிகையாகப் பாடினர். இவற்றில் நாதநாமக்கிரியா, ஹம்ஸாநந்தம், ஸிந்துபைரவி, தெம்மாங்கு ஸ்வரூபம் தெரியும்படி செய்த செஞ்சுருட்டி, வீணையிலுள்ள நயம் தொனித்த சுருட்டி இவை ரொம்ப உயர்வானவை. மொத்தத்தில் கடைசியில் நடந்த முதல்தர நிகழ்ச்சி இது.

ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளை

திருவாவடுதுறை ஆதீன வித்வான் ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையின் நாதஸ்வரக்கச்சேரி இரவு 9-15 மணிக்கு மாலையில் துவங்கி நடந்த கச்சேரிக்கிணையாக இவரது வாசிப்பும் தொடர்ந்து வந்தது விசேஷமாகும். நல்ல அழகான மனித சாரீரத்திலுள்ள கமகங்கள், உதவுபடிகள் முதலிய சிறப்புக்களெல்லாம் வாத்தியத்தில் படியச்செய்து கூடியவரையில் வாய் பாட்டுக்குஒப்பாகவிருக்கும் பக்குவமுள்ள குளிர்ச்சியான ஒலி ஸ்ரீ ராஜரத்தினம் பிள்ளையின் வாசிப்பில் செவியுறுகிறோம். முக்கியமாக அவர் மந்திரஸ்தாயியில் ஸஞ்சரிக்கும்போது பாடுவதுபோன்றே தானிருக்கிறது. அன்று அவர் வாசித்த பைரவி, தோடி, தர்பார், கல்யாணி இவைகளனைத்திலும் தெளிவும், பூரிப்பும், ராகபாவமும், விச்ராந்தியோடு வெளிப்பட்டன. தோடி முதல் தரம் கீர்த்தனைகளையெல்லாம் பிடிப்போடும், பிருகாடும், ஏககாலத்தில் தொடர்ச்சியாகக் கேட்டனுபவிக்கும் இச்சந்தர்ப்பம் ரஸிகர்களுக்கு மட்டிலா ஆனந்தத்தை அளித்தது.

நாச்சியார்கோயில் ஸ்ரீ ராகவப் பிள்ளை வாய்ப்பாட்டுக்கச்சேரியில் வாசிக்கும் சிறந்த மிருதங்கக்காரரைப்போல் நாத விவரத்தோடு வாசித்தது குறிப்பிடத்தக்கது.

கதலீபுர நாடகம்



எஸ். ஜே.

அத்தியாயம் 16

ராமசாமிக்கு மாமனார் வீட்டில் பிரமாத உபசாரம் நடந்தது. வெகுநாள் மாப்பிள்ளைக்காகத்தேடிக் கடைசியாகக் கிடைத்த அருமை மாப்பிள்ளையல்லவா? நடேசய்யருக்கு ராமசாமியிடம் அபாரமான பிரியம். ராமசாமி காலந்தவறாமல் சந்தியாவந்தனம் செய்துகொண்டு வந்ததுமட்டும் காரணமல்ல. அவன் மங்களத்தை ஒரு நடமாடும் தெய்வம்போலப் பாவித்தது தான் அதன் காரணம். மங்களத்தைப்பார்க்க வந்த வரன்களெல்லாம் அவளுடைய மேல் வாய்ப்பல்லைப் பிடுங்கச்சொல்லியும், தலைமயிர் வளர சுகேசினி தைலத்தை வாங்கிக் கொடுக்கச் சொல்லியும் சிபார்சு செய்ததெல்லாம் அவருக்கு மறக்கவில்லை. அப்படியிருக்கும்போது தன் பெண்ணை அப்ஸரஸ் என்று நினைத்துக்கொண்டிருக்கும் மாப்பிள்ளையைக் கண்டால் அவனிடம் அவருக்குப் பிரியம் ஏற்படாமல் இருக்க முடியுமா? ராமசாமி நொடிக்கொருதடவை "மங்கா! மங்கா!" என்று கொஞ்சிக் கொஞ்சி அவளை அழைப்பது அவருடைய காதில் இன்பத் தேன் போலப்பாய்ந்தது.

"உங்கள் மருமான் சேகரன் அமெரிக்காவிலிருந்து திரும்பிவிட்டான்!" என்றான் மாமனாரிடம் ராமஸ்வாமி.

"அமெரிக்காவுக்கு அவன் போகவாவது? அந்தமானுயிருக்கும்!" என்று ஒரு திருத்தத்தைப் பிரேரணை செய்தார் நடேசய்யர்.

"அவன் உங்க மருமான் என்று அவன் சொல்லித்தான் தெரியும். ரொம்ப ஆச்சர்யமாக இருந்தது."

"அவனா என் மருமான்? திருடன்! காலாடி! போக்கிரி!"

"அவன் சுபாவத்தில் ரொம்ப நல்லவன்தான். சந்தர்ப்பங்களெல்லாம் அவனுக்கு எதிராக இருந்ததால்தான் இப்படித் திருட்டுப் பட்டம் கட்டிக்கொண்டான்!"

"ராஸ்கல்! கதலீபுரத்திற்கு நான் தற்செயலாய்ப் போயிருந்தபோது அவனைப்பார்த்துவிட்டேன். காலிப்பயல் டிபன் சாப்பிட என்னைக் கூப்பிட்டுவிட்டு ஒரு அறையில் போட்டு என்னைத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு, வைர அட்டிகையைத் திருடிக்கொண்டு போய்விட்டான்!"

தன் மாமனாரை சேகரன் அறைக்குள் வைத்துப் பூட்டியது ராமசாமிக்குப் பெரிய ஹாஸ்யமாக விருந்தாக இருந்தது. ஆனால் பெண்ணைக் கொடுத்தவரிடம்—அதுவும் மங்காவைப்போன்ற ஒரு ஸ்திரீ திலகத்தைப் பெற்றவரிடம்—சிரிக்கலாமா? ரொம்ப கஷ்டப்பட்டு ஹாஸ்ய உணர்ச்சியை அடக்கிக்கொண்டான்.

"ஆனால் மாமா திருடன் அகப்பட்டுவிட்டான். திருடன் யார் தெரியுமா? சேகரனல்ல! போலீஸ் ஸார்ஜெண்டின் சொந்த மருமான்தான்...சேகரன் உங்களைக்கான வெட்கப்பட்டுக்கொண்டு ஓடியிருக்கும்போது நடராஜன்—அதாவது அவருடைய மருமான்—வைர அட்டிகையைத் திருடிக்கொண்டு சந்தர்ப்பத்தைத் தனக்குச் சாதகமாகத் திருப்பிக்கொண்டு சேகரன்மீது பழியைப் போட்டுவிட்டான்!"

"அப்படியா மாப்பிள்ளை? அதிசயமாக இருக்கே! உலகத்தில் மருமான்களெல்லாம் மாமாக்கள் வீட்டில் கன்னம் வைக்க ஆரம்பித்துவிட்டார்கள்போலிருக்கிறது." நடேசய்யருக்குச்



சேகரன் தன் வீட்டில் செய்த வேலை ஞாபகத்துக்கு வந்தது.

"உங்களுக்குத்தெரியுமா, மாப்பிள்ளை? சேகரன் நம்மாத்தில் முன்பு நகையைத் திருடிக் கொண்டு ஓடிப்போன சமாசாரம்? ராஸ்கல்! என் பூணூலை அறுத்துச் சாவியை எடுத்துத் திருடிவிட்டு ஓடினான்......" நடேசய்யர் முகம் கோபத்தினால் சிவந்தது.

நடேசய்யரின் பூணூலைச் சேகரன் அறுத்துக் கொண்டு ஓடுவது ராமசாமிக்கு இணையற்ற ஹாஸ்ய விருந்தாக இருந்தது. சேகரனுடைய நகைச்சுவையை எண்ணி எண்ணி மகிழ்ந்தான். ஆனால் இந்த ஹாஸ்யத்தையும் அவனால் வாய் விட்டுச் சிரித்து அனுபவிக்க முடியவில்லை. மரியாதைக்காகப் பார்க்கவேண்டியிருந்தது.

"ஆனால் மூணேமுக்கால் நாழி பூணூல் இல்லாமல் இருக்கலாம் என்று........"

"அந்தத்தடியனைமட்டும் இப்போது கண்டால்......" என்று கர்ஜித்தார் நடேசய்யர்.

"இல்லை, மாமா! நீங்கள் கோபித்துக்கொள்ளக்கூடாது. சேகரன் இப்போ ரொம்ப மாறிப் போய்விட்டான். தினம் மூணு வேளையும் சந்தியாவந்தனம் செய்யாமல் சாப்பிட வரமாட்டேன் என்கிறான். என்னடா அமெரிக்காவில் கூட இப்படித்தான் சந்தியாவந்தனம் செய்து கொண்டிருந்தாயா என்றுகூட நான் பரிகாசம் பண்ணினேன்"—(ராமசாமி சேகரனுக்காகக் கொஞ்சம் பொய் சொல்லவேண்டியிருந்தது.)

சேகரன் சந்தியாவந்தனம் தவறாமல் செய்கிறான் என்ற விஷயம் நடேசய்யருக்கு வியப்பையளித்தாலும் அவனிடமிருந்த கோபத்தைக் கொஞ்சம் குறைத்தது.

"அப்போ அட்டிகையைச் சேகரன் திருடவில்லையா?"

"சேகரன் திருடவில்லை. ஆனால் அந்தத் திருடனைக் கண்டுபிடித்தவன் சேகரன்தான். நம்ப மங்காவுக்கு வைர அட்டிகை வாங்கலாம்னு நினைச்சேன். இந்தத்திருடன் என்னிடம் அதை விற்கவந்தான். சேகரனிடம் அகப்பட்டுக் கொண்டான்!"

சேகரன் திருடனைக் கண்டுபிடித்த விஷயம் நடேசய்யருக்கு மகிழ்ச்சியூட்டியது. இப்போதுதான் சேகரனை அவர் மானசிகமாகப் புகழ்ந்து கொள்ளவும் ஆரம்பித்தார்.

"நல்ல புத்திசாலிதான்! சந்தேகமில்லை' இருந்தாலும் கோணல் வழியிலே போகிறான்!"

"அதுதான் இல்லை என்கிறேன்! எங்க கோபாலசாமி மாமாவைக் கேளுங்கள், 'சேகரனைப்போல உண்டா, நீயும் இருக்கிறாயே, ராமசாமி!' என்று சொல்லுவார். அவருக்குச் சேகரனிடம் அபார மதிப்பு. அமெரிக்காவில் அவன் அவர்கூட இல்லாவிட்டால் அவருக்குப் பிஸினஸ்ஸே நடந்திருக்காதாம். இங்கிலீஷிலே சண்டமாருதமாகப் பேசுகிறான்!"

"எப்பவுமே அந்தப்பயல் படிப்பில் கெட்டிக்காரன்தான். ஆனால் கொஞ்சம் அதிகப்பிரசங்கி!"

"எங்க கோபாலசாமி மாமாகிட்டே சேகரன் ரொம்ப பவ்யமா நடக்கிறான்னு அவருக்கு அசாத்ய திருப்தி. அவர் உட்கார்ந்தால் இவன் உட்காரமாட்டேன் என்கிறான். இப்படி உண்டோ பைத்தியம்?"

"ஆமாம், ஆமாம்! அந்தப்பயலுக்குக் கொஞ்சம் மரியாதை, மட்டு எல்லாம் உண்டு. இல்லை என்று சொல்லிவிட முடியாது."

"நம்ப மங்காவைப் பற்றி அவன் எவ்வளவு கவலைப்படுகிறான் தெரியுமோ?' 'ஏண்டா மங்கா ஸ்நானம் செய்யவில்லை, என்கிறாயே

அவன் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள். ஊருக்குப்போனவுடன் டாக்டர் கிட்டே காட்டு'ன்னு எனக்குப் பாடம் படிக்கிறான்!''

"ஆமாம்! ஆமாம்! அந்த விச்வாஸமெல்லாம் ரொம்ப உண்டு. ரத்தபாசம் என்ன இருந்தாலும் போயிடுமா?''

"அவனை இங்கே வரச் சொல்லியிருக்கேன். முதலில் வர சங்கோஜப்பட்டான். அப்புறம் 'யார் வீட்டுக்குப் போறேன். எங்க மாமா வீடு தானே? எனக்கும் அவரைத்தவிர வேறு யார் இருக்கிறார்கள். பேஷா வரேன்'னு சொன்னான். இப்போ மொத்தத்திலே அவன் முழுக்க மாறி விட்டான். முன்னைப்போல இல்லே!''

"வரட்டும்! அவன்தான் அசட்டுத்தனமா என்னவோ செய்துவிட்டான் என்றால் அதை நாமும் மனசிலே வெச்சுக்கலாமா?'' என்று சாந்தமாகப் பதிலளித்தார் நடேசய்யர்.

ராமசாமி தன்னைத்தானே மெச்சிக்கொண்டான். மருமகனை ஜன்ம சத்துரு என்று எண்ணியிருந்த மாமாவை இவ்வளவு சீக்கிரத்தில், இவ்வளவு சுலபமாய் மருமகனுக்குச் சாதகமாய்த் திருப்ப முடியும் என்று அவனால் நம்ப முடியவில்லை.

"வாசல்லே யாரோ ஐயா வந்து உங்களைக் கூப்பிடறாங்க!'' என்றான் வேலைக்காரன்.

"அவங்களை உள்ளே அழைச்சுக்கிட்டு வா!'' என்று உத்திரவு கொடுத்தார் நடேசய்யர்.

மாமனாரும், மாப்பிள்ளையும் சேர்ந்தாற்போல் சிந்தனையில் ஆழ்ந்தார்கள்—புதிதாக வந்திருக்கும் ஆசாமி யாராக இருக்கலாமென்று.

சில நிமிஷங்களில் நடேசய்யர் அமர்ந்திருந்த அறைக்குள், "ஸார்! என்னை ஞாபகமிருக்கா?'' என்று கேட்டுக்கொண்டே ஒரு இளைஞன் பிரவேசித்தான்.

அவனைப் பார்த்துவிட்டு ராமசாமி "ஆ!'' வென்று வாயைப்பிளந்தான். நடேசய்யர் சந்தேகமும், ஆச்சர்யமுங்கொண்டு அவனை வெறித்துப் பார்த்தார். வந்த ஆசாமியோ, "இதென்ன! இந்த அறையும் இதிலுள்ளவர்களும் தட்டாமாலைபோலச் சுழலுகிறார்களே!'' என்று ஆச்சர்யப்படுகிறவன் போலத்தோன்றினான்.

அப்போது நடந்த சம்பாஷணையைக் கீழ்க் கண்டவிதமாக வர்ணிக்கலாம்:—

ராமசாமி:—" ! ! ! ! ! ....''

நடேசய்யர்:—" ! ? ! ? ! ? ....''

வந்தவன்:—" ! ! ! ! ! ....''

ராமசாமி:— ? ? ? ? ? ....''

நடேசய்யர்:— ? ? ?

வந்தவன்:— ?

மங்கள வில்லாவில் இந்த மௌன சம்பாஷணைக்குக் காரணமான ஆசாமி நமது பழைய நண்பர் ஸ்ரீமான் நடராஜன்தான். புலியினுடைய வாயிலிருந்து தப்பித்து சிங்கத்தினுடைய கூண்டிற்குள் நடப்பதுபோல் இங்கு வந்து சேர்ந்தான். அவன் இங்கு வந்து சேர்ந்தது எப்படி என்பதைச் சொல்ல வேண்டியிருக்கிறது. பூனாவில் தப்பித்துக்கொண்ட பிறகு ஒரு நாள் முழுதும் அங்கேயே பதுங்கியிருந்துவிட்டு மறுநாள் ரயிலில் சென்னைக்கு வந்து சேர்ந்தான். (அவனுடைய வருங்காலப் புரோகிராமை அவன் இன்னும் திட்டமிடவில்லை.) சென்னைக்கு வந்தவுடனே அவனுக்கு நடேசய்யர் ஞாபகம் வந்தது. கதலீபுரத்திற்கு நடேசய்யர் வந்திருந்தபோது அவன் அவருடைய நன் மதிப்புக்குப் பாத்திரமாகியிருந்தான். அப்பொழுதெல்லாம் சேகரனைத் திட்டுபவர்கள் வெகு சுலபமாக நடேசய்யருக்கு ஆப்தர்களாகி விடலாம். நடேசய்யர் நடராஜனிடம் தன் விலாசத்தைக் கொடுத்து அவன்



எப்போதாவது சென்னைக்கு வர நேர்ந்தால் அவசியம் தன் வீட்டுக்கு வரும்படியாகக் கேட்டுக்கொண்டார். அது நல்ல சமயத்தில் ஞாபகத்திற்கு வரவே, நடராஜன் நடேசய்யரின் விருந்தாளியாக வந்து சேர்ந்தான். நடேசய்யரும், சேகரனும் ஜன்ம வைரிகள் என்று அவனுக்குத் தெரியும். ஆகையால் சேகரனைப்பற்றிய எந்தத் தகவலும் இங்கே எட்டாது என்ற தைரியத்தில் தான் அவன் மங்கள வில்லாவுக்கு வந்தான். ஆனால் இந்தச் சனியன் பிடித்த ராமசாமி இங்கே வந்து சேருவான் என்று அவனுக்கு எப்படித் தெரியும்? ராமசாமி சென்னைக்கு வருவானேன்? வந்தாலும் நடேசய்யர் வீட்டில் அவனுக்கு என்ன வேலை? என்ன வேலைதான் இருந்தாலும், தான் அங்கு வந்த சமயம் பார்த்து அவன் அங்கு இருக்க வேண்டிய காரணம் என்ன? தான் சேகரனிடம் பம்பாயில் அகப்பட்டுக்கொண்டபோது சேகரனும், ராமசாமியும் அவனைக் கிண்டல் செய்தது நடராஜனுக்கு மறந்து விடவில்லை.

ஆச்சர்யமெல்லாம் அடங்கினவுடன், ராமசாமி, "நமஸ்காரம்! மிஸ்டர் நடராஜன்! தாங்கள் இந்தக் கிருஹத்திற்கு வந்ததால் கிருதார்த்தர்களானோம்!" என்றான்.

நடராஜன் கண்ணைச் சிமிட்டிக்கொண்டு நின்றான்.

நடேசய்யர் ஐந்து நிமிஷமாக வாயைப் பிளந்துகொண்டே உட்கார்ந்திருந்தார். அந்தக் காட்சி கிருஷ்ண லீலா நாடகத்தில் கிருஷ்ணன வாயைப் பிளக்கும்போது பிரபஞ்சமெல்லாம் அதற்குள் தோன்றும் திவ்யமான காட்சியை ஞாபகப்படுத்தும். ஆனால் இங்கு வித்யாசம் என்னவென்றால் பிரபஞ்சமெல்லாம் தெரிவதற்குப் பதிலாக வெற்றிலைக்காவி ஏறியிருந்த பற்களும், ரத்தம் போல் சிவந்த புகையிலைத் துணுக்குகளும்தான் வாய்க்குள் தெரிந்தன.

"நான் இங்கே எப்படி வந்தேன் என்று யோசனையா மிஸ்டர் நடராஜன்? நான் ஸர்வத்ர வ்யாபி ஸர்வக்ஞன்...கீதையிலேகூட ஒரு சுலோகம் உண்டே, மாமா?" என்றான் ராமசாமி.

நடராஜன் இப்போது கீதாபாராயணத்திற்குத் தயாராக இல்லை.

"சரி, இப்போ நம்ப சமாசாரங்களைப்பற்றிப் பேசுவோம். சேகரன் எங்கே! பூனாவில் போலீஸில் அகப்பட்டவன் இங்கே எப்படி வந்தாய்? இங்கே எதற்காக வந்தாய்?" என்று கடுமையான குரலில் கேட்டான் ராமசாமி. தன் கணவன் இவ்வளவு கடுமையான குரலில் பேசுவதைக் கேட்டால் மங்களம் மிகுந்த ஆச்சர்யமடையக்கூடும்.

நடராஜன் மௌனமாய் நின்றான். கண்கள் தானாகவே சிமிட்டிக் கொண்டன. "ஏண்டா, சோக்! கண்ணைச்சிமிட்டறே? சேகரன் எங்கே? பதில் சொல்லாவிட்டால் நாளைப் பேப்பர்களில் மயிலாப்பூரில் கோரக்கொலை என்ற செய்தி வெளியாகும். சொல்லு! கண்ணைச் சிமிட்டித் தொலைக்காதே! சேகரன் எங்கே?"

நடராஜனுக்குத் தன்னிடம் ரொம்ப நம்பிக்கையுண்டு. தன்னால் உலகத்திற்குச் செய்யப்பட வேண்டிய சேவைகள் இன்னும் பல இருக்கின்றன என்று அவன் எண்ணினான். தவிரவும் அவன் மயிலாப்பூரில் கோரக்கொலை என்று பத்திரிகை மூலம் விளம்பரமடையப் பிரியப்படவில்லை. தவிர ராமசாமியின் கையால் கொலை செய்யப்படுவது அவனுக்குப் பிடித்தமில்லை. இத்யாதி காரணங்களை உத்தேசித்து, "சேகரன் பூனா போலீஸில் ரிமாண்டில் இருக்கலாம்" என்றான்.

"அவன் எப்படிப் போலீஸுக்குப் போனான்? உன்னையல்லவா இழுத்துக்கொண்டு போகவேண்டும்!" என்று ஆத்திரத்துடன் கேட்டான் ராமசாமி.

இன்ஷ்யூரன்ஸ் பிஸினஸ்ஸில் ஈடுபட்டிருந்த போது நடராஜன் எல்லாவிதமான மரியாதைகளையும் அனுபவித்திருந்தான். தவிர, இன்ஷ்யூரன்ஸ் ஏஜென்ஸி எடுத்துக்கொள்பவர்கள் தம்மைப் பொறுத்தவரையில் மரியாதைகளை அதிகமாய் எதிர்பார்க்கக்கூடாது என்ற உண்மையும் அவனுக்குத் தெரியாததல்ல. ஆனால் ராமசாமி இன்னும் கொஞ்சம் மரியாதையான பாஷையில் பேசினால் சம்பந்தப்பட்ட இரண்டு பார்ட்டிகளுக்கும் நன்றாக இருந்திருக்கும் என்றெண்ணினான்.

நடராஜன் சுருக்கமாக நடந்ததைத் தெரிவித்தான்.

உடனே ராமசாமி நடேசய்யரைவிட்டுக் கதலீபுரத்திற்குக் கீழ்க்கண்டபடி தந்தி கொடுக்கச் சொன்னான்:—

"அட்டிகை திருடியவன் அகப்பட்டுவிட்டான். உடனே வரவும நடேசய்யர்"

பிறகு ராமசாமி பூனா போலீஸுக்கும் ஒரு தந்திகொடுத்தான். நடராஜனைப்பற்றி சென்னைப் போலீஸில் தகவல்கொடுத்து, அவனைலாக்-அப்பில் வைக்கவும் ஏற்பாடுசெய்துவிட்டுப் பூனாவுக்குக் கிளம்பிச் சென்றான்.

* * * *

(தொடரும்)



உங்கள் கால பலன்

ராவ்

மேஷ ராசி

(அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)

இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதத்தில் வெற்றிகள் கிட்டவும், பிரகாசமான நிலைமை நிலவுவதற்கும் ஏற்ற வகையில் கிரகங்கள் அமைந்துள்ளன. வாழ்வில் உன்னத ஸ்திதிக்குக் கொண்டு உயர்த்தவல்ல மாதமிது. சுற்றுவட்டத்தில் பலதினுசான மாறுதல்களெல்லாம் ஏற்படும். குடும்பம், உத்தியோகம் ஆகிய இரு துறைகளிலும் வாழ்க்கை விசேஷமாக அபிவிருத்தி பெறும். ஜனவரி 26-ந் தேதி வாக்கில் பண விஷயத்தில் மிகவும் வசதியான நிலைமை பிறக்கும். முக்கியமாக இந்தத் தேதி சகல அம்சங்களிலும் சிறந்து விளங்கும். குடும்பத்தில் யாருக்கேனும் குழந்தை பிறக்கும் அல்லது குழந்தைகளில் ஒருவரைப்பற்றிக் கவலைப்படும்படியிருக்கும். கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் குடும்பத்தில் நிகழலாம். உத்தியோகத்துறையிலும் இம்மாதம் அதிருஷ்டகரமானதே. உத்தியோக மாற்றம், அல்லது ஊதிய உயர்வு இவை மேலதிகாரியின் ஆதரவால் கிட்டும். கல்யாணமானவர்களானால் மனைவி, அல்லது புருஷனைசசார்ந்த உறவினரிடமிருந்து ஏதேனும் லாபத்தைப்பெறுவார்கள். வேலையில்லாதவர்களாயிருந்தால் உறவினர், அல்லது மூன்றாவது மனுஷ்யர் மூலம் உத்தியோகம் பெறலாம். ஆபீஸ்வேலை ரொம்ப அதிகமாயிருக்கும். ஜனவரி 28-ந் தேதியன்று ஆபீஸ் தஸ்தாவேஜுகள்பற்றி ஏதேனும் கவலை மூளும். இந்தத் தேதியில் சம்பவிக்கக்கூடிய எந்தவிதமான சச்சரவுகளையும் விலக்கவேண்டும்.

வியாபாரிகளானால் அவர்களுக்கு இம்மாதம் ரொம்பத்தரமாயிருக்கும். இரண்டாம் பகுதி ஒன்று மிகவும் சுறுசுறுப்பாயிருக்கும்படி செய்யும்: அல்லது ஏற்கனவே இருந்ததுபோல ஒரே சீராயிருக்கும். இம்மாதம் பிரத்யேகமான அனுபவம் வாய்க்கும். அதாவது ஆத்மீகத்துறையில் அபிலாஷையுள்ளவர்களானால் 'ஆத்ம' ஞானத்தை அபிவிருத்தி செய்துகொள்ள யுக்தமானகாலம். இந்த அப்பியாசத்தால் விசேஷமாக சந்தோஷமேற்படும். ஏற்கனவே இத்தகைய மனப்பண்புள்ளவர்களானால் இம்மாதம் மனோவேகம் வெகு தீவிரமாயிருக்கும். இரண்டாம் பகுதியில் பணத்தை முதலீடு செய்யும்படியிருக்கும்; அல்லது வாகனப்பிராப்தி ஏற்படும்.

ஜனவரி 17, 26, 27, பிப்ரவரி 1, 7, 8, 12, தேதிகள் இவர்களுக்கு அதிர்ஷ்டகரம்.

விருஷப ராசி

(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)

சென்ற மாதத்தைவிட இந்த மாதம் இந்த ராசிக்காரர்களுக்குச் சொற்ப அபிவிருத்தியைக் காட்டும். இதுவரையில் நம்பிக்கையோடு மட்டும் நின்ற அலுவல்கள் குறிப்பாக இம்மாதம் இரண்டாம் பகுதியில் கைகூடும். ஆபீஸ் காரியமாகவோ அல்லது கிட்டிய பந்துவினுடைய சுப காரியத்துக்காகவோ ஒரு பிரயாணம் நேரலாம். பண விஷயத்தில் சற்று வசதி அதிகரிக்கும். குடும்பத்தில் மாறுதல் வேண்டுமென்ற எண்ணம் ஓங்கும். உத்தியோகத்தில் வேலையிலேதாவது மாறுதலேற்படும். பெரியவர்களுடனோ அல்லது தகப்பனாருடனோ நல்லுறவிராது. மேலதிகாரிகள் அல்லது பெரியவர்களது ஆதரவைப் பிரதீட்சிக்க நேரும். முதல் பகுதியில் தேகாரோக்கியம் செவ்வையாயிராது. பிப்ரவரி மாதம் 23-ந்தேதி வாக்கில் முதியவர்களுடன் சச்சரவேற்படாமல் பார்த்துக்கொள்ளவும். சிலருக்குத் திடீரென்று திரவிய லாபமேற்படக்கூடும். ஆனால் தேக சுகம் திருப்தி தராது. ஏற்கனவே திட்டம் போட்ட நீண்ட பிரயாணங்களை விலக்க வேண்டும். கட்டுக்கடங்காமல் செலவு அதிகரிக்கும். புதிய சிநேகிதர்கள் ஏற்படுவர். திட்டமாக எந்தக் காரணமென்று சொல்லமுடியாதபடி அவர்கள் விரோதிகளாயும் ஆவார்கள். முதல் பகுதியில் அவர்களோடு அதிகத் தோழமை கொள்ளாமல் பார்த்துக்கொள்ளவும், சிற்சில சமயங்களில் நடை முதல் வியாபார அளவு சுணக்கமாயிருப்பினும் வியாபாரிகளுக்கு எதிர்பாராத லாபம் வரும். ஏற்கனவே கூட்டு முறையிலுள்ள வியாபாரத்தில் மனஸ்தாபங்கள் ஏற்படலாம். இரண்டாம் பகுதி முதல்தான் புதிதாகக் கூட்டு வியாபாரம் செய்ய ஏற்றதாயிருக்கும். இன்ஷூரன்ஸ் தொழிலில் உள்ளவர்களுக்கு நல்ல காலம். மனைவி அல்லது புருஷனின் தேக நலமின்மையால் குடும்ப சுகம் திருப்திகரமாயிராது. இரும்பு வியாபாரிகளாயின் அவர்களுக்கு இம்மாதம் நல்ல லாபமுண்டு. புதிதாகக் கல்யாணமானவர்களுக்கு மாமனார் மூலம் லாபம் வரும். வயோதிகர்களானால் இம்மாதம் சிரமப்படுவர். நல்ல முயற்சியோடு செய்யும் ஹேஷ்யங்களினால் இம்மாதம் லாபம் வர இடமுண்டு. பந்தயங்களில் எதிர்பாராத

லாபம் கிட்டும். எப்படியிருப்பினும் இவற்றில் கலந்துகொள்ளத் தூண்டுதல் பிறக்கும்.

ஜனவரி 17, 26, 27, 30, பிப்ரவரி 2, 7, 8, 9, 11, 12, தேதிகள் இவர்களுக்கு அனுகூலம்.

மிதுன ராசி

(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)

உத்தியோகம், குடும்பம் இரண்டிலும் இந்த ராசிக்காரர்களுக்கு எதிர்பாராத விளைவுகளெல்லாம் திடீர் திடீரென்று சம்பவிக்கும் மாதமிது. எதிர்பாராத பண லாபத்துக்கும் இடமுண்டு. சில இனங்களில் தேக அசௌகரியம் ஏற்படலாமென்று காண்கிறது. தூரதேசப் பயணமொன்று ஏற்படலாம். குடும்பத்தில் கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் நிகழும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வோ அல்லது பாராட்டுதலோ இருக்கும். குறைந்தபட்சம் செய்யும் வேலையிலாவது மாறுதலிருக்கும். நண்பர்களில் சிலருடன் அபிப்ராயபேதமேற்படும். சுற்றத்திலிருப்பவர்களுடன் சண்டை பூசல்கள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும். சகோதரர்களில் ஒருவருடைய வாழ்க்கையில் எதிர்பாராத மாறுதலேற்படும் அல்லது அவர் சுகவீனமடையலாம். சகோதரர்களுக்கு உதவிபுரிய நேரிடும். குழந்தைகளால் திருப்தி உண்டு. இவர்களில் ஒருவருக்குச் சுபகாரியம் ஒன்றே நடத்தக்கூடும். ஜனவரி 26, 27-தேதிகளில் முக்கியமான அபிலாஷைகளில் ஒன்று கைகூடும். வாழ்க்கையின் நலனை அபிவிருத்தி செய்யக்கூடிய படிப்பாளிகளைச் சந்திக்க நேரும். தப்பு அபிப்ராயங்கள் ஏற்பட இடமிருப்பதால் பெரியவர்களுடனே மேலதிகாரிகளுடனே தகராறு வைத்துக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். மாணவர்கள் பரீட்சைகளால் நன்கு எழுதுவர். வியாபாரிகளுக்கும் சந்தோஷ சமயமே. கிடைக்கும் லாபங்கள் ஆச்சர்யப்படும்படியாகவிருக்கும். கூட்டாளி முறையில் தற்காலிகமான மனஸ்தாபமேற்படும். சொத்துபற்றிய நடவடிக்கைகளை பிப்ரவரிமுதல் வாரத்துக்கு ஒத்திவைத்துக் கொள்ள வேண்டும். புதிய தொடர்புகள் அனுகூலத்தை தரத்தக்கதாயிருக்கும். கடிதப் போக்குவரத்தால் பயனேற்படாது.

ஜனவரி 23, 26, 28, 30, பிப்ரவரி 2, 4, 7, 10, 12, தேதிகள் இவர்களுக்கு நலம்.

கடக ராசி

(புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

இந்த ராசிக்காரர்களுக்கு கிரஹகங்களின் நல்ல விட்சண்யம் இம்மாதம் ரொம்ப சொற்பமாயிருக்கிறது. அதி

காரிகளின் அதிருப்தி, உறவினருடன் சண்டை, தேக சுகவீனம், வழக்கு, வியாஜ்யம் முதலிய கெடுதலான பலன்களே கிரகங்களின் அமைப்பினுல் ஏற்படக்கூடியவை. முதல், இரண்டாம் பகுதிகளில் 7-வது இடத்தில் இருக்கக்கூடிய கிரகங்களினுல் பேருக்கும், புகழுக்கும் சாதகமான நிலைமையிருக்குமென்று தோன்றக்காணேம். உத்தியோகத்தில் ஏமாற்றமேற்படும். சிலருக்கு உறவினருடனும், நண்பர்களுடனும் மனஸ்தாபமும் ஏற்படக்கூடும். பணமுடை ஏற்பட்டு கடனைத் தீர்ப்பதற்காகவோ சுபகாரிய நிமித்தமாகவோ கடன் வாங்கக்கூட நேரலாம். மருமானே அல்லது ஒன்றுவிட்ட சகோதரரில் ஒருவரோ வாழ்க்கையில் திடீரென்று முன்னுக்கு வரலாம். உத்தியோகத்தில் ஆதரவை எதிர்பார்த்துச்செய்யும் முயற்சி வெற்றிபெருது. இது முக்கியமாக இரண்டாம் பகுதியிலாகும். குடும்பத்திலும் சந்தோஷமிராது. மனைவி அல்லது புருஷனின் தேகாரோக்கியம் கெட்டரத்தம் காரணமாகத் திருப்திகரமாயிராது. உணவு விஷயத்தில் உஷாராயிருக்கவேண்டும். வியாபாரிகளுக்கு அவர்கள் செய்யும் முயற்சிகளில் தடைகள் இருக்கும். தாமதமும், ஏமாற்றமும் ஏற்படும். இரண்டாம் பகுதி பரவாயில்லை. முற்றிலும் ஹேஷ்ய பூர்வமான வியாபாரமானுல் நஷ்டம் அடையக்கூடும். கூட்டாக விருப்பதால் லாபமிராது. குழந்தைகளில் ஒருவருடைய தேக அசௌகரியத்தால் கவலை ஏற்படும்.

ஜனவரி 17, 20, 26, 27, பிப்ரவரி 1, 2, 7, 8, 11 தேதிகள் இவர்களுக்கு நல்ல நாட்கள்.

ஸிம்ம ராசி

(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

இந்த மாதத்தில் இந்த ராசிக்காரர்களுக்கு நல்லதும் கெட்டதும் கலந்து கட்டியாகவிருக்கும். இதற்குக் கிரகங்களின் நிலையே காரணம். சனி, குரு இந்த இரண்டு கிரஹங்களில் குருவினுலேயே குடும்பம், வெளி இரண்டிலும் சாதகமாகவும் வெற்றிகரமாகவும் பயன்கள் கிட்டும். முதல் பகுதியில் குருவும், சுக்கிரனும் அனுகூலம். இதனுல் மனத்தில் ஒளி ஏற்பட்டு வேதாந்தபரமான சிந்தனைகளும், ஆத்மிகத்துறையில் அபிலாஷைகளும் ஏற்படும். குடும்பத்தில் மனது கடுமையான முறையில் மாறி பிடிவாத குணமும் மேலோங்கும். முதல் பகுதியில் தேக நிலை சாதாரணம். பணக்காரர்களானுல் பண விஷயத்தில் மட்டும் தான் சிரமம் தெரியாது. சிலருக்குக் கைமாற்று வாங்க நேரிடும். ஜனவரி இறுதியில் அதிகாரிகளுடன் அபிப்ராயபேதம் கொள்ளநேரும்; அல்லது ஏமாற்றமேற்படும். குடும்ப வாழ்க்கைக்கு இரண்டாம் பகுதி ஏற்றதல்ல. குடும்பத்தில்

1949-ம் ஜனவரீ 14உ முதல் 1949-ம் பிப்ரவரீ 14உ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள நட்சத்திரங்களும், பாதங்களும் கூடவே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

மனைவிக்கும் புருஷனுக்கும் தகராறு ஏற்படும்; அல்லது ஆபீஸில் எஜமானனுக்கும் ஊழியருக்கும் சண்டை. முதல் பகுதியில்தான் செலவு அதிகம். பக்கத்திலிருப்பவர்கள், உறவினர்கள் இவர்களோடு அபிப்ராய பேதமேற்படும்படி விடக்கூடாது. காரியாலயத்தில் செய்யும் வேலை முறையில் மாறுதலிருக்கும். இரண்டாம் பகுதியில் மனைவி அல்லது புருஷனின் தேகாரோக்கியம்போதியபடி திருப்திகரமாயிராது. வியாபாரிகளுக்கு இம்மாதம் மிகவும் சுணக்கமாகவும், உற்சாகமின்றியும் இருக்கும். வியாபார விசாரணைகள் அதிகமாயிருக்குமேயன்றி வியாபாரம் அவ்வளவாகவிராது. நன்கு பரிசிலனை செய்து ஹேஷ்யத்தில் ஈடுபட்டால்தான் வியாபாரத்தில் லாபகரமான பயன்களை எதிர்பார்க்கலாம். வெளியிடங்களில் பழக்கம் சந்தோஷத்தைத் தரும். தர்மம், யாத்திரை முதலியவற்றை முதல் பகுதியில் அனுகூலகரமாகச் செய்யலாம்.

ஜனவரி 16, 17, 26, 30, பிப்ரவரி 1, 2, 7, 8, 11, தேதிகள் இவர்களுக்கு உயர்வான தினங்கள்.

1949-ம் வருஷம் ஜனவரி 14-ந் தேதி காலையிலுள்ள கிரஹ நிலைமை.

	ராகு		சந்திரன் உரானஸ்
	ராசி		
புதன் செவ்வாய் சூரியன்			சனி
குரு சுக்கிரன்		கேது	நெப்டியூன்

கன்யா ராசி

(உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.)

பொதுவாக முன்னிருந்ததைக் காட்டிலும் அனுகூலமான கிரஹ நிலைமை இம்மாதத்தில் இவர்களுக்கு ஏற்பட்டுளது. பண விஷயத்தில் இம்மாதம் வசதிகரம். பாக்கிகளை வசூலிப்பது சுலபம். குடும்ப வாழ்க்கை சந்தோஷகரமாயிருக்கும். நிலம், ஜவேஜு இவற்றில் ஏதாவது கொடுக்கல் வாங்கல் இருக்கும். பாங்கியில் பணம்சேரும்.

குழந்தைகளின் தேகநிலைக்காகச் செலவிட நேரும். வயிற்றுக்கோளாறினால் சொந்த ஆரோக்கியம் பாதிக்கப்படலாம். குடும்பத்தில் சுபகாரியம் நிகழும். சிலருக்கு இடமாறுதலுக்கான அறிகுறி காண்கிறது. கிட்டிய பந்துக்களோடு சச்சரவேற்படும். சிலருக்குப் பாகப்பிரிவினைப்போன்ற குடும்ப மாறுதலேறபடும். குழந்தையொன்று பிறக்கும் அல்லது பிள்ளைகளில் ஒருவருடைய தேகஸ்திதிக்காகக் கவலைப்பட நேரும். ஜனவரி 26-ந் தேதி வாக்கில் வீடு அல்லது சொத்துபற்றி ஏதேனும் தகராறு மூளலாம். உத்தியோகத்தில் நல்ல அபிவிருத்தி உண்டு. சிலருக்கு ஊதிய உயர்வோ உத்தியோக மாற்றமோ ஏற்படும். இரண்டாம் பகுதியில் வேலையில் ஏமாற்றமேற்படலாம். பணமுடையும் ஏற்படும். வியாபாரத்துக்கு நல்லகாலம். முதல் பகுதியில் புதிய வியாபாரம் துவங்கும். சனி 12-ல் இருப்பதால் கண்மூடித்தனமாக ஹேஷ்யங்களில் பிரவர்த்திப்பதை விலக்க வேண்டும். முதல் பகுதியில் புதிதாக சாஸ்திர ஞானம் ஏற்பட இடமுண்டு.

ஜனவரி 17, 26, 28, பிப்ரவரி 1, 2, 9, 11, 12, தேதிகள் இவர்களுக்கு சிரேஷ்டம்.

துலா ராசி

(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)

பணம், உத்தியோகம், குடும்பம் இவை அனைத்திலும் சென்ற மாதத்தைவிட அபிவிருத்தி உண்டென்பதை இம்மாதம் துலா ராசிக்காரர்களுக்கு உணர்த்துகிறது. ஜனவரி மாதம் முடியும் வரையில் மனைவி, அல்லது புருஷனின் தேகாரோக்கியம் திருப்திகரமாயிராது. பிப்ரவரிமாதம் 15-ந் தேதி வாக்கில் பணமுடை ஏற்படும்; அல்லது மீண்டும் மனைவிக்கு தேக அசௌகரியமேற்படும். பழைய ஒப்பந்தத்தைப்பற்றி மற்றவர்களுடன் தகராறு ஏற்படும். பிப்ரவரி முதல் தேதியிலிருந்து குடும்பத்தில் சற்று அபிவிருத்திக் காணப்படும். ஆனால் குழந்தைகளால் கவலைகளிருந்தே வரும். இரண்டாம் பகுதியில் எதிர்பாராத செலவுகளெல்லாம் ஏற்படும். இம்மாதத்தில் இடமாற்றமோ அல்லது வீடு, நிலம் இவற்றிலொன்றில் பணம் முதலீடு செய்வதோ நடக்கக் கூடிய காரியம். பிப்ரவரி இறுதியில் பணமுடை தீவிரமாகி செலவைச் சமாளிக்கக் கடன் வாங்கக் கூடும். சகோதரருக்கு உதவி செய்யவோ அல்லது அவரிடம் உதவி கோரும்படியோ இருக்கும். ஒரு பெரிய நகரத்துக்குப் பிரயாணம் செல்லக்கூடும். கடிதப் போக்குவரத்து லாபகரமாயிருக்கும். பிப்ரவரி 28-ந் தேதிவாக்கில் ஏதேனும் சந்தோஷ சமாசாரம் வரும். வியாபாரிகளுக்கு நடப்பு சுகம். அனுகூலமான புதிய வியாபார ஒப்பந்தம் உருவடையும். முதல் பகுதியில் பணக்காரர்களுக்கு வாகனப் பிராப்தி உண்டு. இம்மாதம் ஒரு விபத்தேற்படுவதும் சாத்தியமே. கூட்டு வியாபாரம் திருப்திகரமான லாபத்தைக் கொடுக்காது. கிட்டிய பந்து

வுடனே, பக்கத்திலிருப்பவர்களுடனே சச்சரவேற்படாமல் கவனித்துக் கொள்ளவும். வியாபாரப் பிரமுகர்களிடமிருந்து உதவி கிட்டும். அவர்களுடைய அதிருப்தியைச் சம்பாதித்துக் கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மதாசாரியரைக் காண நேர்ந்து அவர்களது அனுக்கிரகத்துக்குப் பாத்திரமாகலாம்.

ஜனவரி 17, 26, 28, 29, பிப்ரவரி 1, 2, 8, 11, 12 தேதிகள் இவர்களுக்கு பயன் தரக்கூடிய தினங்கள்.

விருச்சிக ராசி

(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)

விருச்சிக ராசிக்காரர்களுக்கு இது ரொம்ப நல்ல மாதம். பாக்கியாக விடுபட்டுப்போயிருந்த சகல காரியங்களும் இந்த கட்டத்தில் முடிவுபெறும். பணவிஷயத்தில் வியக்தமாக அபிவிருத்தி உண்டு. முதல் பகுதியில் குடும்பத்தில் சந்தோஷமாக இருக்கலாம். இரண்டாம் பகுதியில் இப்போது வசிக்கும் வீட்டைப்பற்றி ஏதாவது கஷ்டமேற்படக்கூடும். இல்லையானால் வீட்டின் அபிவிருத்திக்காகச் செலவிட நேரும். மாதமுதல் பகுதியில் செவ்வாய் 3-வது வீட்டிலிருப்பதால் இம்மாதம் ஒரு பிரயாணம் சித்திக்கக்கூடும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவுண்டு. சகஊழியர்களுடன் அபிப்பிராய பேதமேற்படக்கூடுமாதலால் இங்ஙனம் நேராமல் பார்த்துக்கொள்க. தாயார் அல்லது மாமியார் இந்த ராசிக்காரர்களுடைய விவகாரங்களில் பிரவேசித்து ஆதிக்கம் செலுத்தலாம். தற்காலம் இத்தகைய நிலைமை மனதுக்குப் பிடிக்காமலிருக்கும். மனதுக்குகந்த மாதிரியில் உத்யோகத்தில் உபாயமாக மாறுதலேற்படலாம். ஆரோக்கியம் சுமாராகவே இருக்கும். இரண்டாம் வாரத்தில் மார்பில் சற்று வலியிருக்கும் அல்லது வாயு உபத்திரவமேற்படும். நிலத்தில் முதலீடு செய்ய நேரலாம். கிட்டிய பந்துவுக்கோ, அல்லது சகோதரிக்கோ உதவி செய்யும்படியிருக்கும். மாணவர்கள் பரீட்சையில் நன்கு எழுதுவர். இம்மாதம் புதிதாகப் பயிற்சியைப்பெறக்கூடும். முக்கியமாகப் புதிதாக விவாகமானவர்களுக்கு இல்லற சுகம் பாதிக்கப்படும், இது சில தினங்கள்வரையில்தான். வியாயாரிகளுக்கு லாபமுண்டு. இரண்டாம் பகுதியில் வியாபாரம் மந்தமாயிருக்கும். நண்பர்களுடன் மனஸ்தாபமேற்படாமல், பார்த்துக்கொள்க. தூர இடத்திலிருந்து செய்யும் வியாபாரங்கள் லாபத்தைத் தருவதாயிருக்கும்.

ஜனவரி 17, 26, 28, 30. பிப்ரவரி, 2, 10. 11, 12. 13, தேதிகள் இவர்களுக்கு உத்தமம்.

தனுர் ராசி

(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் முடிய.)

சென்ற மாதத்தைவிட இது தனுர் ராசிக்காரர்களுக்கு நல்லதாகும். பண விஷயத்தில் அதிக வசதிகளுண்டு. குடும்பத்திலும் அனுகூலமான மாறுதல்களேற்படும்.

செலவு கடுமை. வருமானம் திருப்திகரம். இது விரைவில் அபிவிருத்தியடையும். உத்தியோக வாழ்க்கை உற்சாகம் தருவதாயிருக்கும். கூடிய விரைவில் திரவிய லாபமோ, ஊதிய உயர்வோ ஏற்படும். மேலதிகாரிகளின் ஆதரவுண்டு. பிப்ரவரி முதல் பகுதியில் பண விஷயத்தில் சற்று நெருக்கடியிருக்கும். குழந்தைகளில் ஒருவருடைய ஆரோக்கியம் அல்லது படிப்புபற்றிக் கவலை உண்டாகும். பண விஷயமாக ஏதேனும் தப்பு அபிப்ராயம் தலைகாட்டும். சகோதரர் சகோதரருக்கு உதவி செய்யும்படியோ அன்றி அவர்களிடம்உதவி கோரும்படியோ ஏற்படும். நண்பர்கள் பலருண்டு; ஆனால் ஒரு சிலரே சிநேகத்துக்குப் பாத்திரமாயிருப்பர். ஜனவரி முடிவுக்குள் இவர்களுடன் சச்சரவின்றி கவனித்துக்கொள்ளவும் பணக்காரர்கள், கார் வாங்கும்படியான கட்டமிது. இதற்கு முதல் பகுதிதான் ஏற்றது. இதரர்கள், நிலத்தின் மீதோ வீட்டின் பேரிலோ முதலீடுசெய்ய நேரலாம். வியாபாரிகள், மாணவர்கள் இவர்களுக்கு நல்லகாலம். கூட்டு வியாபாரம் லாபகரமாயிருக்கும். புதிய ஏஜன்ஸிகளை எடுத்துக்கொள்ள வசதி ஏற்படும். முதல் பகுதியைப்போல சகல விஷயங்களிலும் வசதியாக இரண்டாம் பகுதியிராது. முதல் பகுதியில் ஏதேனும் சுபகாரியங்கள் நிகழும்.பார்வை சரியில்லாதவர்களுக்கு இம்மாதம் நிலைமை இன்னும் மோசமாயிருக்கும். புருஷன் அல்லது மனைவியின் தேக சுகம் பாதிக்கப்படும். ஒரு ஸ்திரீயின் மூலம்—உறவாகக்கூட இருக்கலாம்—கோளாறு ஏதாவது ஏற்படக்கூடும். இது இம்மாத முதற் பகுதியில் நேரலாமெனத் தோன்றுகிறது.

ஜனவரி 17, 26, 28, 30, பிப்ரவரி 1, 2, 8, 11, 13 தேதிகள் இவர்களுக்கு சுப தினங்கள்.

மகர ராசி

(உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய.)

இந்த மாதமும் இந்த ராசிக்காரர்களுக்கு அனுகூலமாகப்படவில்லை. வாழ்க்கை முன்னேற்றத்தில் எதிர்ப்பும், தோல்வியும் முன்னணியில் நிற்கும் நிலையில் கிரஹங்களிருக்கின்றன. சூரியன், சனி இவர்களது பரஸ்பர நிலை, சனியைச் செவ்வாய் பார்ப்பது இவையெல்லாம் இம்மாத முதற் பகுதியில் ஏதாவது வியாதி பிடுங்கித் தின்னுமென்பதையே குறிக்கிறது. தசா புக்தி கெடுதலாயிருக்கும் இனங்களில் மரணம் கூட ஏற்பட நியாயமுண்டு. உத்தியோகத்தில் ஏமாற்றமேதேனும் ஏற்படலாம். தூரதேசப் பயணம் நேராமல் பார்த்துக்கொள்ளவும். எதிர்பாராத லாபம் வரும்; இதோடு சிக்கலுமிருக்கும். உறவினர்கள், அல்லது சகோதரர்கள் காரணமாக மன நிம்மதியிராது. செலவு கட்டுமீறிப் போகும். சில எதிரிகள், ஒருகால் உறவினர்களே மறைமுகமாக விரோதமாக வேலைகளைச் செய்யலாம். வியாபாரத்துக்கும் இந்த கட்டம் லாயக்கில்லை. ஆரம்

பத்தில் நஷ்டமும், இரண்டாம் பகுதியில் சற்று லாபமும் வரும். வியாபாரம் ஸ்தம்பித்து நிற்கும். விலைகள் இறங்கி லாபத்துக்கு வழியிராது. கூட்டு வியாபாரம் வருவாய்க்கு உகந்ததாயிராது. எனவே இதைக் கைவிட்டுவிடலாம்; அல்லது சிறிது காலம் ஒன்றும் செய்யாமல் நிறுத்தி வைக்கலாம். ரேஸுக்குப் போவோருக்கு நஷ்டம் பலம். இரண்டாம் பகுதியில் சற்று பரவாயில்லை. நண்பர்கள் முக்கியமாக விளங்குவர். இவர்களில் ஒருவரால் கடுமையான ஏமாற்றமும் ஏற்படலாம். எனவே அவர்களை நம்பியிருக்கக்கூடாது. பார்வை கொஞ்ச காலத்துக்குக் கோளாறுகவிருக்கும். பணம், ஆரோக்கியம் இரண்டிலும் ஸ்திரீகளாயிருப்பவர்களுக்குக் கஷ்டமேற்படும்.

ஜனவரி 17, 26, 28, 29, பிப்ரவரி 1, 4, 8, 11, 13 தேதிகள் இவர்களுக்குச் சாதகமான தினங்கள்.

கும்ப ராசி

(அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

இம்மாதம் முழுதும் குருவும், முதல் பகுதியில் சுக்கிரனும் சாதகமாகவிருப்பதைத்தவிர மற்ற கிரகங்களெல்லாம் கும்ப ராசிக்காரர்களுக்குச் சாதகமான நிலையில் இல்லை. செய்யும் வேலை, குடும்ப விவகாரங்கள் இவற்றில் மனநிம்மதி அற்றுப்போகும். வேலை அதிகம்; லாபம் குறைவு என்பதையே கிரகங்கள் குறிப்பிடுகின்றன. செலவு கட்டுக்கடங்காமல் இருக்கும். பொதுவாக எல்லா விஷயத்திலும் திருப்தி இராது. இரண்டாம் பகுதியில் உபாயமாக அபிவிருத்தி தென்படும். உஷ்ணம் அதிகரிப்பதாலும், பலவிதமான வேலைகளின் சுமை காரணமாகவும் இரண்டாம் பகுதியில் தேகாரோக்கியம் திருப்திகரமாயிராது. குடும்பத்தில் சந்தோஷமிராது. மனைவி, அல்லது புருஷனின் தேக சுகம் கெட்டு ஏதாவது ஒரு காரணத்தால் இல்லற சுகம் பாதிக்கப்பட்டுப் போகும். இரண்டாம் பகுதியில் தான் எந்தக்காரியத்திலும் வெற்றிக்கான சின்னங்களைக் காணலாம். சிலருக்கு உபாயமாக பண விஷயத்தில் அதிர்ஷ்டமேற்படலாம். அதிகாரிகளாயிருக்கும் இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் தரம்.பரஸ்பரம் குருவும் சனியும் திரிகோணத்திலிருப்பதால் வருவாயின் மார்க்கம் நன்கு உறுதிப்படும். பண விஷயத்தில் இருக்கும் பலவீனமான நிலைமையை வெளியிடப் பழக்க வழக்கங்களால் ஏற்படும் சந்தோஷ நிலைமை ஓரளவு தணிக்க உதவும். எனவே பண விஷயமான காரியங்களை மறந்து,நண்பர்களுடன்கலந்துகொண்டு உவகையோடிருப்பதுதான் பரிகாரம். நண்பர்களால் ஒரு பெரிய உயர்பதவி அடைவதைக்கண்டு கவுரவப்படும் சந்தர்ப்பம் வாய்க்கும். அதிகாரிகளாயிருப்பின் முக்கியமான காரியங்களின் நிமித்தம் பிரயாணம் செய்ய நேரும். புதிதாகக் கல்யாணமானவர்களுக்கு இல்லற சுகம் பாதிக்கப்படும். பந்தயங்களில் இறங்குவதால் பயனில்லை. வியாபாரிகள் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்காது. தீர யோசித்து புதிய வியாபாரத்தில் இறங்குவது நலம். குழந்தைகளுக்காக அதிகச் செலவுகள் செய்ய நேரிடும்.

ஜனவரி 17, 26, 27, 30, பிப்ரவரி 1, 4, 8, 13, தேதிகள் இவர்களுக்கு ஏற்ற நாட்கள்.

மீன ராசி

(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

சென்ற மாதத்திலிருந்ததைக்காட்டிலும் இப்பொழுது இந்த மாதத்திலுள்ள கிரஹங்கள் வெகுவாக அபிவிருத்தி அடைந்துள்ளன. போன மாதத்திலிருந்து காரியாலய வேலை பளு இம்மாத முதற் பகுதியில் தளர்ந்து குறைவுறும். வேலை போயிருந்தவர்களுக்கும் போனமாதம் லீவில்போய் திரும்பியவர்களுக்கும் நிலைமை ஆறுதலளிக்கும். கஷ்டங்களேற்படுகையில் நண்பர்கள் உதவி கிட்டும். அதிகாரி இந்த ராசிக்காரரின் கஷ்டத்தைக்கண்டு அனுதாபப்படுவார். இரண்டாம் பகுதியில் கண்மூடித்தனமாக செலவு செய்ய நேரும். இதற்காகப் பின்னர் வருந்த நேரிடும். இரண்டாம் பகுதியில் பண விஷயமாக நண்பர்களுடன் மனஸ்தாபம் நேராமல் விலக்க வேண்டும். மேலதிகாரியின் ஆதரவுண்டு. மனைவியின் மூலம் சிலருக்கு லாபமுண்டு. சிலருக்கு புதிய வியாபார மார்க்கங்கள் மனதில் தோன்றும். இச்சமயத்தில் கூட்டு வியாபாரமே சிறந்தது. ஏஜன்ஸி, கமிஷன் வியாபாரங்களை ஏற்கலாம். பெரிய வியாபாரப் புள்ளிகளுடன் தொடர்பேற்படும். நாளாவட்டத்தில் இது நன்மை பயக்கும். முதல் பகுதியில் பெரியவர்களுடைய அதிருப்திக்கு ஆளாகாமல் பார்த்துக்கொளவதவசியம். முதல் பகுதியில் கிட்டிய பந்துவின் சுகவீனத்தால் மன நிம்மதி கெடும்.

ஜனவரி 17, 23, 27, 29, பிப்ரவரி 1, 2, 4 8, 12, தேதிகள் இவர்களுக்கு பயன்தரத்தக்கவை.

(ரிப்ளைகார்டு எழுதினுல்தான் பதில் எழுதப்படும்)

★

ஸ்ரீ பி. வி. ராவ்,

5, வாசுதேவபுரம், ஐஸ் ஹவுஸ் ரோடு,

திருவல்லிக்கேணி

தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

9

யார் யாரைக் கொலை செய்வது?

★

ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தை உள்ளபடி அறியாதவர்களே உலகில் பலராயிருக்கின்றனர். அவர்கள் நீதி நிர்வாகம், கலைகள் முதலிய துறைகளில் மகா நிபுணர்களாயிருக்கலாம். அவை சம்பந்தப்பட்ட வரையில் அவர்கள் வியவகாரம் செய்துவரும் பாஷைகள் பிழையற்றிருக்கலாம். ஆனால் மரணத்தின் மர்மத்தை அவர்கள் உள்ளபடி அறிந்துகொள்ளாததால் அதுபற்றி அவர்கள் விவரிக்கும் வார்த்தைகளை ஞானிகள் பொருள் உடையதாக எந்நாளும் கொள்ளவே மாட்டார்கள். ‘அவன் கொலை செய்தான். அதனால் அவன் கொலையுண்டான்’ என்று பேசி வியவகாரம் செய்வோர் அனைவரும் தத்துவதர்சிகளால் முட்டாள்களாகவே கருதப்படுவர். அம் முட்டாள்கள் இரு சாரார்.

யாவன் இவனை இவன்
கொல்வான் என்றறியும்
யாவன் இவன் கொல்லுண்பான்
என்றறியும்—மேவும்
அறிவு இருவருஞ்சாரார்
ஆங்கிவனும் கொல்லான்
நெறியவனும் கொல்லுண்ணா
னேர்ந்து.

(இ-ள்) யாவன்—எவன் ஒருவன், இவனை இவன் கொல்வான் என்று அறியும்—இன்னாரை இன்னான் கொலை செய்வான் என்று நினைப்பனோ, யாவன்—எவன் ஒருவன், இவன் கொல்லுண்பான் என்று அறியும்—இன்னான் கொலை செய்யப்படுவான் என்று நினைப்பனோ, இருவரும்-(இந்த) இரு சாராரும், மேவும் அறிவு சாரார்—சரியான ஞானத்தைப் பெருதவர் ஆவர், இவனும்-(இவன் என்று குறிக்கப்படும் ஜீவாத்மாவும்,) கொல்லான்—கொல்லமாட்டான், நெறி அவனும்—தன்னியல்பு மாருத (அவன் என்று குறிக்கப்படும்) ஜீவாத்மாவும், நேர்ந்து கொல்லுண்ணான்—தான் கொலை செய்யப்படமாட்டான்.

ய ஏநம் வேத்தி ஹந்தாரம்
யச்சைநம் மந்யதே ஹதம்
4
உபௌ தௌ ந விஜாநீதோ
நாயம் ஹந்தி நஹந்யதே·

(இ-ள்) ய: ஏநம்-எவன் இவன் எனப்படும் ஜீவாத்மாவை, ஹந்தாரம் மந்யதே—கொல்லுவான் என்று எண்ணுகிருனோ, ய: ச ஏநம்—பின்னும் எவன் இவன் எனப்படும் ஜீவாத்மாவை, ஹதம் மந்யதே—கொல்லப்பட்டவனாக எண்ணுகிருனோ, தௌ உபௌ அபி—அவ்விரண்டு பேர்களும், ந விஜாநீத:—அறியாதிருக்கிருர்கள், அயம்—இவன் (ஜீவாத்மா) ந ஹந்தி—கொல்லமாட்டான், ந ஹந்யதே—கொல்லப்பட(வும்) மாட்டான்.

‘நான், நீ, இவன், அவன்’ என்று விவகரிப்படுகின்றவன் தேகமே என்று பலர் பிரமிக்கின்றனர். பிரமையின் காரணமாக மரணத்தின்போது அழிகின்ற உடலைக் கண்டு இவன் அவன் எனப்படுவோனும் அழிந்து விட்டதாக நினைந்து வருந்துகின்றனர். ‘இவன்; அவன்’ எனப்படுவோன், உண்மையில் தேஹமும் அல்ல. அதைவிட சூட்சுமமான பிராணனும் அல்ல. அதனினும் சூட்சுமமான மனமும் அல்ல, அதனினும் சூட்சுமமான அறிவும் இல்லை. அறியப்படுகின்ற வஸ்துக்கள் எதுவும் இல்லை. அறிகின்ற ஆத்மாவே ‘நான், நீ, இவன். அவன்’ என்று விவகரிக்கப்படுகின்ருன். மரணத்தில் தேகம் அழியும்போது இவ்வாத்மா அழிவதில்லை. அவன் அழிப்பதும் இல்லை. ‘கொலை’ என்பது ஒரு செயல். அதை ஒருவன் செய்கிருன். ஒருவன் செய்யப்படுகிருன் என்கிருேம். அத்தொழிலுக்கு ஒருவனைக் கர்த்தாவாக்கி ஒருவனைச் செயப்படுபொருள் (கர்மா) ஆக்கி விவகாரம் செய்வது உலக வழக்கமாகவிருக்கிறது. கர்த்தா, கர்மா இலக்கண பாஷையில் எழுவாய் செயப்படுபொருள் (ஸப்ஜெக்ட், ஆப்ஜெக்ட்) எனப்படுகின்றன. அவன் இவன் எனப்படும் ஆத்மா கொலைத் தொழிலில் எழுவாயாகவோ செயப்படுபொருளாகவோ இருப்பதில்லை. இருக்கவும் முடியாது. ‘இந்த உண்மையை நீ மேலும் அறிந்து கொள்வதற்கு ஜீவாத்மா ஸ்வரூபத்தைக் கேள்’ என்று கண்ணன் ஆத்ம லக்ஷணம் சொல்லுகிருர்.

என்றும் பிறவான் இவன்
இறவான் முன்புளனுய்ச்
சென்று பிறந்திலனும்
செய்தியிலன்–இன்று என்றும்
தொல்லையவனுன இவன்
தோன்றும் உடல் கொன்ருலும்
கொல்லரியன் ஆகும் குறித்து

(இ-ள்) இவன்—ஜீவாத்மா, என்றும் பிறவான்-எப்பொழுதும் பிறப்பதில்லை, இறவான்-இறப்பதில்லை, முன்பு உளனுய்-முன் ஒரு காலத்தில் இருந்து, சென்று

பிறந்து இலன் ஆம் செய்தி இலன்—(ஒரு உடம்பில் போய்) பிறந்து பின் (இறந்து) இல்லாதவன் ஆனன் (என்று) சொல்லப்படுவதும் இல்லை, இன்று என்றும்—தற்பொழுது போலவே எப்பொழுதும், தொல்லையவன் ஆன இவன்-புராதனனுக இருக்கின்ற இந்த ஜீவாத்மா, தோன்றும் உடல் கொன்றாலும்-(தன் இருப்புத்) தோன்றும்படி (பெற்றுக்கொள்ளும்) தேகம் அழிக்கப்பட்டாலும், குறித்து கொல் அரியன் ஆகும்—நினைத்து அழிக்கப்பட மாட்டாதவன் ஆவன்.

3
நஜாயதே ம்ரியதேவா கதாசிந்
நாயம்
4 4 4
பூத்வா பவிதாவா ந பூய:
அஜோ நித்ய ஸ்ஸாஸ்வதோயம்
புராணோ ந ஹந்யதே ஹந்ய
மாநே ஸரீரே.

(இ-ள்) அயம்-இந்த ஜீவாத்மா, கதாசித் அபி-ஒருபொழுதும், நஜாயதே-பிறக்கிறதில்லை, ந ம்ரியதே வா-இறக்கிறதுமில்லை, அயம்-இவன், பூத்வா-(நடுவில்) உண்டாகி, பூய:—கற்பாந்தத்தில்பின், நபவிதா-(அழிந்து) உண்டாவதுமில்லை, அத: அயம்—ஆகையால் இவன், அஜ:-பிறப்பற்றவன், நித்ய:-அழிவில்லாதவன், சாச்வத:—எப்போதும் இருப்பவன், புராண:—புராதனன், சரீரே ஹந்யமாநே-தேகங்கள் அநேக மாறுதல் அடைந்தாலும், ந ஹந்யதே—(இவன்)மாறுதல் அடையாதவன்.

முன் இல்லாதிருந்து நடுவே தோன்றுவது பிறப்பு. முன்னே இருந்து பின் இல்லாமல் போவது இறப்பு. இவ்விரண்டும் ஜீவாத்மாவுக்கில்லை. உடலுக்கேயுரியது. உடலுக்குரிய விகாரங்கள் பிறப்பு, இருப்பு, வளர்தல், குறுகுதல். திரிதல், நசித்தல் என ஆறுவகைப்படும். இவ்வாறு விகாரங்களும் அறவே இல்லாதவன் ஜீவாத்மா. மரணத்தின்போது இடையே வந்த தேகம் கொல்லப்பட்டால் இவனுக்கென்ன? புராதனனுன இவன் ஒருபொழுதும் கொல்லப்படுவதில்லை. மாறுதல் அடைவதும் இல்லை. இந்த உண்மையை உணர்ந்த புருஷன் விஷயத்தில் மரணம் எவ்வாருகிறது? எவ்வாறு விவரிக்கப்படவேண்டும்?

உண்டாய்ப் பிறந்து வளர்ந்
தோங்கிக்குறைந் திறத்தல்
கொண்டோ டுடம்பியல்வைக்
கூடானைக்—கண்டான்
எவனைத்தான் கொல்லுவிக்க
ஏல்வான் மற்றெங்ங
னெவனைத்தான் கொல்வானி
[யன்று

(இ-ள்) உண்டாய்—(நடுவே) தோன்றி, பிறந்து வளர்ந்து ஓங்கி குறைந்து இறத்தல் கொண்டு ஓடும்—பிறத்தல் வளர்தல் செழித்தல் தேய்தல் அழிதல் ஆகும் விகாரங்கள் பெற்றுச் செல்லும், உடம்பு இயல்வைக் கூடானை—உடம்பின் விகாரங்களைப் பெருத ஜீவாத்மாவை, கண்டான்—அறிந்து கொண்டவன், எவனைத்தான் கொல்லுவிக்க ஏல்வான்?—எந்த ஆத்மாவைக் கொல்விக்க முடியும்? இயன்று எங்ஙன் எவனைத்தான் கொல்வான்?—முயன்று எவ்வாறு எவனைக்கொல்வான்?

3
வேதா விநாசிநம் நித்யம்
ய ஏநம் அஜம் அவ்யயம்
2 2
கதம் ஸ புருஷ: பார்த்த
கம் காதயதி ஹந்திகம்.
4

(இ-ள்) பார்த்த —அர்ஜுனா! ய: ஏநம்—என் இவ்வாத்மாவை, அவிநாசிநம்—நாசமற்றதாயும், அஜம்-பிறப்பற்றதாயும், அவ்யயம்-குறைதல் அற்றதாயும். நித்யம்—நித்யமாகவும், வேத—அறிகிருனே, ஸ: புருஷ:—அந்த புருஷன், கதம்—எப்படி, கம்—எந்த (ஆத்மாவை) காதயதி—கொல்விக்கிருன்? கம் ஹந்தி—எதைக்கொல்கிருன்?

இவன் அவன் என்று விவகரிக்கப்படுகின்றவன். தேகத்திற்கப்பாற்பட்டவன். தேகத்திற்கு உரிய விகாரங்களில் எதையும் ஏற்காதவன், ஆதியும் அந்தமும் அற்றவன் என்று ஆத்மாவின் தன்மையை உள்ளபடி அறிந்தவர் மரண விஷயத்தில் 'ஒருவன் ஒருவனைக் கொலை செய்தான்' என வரும்பேச்சை பொருள் உடையதாக எப்படி அங்கீகாரம் செய்வர்? அவனும் இவனும் அழிவற்றவர்களாயிருக்கும்பொழுது 'யார் யாரைக்கொலை செய்வது?' செய்வதாக நினைப்பது அபத்தம் அல்லவா?

இவ்வுண்மையைக் கண்டவர், பிறரைக் கொல்லவோ கொல்விக்கவோமாட்டார்கள். இயலாத காரியம் ஆதலால் தம்மைக் கொல்ல நினைப்போர் முயல்வோரை எண்ணித் தமக்குள்ளே ஏளனம் செய்வர். அல்லது ஆத்மாவின் உண்மை நிலையை உணரமாட்டாது அழியாத தன்னை அழிக்க முயலும் அறிவிலிகளின் வீண் முயற்சியை நினைந்து வருந்தவும் செய்வர். தம்மைத் தேகத்திற்கப்பாற்பட்ட ஆத்மாவாக நினைக்கிருர்கள் ஆதலால் மரணத்தின்போது தேகம் அழியுமே என்று கவலைகொள்ள மாட்டார். அஞ்சமாட்டார். நண்பர்போல நடித்து நஞ்சை ஊட்ட வரும் விரோதிகளும் பக்தன் போல நடித்து பையில் குண்டும் துப்பாக்கியும் வைத்துக் கொல்ல வரும் விரோதிகளும் தனக்கு ஆயிரக்கணக்கில் இருந்தாலும் ஆத்ம ஞானி அஞ்சமாட்டான். விரோதிகளை நண்பராகவே நினைப்பன்.

ஆத்ம ஞானிக்கு எவனும் விரோதி இல்லை. அறியாமையினுல் ஆத்ம ஞானியை சிலர் தமக்கு விரோதியாக நினைக்கலாம். கொல்லவும் முயலலாம். ஆத்ம ஞானியின் உடலில் குண்டுகளைப் பொழியவும் செய்யலாம். ஆனல் தான் உடல் அல்லவாதலால் ஆத்மஞானி அஞ்சி அகல மாட்டான். தன் உடலில் துப்பாக்கி கொண்டு சுடுவோனின் மீது சீற்றமும் கொள்ளமாட்டான். இந்நிலை ஒருவனுக்கு வர முடியுமா? என்று கேட்கலாம்.

கீதையை அடிக்கடி படித்து படிப்படியாக அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தால் முடியும். குண்டைத் தன் மார்பின்மீது பொழிபவன் எதிரே நின்ற போது அஞ்சாமல் அகலாமல் நின்றபடியே 'ஹே ராம்' என்று உடலை விட்ட மஹாத்மாபோல் வார்க்கு முடியும்.

70 மைல் உயரத்திலிருந்து பூமியின் படப் பிடிப்பு



ஆராய்ச்சி கூடமும் 'ராக்கெட்' கிளம்புவதும் காணப் படுகின்றன.



அடிவானத்தின் நெடுகே 2700 மைல் நீளத்திற்குள்ளும் குறுக்கே 700 மைலுக்குள்ளும் அடங்கிய 8 லக்ஷம் சதுர மைல்களை மேல்பகுதி காட்டுகிறது. கீழ்பகுதியில் 3 லக்ஷம் சதுர மைல்களின் படங்கள் அடங்கியுள்ளன.

இரு 'ராக்கெட்'டுகளில் வைக்கப்பட்ட மூன்று ஆடோ மாடிக் காமிராக்களின் மூலம் அமெரிக்காவின் மேற்குப் பகுதியிலும் மெக்ஸிகோவின் வட பகுதியிலும் ஏராளமான பிரதேசங்களை அமெரிக்க கடற்படை சில நிமிஷநேரங்களுக்குள் படமெடுத்துள்ளது. இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இத்தகைய பெரியதொரு நிலப்பரப்பு இதுவரை படம் பிடிக்கப்பட்டதே கிடையாது.

அவ்விரு ராக்கெட்டுகளில் ஒன்று 70 மைல் உயரமும் மற்றொன்று சுமார் 60 மைல் உயரமும் சென்றனவாம். மணிக்கு 3000 மைல் வேகத்தில் அவை பறந்தனவெனினும் அவற்றின் துணைகொண்டு எடுக்கப்பட்டுள்ள படங்கள் மிகத் தெளிவாகவே இருப்பதை நீங்கள் இங்கு காணலாம். பூமியின் சரிவு மட்டுமன்றி மலைகள் நதிகள், சாலைகள், இருப்புப்பாதைகள் விமானகூடங்கள் முதலியவைகூட அவற்றில் நன்கு தெரிகின்றன. ஒன்றரை விநாடிக்கு ஒருமுறை வீதம் மூன்று காமிராக்களும் சுமார் 600 படங்களை எடுத்துத் தள்ளின என்பதும் குறிப்பிடத் தக்கது.

மேலே மேலே பறந்துசென்று படமெடுத்து முடிந்தபின் அவற்றிலொன்று கீழே இறங்கி பூமிக்கு 30 மைல் தூரத்தருகே வந்தபோது ரேடியோமூலம் அதனுடைய பின் பாகம் தகர்க்கப்பட்டதாம். அதன் விளைவாகத் துணடித்து விழுந்த காமிராக்கள் 19 தினங்களுக்கப்புறம் பாலைவனத்தின் நடுவே அகப்பட்டனவாம். மற்றொரு ராக்கெட்டும் சுமார் 24 மைல் உயரத்தில் தகர்க்கப்பட்டது. அதிலிருந்த 'காமிரா'வும் மூன்று தினங்களுக்கப்புறம் அகப்பட்டது.

முதலாவதில் இருந்த இரு காமிராக்களும் 3 லக்ஷம் சதுரமைல் பரப்பளவும் 1400 மைல் நீளமும் உள்ள பிரதேசங்களைப் படமெடுத்தன. இரண்டாவதில் இருந்தது 2700 மைல் நீளமுள்ள பகுதியில் 8 லக்ஷம் சதுர மைல்களைப் படமெடுக்கப்பட்டது.

வானிலை ஆராய்ச்சிக்கும் 'காஸ்மிக்'கிரண ஆராய்ச்சிக்கும்கூட இம்முயற்சி பயன்பட்டதாம்.





(மேல்)

57 மைல் உயரத்தில் எடுக்கப்பட்ட படம். பூமியின் சரிவையும் அதன் மேலுள்ள மூட்டத்தையும் காணுங்கள். மேகங்களையும் அவற்றினால் பூமியில் விழும் நிழலையுங்கூடப் பார்க்கலாம்.

(கீழ்)

படமெடுக்க உபயோகிக்கப்பட்ட 'காமிரா'க்களை ஆராய்ச்சியாளர் ஹாலிடே என்பவர் பரிசீலிக்கிறார்.



நாமொன்று நினைக்க——!

ய. மகாலிங்க சாஸ்திரி, எம்.ஏ.பி.எல்.

ராமநாதன். இரவு வரவில்லை. சிவராமன் கோபிநாத் வெங்கிடசுப்பையர் முதலியவர்களும் குழந்தைகளும் சேர்ந்து முதலில் போஜனம் செய்தார்கள். மதுரப்பாட்டி அஸ்தமனத்திலேயே பலகாரம் பண்ணிவிட்டாள். பெண்கள் வெகு நேரம் வரையில் சம்பாஷணையின் சுவாரஸ்யத்தை அனுபவித்துக்கொண்டு இருந்தபடியால் கோமதியும் சங்கரியம்மாளும் இரண்டாம் பந்திக்கு உட்கார்ந்தார்கள். உஷாவுடன் செல்லம் காந்திமதிகளுக்குப் போஜனம் செய்துவிக்க கோமதியை ஏவிவிட்டு சங்கரியம்மாள் மாடிக்குச் சென்றாள்.

சிவராமன் கோபிநாத்துடன் தன் சரீரத்தில் ரத்தக்கொதிப்பு இருப்பதுபற்றியும், அதன் தீமைகளை முற்றவிடாமலிருப்பதற்காகத்தான் அனுஷ்டித்து வரும் ஆகாரக் கட்டுப்பாடு முதலிய முன் எச்சரிக்கைகளைப் பற்றியும் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்தார். கோபிநாத். ரத்தக்கொதிப்பு ஒரு வியாதியில்லை என்றும், அதைப் பற்றிப்புதிய அபிப்பிராயங்கள் வெளிவந்து இருப்பதாயும், தான் நேரில் பரீக்ஷிக்காமல் ஒன்றும் தீர்மானம் சொல்ல முடியாதென்றும்ஆனால்அந்தக்‘கம்ப்ளெயிண்டு’ உள்ள பல பேர்களுக்குத்தான் வைத்தியம் செயது ஸ்வஸ்தம் பண்ணியிருப்பதாயும் விவரித்து ஸம்பாவுணையை அதிகநேரம் நீடிக்கச்செய்தார். முடிவில் ராமநாதனைக் காணாததுபற்றிச் சிவராமன் கோபிநாத்தைவிசாரித்தார். கோபிநாத் ஒன்றும் திருப்திகரமான விவரம்சொல்லக்கூடியவராயில்லை. கோபிநாத், உஷாவைப்பற்றிச் சிவராமனை எதுவும் கேட்கத் துணியவில்லை.

இதன் மத்தியில் சங்கரியம்மாள் மாடியில் வெங்கிடசுப்பையருடன் குடும்ப விஷயமான மந்திராலோசனைகளில் ஈடுபட்டிருந்தாள்.

“பொழுது விடிந்து உஷாவை என்ன செய்யப்போகிறீர்கள்” என்பது அவள் கேள்வி—“மதுரப்பாட்டி தன் பிள்ளையிடம்போக வேண்டுமென்றும் ஒரு மாதம் லீவு வேண்டுமென்றும் இன்று அஸ்தமனத்திற்குப் பிறகு திடீரென்று ஒரு வெடியைப் பிரயோகிக்க ஆரம்பித்திருக்கிறாள். அவள் லீவு கேட்கும் காரணம் எனக்குத்தெரியும். கல்யாணமும் அதுவுமாய் வீடு அமளிப்படும் தருவாயில் நான் காரியக்காரியில்லாமல் என்ன செய்வேன்? பத்து நாளைக்கு நிம்மதியாய் இருக்கலாம் என்று வந்திருக்கும் கோமதியை உட்காரவிடாமல் வேலை வாங்கிக் கஷ்டப்படுத்துவதா? இந்த சிவராமனாலே நமக்கு வருகிறதொல்லை இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. எனக்கு நாலுபேர் கேட்கிறவாளுக்கு ஜவாப்பு சொல்வது கஷ்டமாயிருக்கும் போலிருக்கிறது. என்ன இருந்தாலும் இதெல்லாம் அவமானம் தானே? நமக்கேன் இந்த சள்ளைகளெல்லாம்? அவன் பெண்ணையோ, பெண்களையோ அழைத்துக்கொண்டு நாளைக்கே ஊருக்குப் போய்விடட்டும். செல்லத்துக்கு வரனைப் பார்த்துக்கொண்டு வந்தானேயானால், காந்திமதி கல்யாணத்துடன் நடத்திவைப்போம். அதற்குமேல்தான் நான் என்ன செய்யமுடியும்? அவன் கிளறிய குப்பைகளையெல்லாம் அள்ளி நாம் தலையில் போட்டுக்கொண்டு ஏன் அவஸ்தைப்பட வேண்டும்?”

வெங்கிடசுப்பையர் தன் பாரியையின், வியாகூலத்தை அனுதாபத்துடன் பரிசீலனை செய்யப் புகுந்தார்.

“மதுரப்பாட்டியின் பயமுறுத்தல் உன்னை இவ்வளவு குழம்பச் செய்துவிட்டது! அவளைச்சமாதானம் செய்து வைத்துக்கொள்ளும்பொருட்டு நீ உன் தம்பியையும் மருமானையும் வீட்டைவிட்டனுபபிவிட்டால் தேவலை என்று நினைக்கிறாய்! ரொம்ப நன்றாயிருக்கிறது யோசனை! இவ்வளவு கோழைத்தனமாயிருந்தால் எப்படி இந்த உலகத்தில் பெயர் சொல்ல முடியும்? மதுரப்பாட்டி கோபித்துக்கொண்டு போய்விட்டால் உலகம் அஸ்தமித்துவிடும் போலிருக்கிறது! மதுரப்பாட்டியில்லாமல் எவ்வளவு குடும்பங்கள் நடக்கவில்லை? இன்னும் இரண்டு ரூபாய் கூடக்கொடுத்தால் மற்றொருத்திவந்து விட்டுப்போகிறாள். இந்தப் பாட்டியே அடிபோடுவது “பிரமோஷ”னுக்குத்தான், நீ வேறுவிதமாய் நினைக்கிறது தப்பு. கல்யாணம் வருகிறபடியால் வேலை அதிகமாயிருக்குமென்றும், இந்த முடையில் பிகு பண்ணிக்கொண்டால் அதிகச் சம்பளம் பெறலாம் என்பதும்தான் அவள் உத்தேசம். நாளைக்கு நீ வேண்டுமானால் சொல்லிப்பார். இந்தமாதம் ஐந்து ரூபாய் அதிகம் தரப்போவதாய் நான் சொன்னதாய்ச் சொல்லு. பிரயாணம் நின்றுபோய்விடும்—”

“நீங்கள் சொல்லுகிறபடி இருந்தாலும் இருக்கும். அதையும் நாளைக்குப் பரீக்ஷை பார்த்து விடுகிறேன். மேலும் கல்யாணத்தை முன்னிட்டு ஒரு சுமங்கலிப் பிரார்த்தனை செய்தால் அதில்

ஒரு ஏழை சுமங்கலிக்கு ஒரு புடவை எடுத்துக் கொடுக்க வேண்டுமென்று சங்கல்பித்திருக்கிறேன். இந்தப் பாட்டியின் பெண் கஷ்ட நிலைமையிலிருக்கிருள். பெண் பரம சாது—உபகாரி—சோம்பலே கிடையாது. சிரித்த முகம். அசூயையே கிடையாது. அவளுக்குத்தான் அந்தப் புடவை என்று உத்தேசித்திருக்கிறேன்.''

''பேஷாய்ச் செய், இதை அந்தப் பாட்டியிடம் சொல்லி விடு. பிற்பாடு லீவு கேட்கிருளா பாரு—.''

சங்கரியம்மாளுக்கு இந்த உண்மையை அங்கீகரிக்காமல் இருக்க முடியவில்லை. மதுரப்பாட்டியின் ஜாலக்குகளை நினைக்க அவளுக்குச் சிரிப்பு வந்தது.

மேலும் வேங்கிடசுப்பையர் பேசலானுர்—''சிவராமன் கிளறிய குப்பைகளை நாம் தலைமேற் போட்டுக் கொள்வானேன் என்று நீ கேட்டகேள்வி சரியான கேள்விதான். ஆனுல் நீ சற்று யோசித்துப் பார்த்தால் அதற்குப் பதில் உனக்கே புலப்படும். அந்தக் குப்பையை நாமா வேண்டுமென்று தலைமேற் போட்டுக் கொள்கிருேம். அது காத்துவாக்கில் நம்பேரில் வந்து விழுகிறது. புழுதி கண்களில் உறுத்துகிறது. சுவாஸத்தை அடைக்கிறது. உடலை மலினமாக்குகிறது. அப்போது நாம் செய்யவேண்டியது என்ன? தூய்மையை விரும்புகிறவர்கள் அசுத்தமான காற்றினின்றும் விலகி ஜலத்தினுல் தூசி படிந்த உறுப்புகளைக் கழுவிக் கொள்ள வேண்டியது அவசியமல்லவா? அதற்குத்தான் ஆரம்பித்திருக்கிறேன்—''

''என்ன ஆரம்பித்திருக்கிறீர்கள்?''

பாம்பு கடித்த விரலைத் துண்டித்தெறிந்து விட்டால் பிழைக்கலாம்.''

''அவன் அப்போதே சொல்லி விட்டான்.''

''என்ன?''

''அப்பா பணத்தைத்தானே இல்லை என்று சொல்ல முடியும்! காதலுக்காக நான் எதையும் துறக்கத்தயார்? என்று நானும் பதிலுக்குக் கேட்டேன்—'பணமில்லாமல் போர்ஜரிபண்ணி சம்பாதிப்பாயா? அல்லது பெண்டாட்டி நாட்டியமாடிச் சம்பாதித்துப் போடுவதால் வயிறு வளர்க்கப் போகிருயா?' என்று அதுக்கு ரோஷமில்லை. மான அவமானம் தெரியவில்லை. பந்துக்கள் வேண்டாமாம் யார் உதவியையும் எதிர் பார்க்கவில்லையாம். தலைகால் தெரியாமல்தான் துள்ளினுன். 'உன்னைப் பெற்ற வயிறு எரிகிறதடா' என்று சொன்னேன்.''

''அவன் நினைத்தபடி நான் அவன் பங்கைப் பறிமுதல் செய்து கொண்டு அவனை விலக்கப்போவதில்லை. அவனுக்குத் திருப்திகரமான வழியிலேயே சென்று சகல உதவிகளையும் செய்யப் போகிறேன்.''

''எதுக்காக? 'அப்பா என்னைப் போலீஸில் மாட்டிவைத்து நிர்தாக்ஷிண்யமான காரியம்! என்று தூற்றினுனே அதற்காகவா?''

''அவன் எது வேண்டுமானுலும் சொல்லட்டும். நான் அப்படிச் செய்யாவிடில் போர்ஜரியின் உண்மை வெளிவராது. அது சம்பந்தமான நடவடிக்கைகளைப்பரம ரகசியமாய்தான் வைத்துக்கொண்டிருக்கிறேன். போர்ஜரி செய்தது இன்னுர் என்றும் இன்னகாரணத்திற்காக அது செய்யப்பட்டதென்றும்தெரிந்துகொண்ட பிறகு அவன் விஷயத்தில் நான் எப்படியும் நடந்துகொள்ளவேண்டுமென்பதைப்பற்றி ஒரு தீர்மானத்திற்கு வந்தேன். பொய், பித்தலாட்டம், துரோகம், வஞ்சனை நம்பினவரைக் கைவிடுதல்,சுயநலம், கபட நாடகம், டம்பப்பேச்சு ஏமாற்று வெளித் தோற்றத்தில் பயிற்சி, உண்மை உணர்ச்சி இன்மை, கண் இழுத்தவழி, தடுமாறிச் செல்லுதல், தன் குற்றம் மறைத்தல், போலி வீராப்பு, பெரியோர்களை நிராகரித்தல், படிப்பின் உயரிய பண்பு பெருமல் இழிவான உலகியலில் உழலுதல் முதலிய கீழ்த்தரமான அவகுணங்கள் நிரம்பிய ஒரு பிள்ளை எக்கேடு கெட்டுப் போனுல் என்ன என்ற வைராக்கியம் எனக்கு வந்துவிட்டது.''

''அவனை இனித்திருப்பவும் முடியாது''

''வக்கில் விச்வனுதையர் அப்படித்தான் சொன்னுர். ஆகையால் எப்படிச் செய்வது மேல்? யோசித்துப்பார்!''

''அது எக்கேடுகெட்டுப் போகட்டும் என்று விட்டுவிடவேண்டியதுதான்.''

''அதைத்தான் நான் உத்தேசித்திருக்கிறேன். கையை விட்டு நமுவியதை நாம் கொடுத்தது போல் பாவனை செய்தால் இழந்த துக்கமில்லாமல் கொடுத்த பெருமையைப்பெறலாம்.''

''அதற்காகத்தான் உஷாவை இங்கு அழைத்து வைத்துக் கொண்டீர்களா?

ஆம். உஷாவின் விவாஹத்திற்கு முதலில் கார்டியன் விவாதம் தீரவேண்டும். அதைத் தீர்த்து விட்டேன்.''

''எப்படித் தீர்த்தீர்கள்? நாளைக்கு அழகிரி 'என் வீட்டுப் பெண்ணை விடுகிருயா, இல்லையா' என்று சண்டைக்கு வந்தால்—?''

''வரமாட்டான். பெண் நம் வசம் வந்துவிட்டாள். அவன் கோர்ட்டுக்குப் போகவேண்டியது தான் ஒரேவழி. பெண் அவன் வசம் இருந்தபோது சிவராமன் கோர்ட்டிற்குப் போவது ஒரேவழியாக இருந்தது. சிவராமன் கார்டியன் மனுவுடன் ஒருநாளும் கோர்ட்டிற்குப் போகமாட்டான். இப்போது பெண்ணை இங்கு வரவழைத்து வசத்தில் வைத்துக் கொண்டதின்மூலம் அழகிரியைக் கோர்ட்டிற்கு விரட்டும், தந்திரத்தைச் செய்தேன். அவன் கோர்ட்டிற்குப் போகமாட்டான் என்பது நிச்சயம்.—''

''ஏன்?''

''கோர்ட்டில் பகுத்தறிவு வந்த மைனரின் சம்மதத்தைக் கேட்பார்கள். உஷா யாரிடம் இருக்க விரும்புவாள் என்பதில் சந்தேகமில்லை. அழகிரிக்கும் அது தெரியும். மேலும் அவன் நாளைக்காலையில் போலீஸ் வசத்திலிருப்பான். ராமநாதனை பலாத்காரம் செய்து வைரப்பித்தான்களைப் பிடுங்கிக் கொண்ட அடாத செயலுக்கு அவனைப் பழி வாங்கவும், சிவராம

னுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தை அனுசரித்து உஷாவுக்கு மூலதனம்' ஏற்படுத்தும்படி கட்டாயம் செய்யவும் நான் சில ரகசிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறேன். ராமனுதன் பாதிக்கப்பட்டவனுகையால் அவனே குற்றம் சாட்டுபவனுக இருந்து எதிரியின்பேரில் கேஸ் நடத்துவான்''

''ராமனுதன் ஏன் இன்னும் வரவில்லே.''

''அவன் இன்று இரவு வக்கீல் வீட்டிலேயே தங்குவான்?''

''அப்புறம்?''

''நாளேக்கு அழகிரியைக் கூண்டில் அடைக்கும் வேலையில் அவனுக்கு முக்கியப்பங்கு உண்டு.''

''அதற்குமேல்?''

''சிவராமன் **மாரியேஜ் ரிஜிஸ்ட்ராரிடம்** உஷாவின் கார்டியனுக அவள் விவாஹத்தைப்பற்றிய நோட்டீஸ் கொடுக்க வேண்டியது.''

''உட்னே கல்யாணம்தானே?''

''இரண்டு வாரங்கள் சென்ற பின்தான் கல்யாணத்திற்கு ஒரு நாளேப் பார்க்க வேண்டும்''

''நாள் பார்க்கிறது வேறேயா? நல்ல சனிக்கிழமையாக, ஸ்திர வாரமாகப் பாருங்கோ! குத்தகை, பந்தகம் ரிஜிஸ்டர் மாதிரிதானே? நீடித்து நிற்க வேண்டுமோ இல்லேயோ! லக்னமும் ராகுகாலத்தில்தான் வைக்க வேண்டும். அஸுர விவாஹமோ, இல்லேயோ''

''அக்னி ஸாக்ஷியாய் தாலி கட்டிச் செய்கிற விவாஹம் இந்தக் காலத்திலெல்லாம் கிரமப்படிதான் நடக்கிறதோ? காலே போட்மெயிலில் மாப்பிள்ளே வந்திறங்குகிருன். இரவு போட்மெயிலுக்கு **ஸெகண்டு கிளாஸ்** அறையை **ரிஸர்வ்** பண்ணிக்கொண்டு பெண்ணுடன் பிரயாணமாகிவிடுகிருன். மந்திரமா, தந்திரமா, சிரத்தையா, ஸம்பிரதாயமா ஒன்றும் கிடையாது. அக்னிஸாக்ஷி என்பது பெயரளவில் எல்லா வைதிக க்ரியைகளும் வாத்யாருக்குள்ளே அடக்கம். அவருக்கு வேண்டிய காசை வாங்கிக்கொண்டு அவர் சௌகரியம்போல் செய்துகொள்ள வேண்டியது. ''எல்லாம ஆச்சா?'' என்ருல் ''ஆச்சு'' என்று சொல்லுகிற வாத்தியாருக்கு ஸம்பாவனே அதிகம். கல்யாணம் ஐப்பசி, கார்த்திகை மாதத்திலும் நடக்கிறது. உத்தராயணத்தில்தான் நடப்பதென்பது போய் விட்டது. கன்னிகையின் லக்ஷணத்தைப்பற்றிச் சொல்ல வேண்டியதில்லே. முதல் கட்டம் தாண்டி ஒரு மகாமகம் வரையில் கன்னிகைதான். சில சமயம் காந்தர்வ விவாஹம் முந்திக் கொள்கிறது' இவ்வளவு லக்ஷணத்தில் **'பிராஹ்ம.** விவாகத்தின் யோக்யதையை எங்கு கண்டுகொள்கிறது? அஸுராம்சம் பரவாத விவஹாரம் இப்போது கிடையாது. சிலவற்றில் வெளித் தோற்றம் சுத்தமாயிருக்கிறது. உள்ளே இருப்பது ஊழல்தான். அதைவிட உள்ளும்புறமும் ஒன்ருய், காலத்திற்கேற்ற கோலமாய் அமைந்திருப்பது சிலாக்யமல்லவா?''

''அது எப்படியாவது போகட்டும். நோட்டீஸ் கொடுத்துஇரண்டு வாரம் எதற்காகச் செல்ல வேண்டும்?''

''சட்டம் அவ்விதம் கூறுகிறது. அந்த நாட்களுக்குள் நோடீஸில் கண்ட கல்யாணத்தை ஆக்ஷேபிக்கக்கூடியவர்கள் இருந்தால் தங்கள் ஆக்ஷேபனேகளுடன் முன் வரலாம்''

''யார் ஆக்ஷேபிக்கப் போகிருர்கள்!'

''மைனர் விஷயத்தில் கார்டியன் சச்சரவுக்கு இடமிருக்கலாம். மற்றவர் விஷயத்தில் வேறு ஒப்பந்தங்கள் நிரூபிக்கப்படலாம்.''

''புரிந்து கொண்டேன். சிவராமன் நோட்டீஸுக்கு அழகிரியைத் தவிர வேறு ஆக்ஷேபிக்கக் கூடியவர்கள் இல்லே. அவன் ஜெயிலில் மாட்டிக்கொண்டுவிட்டால்–''

''ஜெயிலில் இருந்தால் ஆக்ஷேபிக்கக்கூடாதென்பதில்லே. நடவடிக்கைகளின் போக்கை அறிந்து கொண்டு அவன் படிமானத்திற்கு வந்து விடுவான் என்று எதிர்பார்க்கிறேன். அழகிரி ஜெயிலுக்கே போகமாட்டான். காரியம் முற்று முன் ராஜிக்கு வந்துவிடுவான். அவனே ஜெயிலில் வைக்க வேண்டுமென்று எனக்கும் எண்ணமில்லே. இதெல்லாம் ஒரு மிரட்டல்தான். அது இல்லாதபோனுல் துஷ்டர்கள் வழிக்கு வரமாட்டார்கள். ஒரு கவி சொல்லியதுபோல். முட்செடியை வழியே போகிறவன் தீண்டமாட்டான். பூக்கொடியைக் கைச்சேஷ்டைக்காகச் சின்னபின்னம் பண்ணுவான். துஷ்டர்களுக்கு துஷ்டனுகவும் ஸாதுக்களிடம் ஸாதுவாகவும் இருக்கும்படி:தான் நம் நீதி சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. கீதையின் உபதேசமும் அதுதான்.''

''சரி, கல்யாணம் ஆகிவிட்டதென்று வைத்துக்கொள்வோம். நாட்டுப்பெண்ணே சோபனம்சுற்றி வீட்டிற்குள் அழைக்கிறதா ?''

''எந்தச் சட்டத்தின் கீழ் இந்த ரிஜிஸ்டர் விவாஹம் நடக்கிறதோ அந்தச் சட்டமே உன் கேள்விக்குப் பதில் கூறிவிட்டது.''

'' என்ன !''

''இவ்விதம் விவாஹ ரிஜிஸ்டர் செய்துகொள்பவன் அது முதல் சொத்துக்களேப்பற்றின வரையில் குடும்பத்திலிருந்து வேறுபட்டவனுகிருன். போக்குவரத்து நம் ஸௌஜன்யத்தைப் பொறுத்தது.

''ஆனுல் இப்போதே நீங்கள்அவனுக்குப் பாகம் பிரித்துக்கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள்'

''என் சொதுக்களெல்லாம் என் சுயார்ஜிதமாகையால் நான் இஷ்டப்பட்டுக் கொடுத்ததை அடைய வேண்டியது.''

''இல்லே என்றும் சொல்லிவிடலாம்''

''சொல்லிவிடலாம். நான் அவனுக்கு கண்யமான முறையில் ஏற்பாடு செய்ய உத்தேசித்திருக்கிறேன். வக்கீலிடம் தஸ்தாவேஜு தயாராகிறது.''

''அவனே வக்கு வகையில்லாமல் தெருவில் நிறுத்திஞலல்லவா அவனுக்கு நல்லபுத்தி வரும். அவன் செய்திருக்கிற அடாத காரியத்திற்கு அவனிடம் உங்களுக்கு தாக்ஷிண்யம் எதற்கு?''

''முதலில் கோபத்தினுல் அப்படித்தான் தோன்றும். இருமுறை ஆலோசித்துப் பார்த்தால் தயவும் தாக்ஷிண்யமும்தான் கார்ய முறைக்கு ஒத்ததாகும். மேலும் செல்வத்தின் நடுவே வளர்ந்து வருகிற ஒருவனுக்கு நற்குணங்களும்

படிப்பில் ஊக்கமும் வெகுவாக அமைவதில்லை. ஏழ்மையில் தான் சீலத்தின் செழிப்பிற்கும் வித்யாபிவிருத்திக்கும் வேண்டிய உரம் இருக்கிறது. எனக்கு ஆசிரியர் அடிஸன், ஸ்பெக்டேடரில் எழுதிய கதை ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. இரு நண்பர்கள். ஒருவன் ஐச்வரியத்தையும், மற்றொருவன் வித்யையையும் தேடினார்கள். தனவந்தனுக்குப் புத்திரனும் வித்வானுக்குப் பெண்ணும் பிறந்தார்கள். புத்திரன் படிப்பும் சீலமும் பெறவேண்டி தனவந்தன் குழந்தையை வித்வானிடம் வளர்க்க விட்டு விட்டு, அவர் பெண்ணைத்தான் எடுத்துக் கொண்டான். மகன் படிப்பில் பாரங்கதனாயும் சீலவனாயும் ஆனபிறகு அவனுக்கு உண்மையைத் தெரிவித்து அவ் வித்வானின் பெண்ணை மணம் செய்வித்தானாம். லக்ஷ்மீ மூன்று தலைமுறைக்குத் தங்காது என்று சொல்வதெல்லாம் பணக்காரன் வீட்டுப்பிள்ளைகள் அட்டூழியம் செய்து அழிந்து போவார்கள் என்பதைத்தான் உணர்த்துகிறது. லக்ஷ்மீ மதமானது நீதி, நியதி, தர்மம், நியாயம், தயை, தாக்ஷிண்யம் எல்லாவற்றையும் மீறச் செய்யும் லாஹிரிபோன்றது."

"சரியாய்த்தானிருக்கிறது. நம் பிள்ளையைப் பார்த்தால் வேறு உதாரணம் வேண்டாம். என்ன சொத்து அவன் பேரில் எழுதி வைக்கப் போகிறீர்கள்?"

"ரொக்கம் இருபத்தி ஐயாயிரமும்—"

"இன்னும் என்ன?"

"நான் வாங்குவதாய் ஒப்பந்தம் செய்திருக்கிற ''கல்யாணப்பிரஸ்'' என்ற அச்சாபீஸும்—அதன் கட்டடம் உள்பட அதன் பெறுமானம் 25 ஆயிரம் ரூபாய். அவனுக்கும் ஒரு தொழில் வேண்டுமல்லவா? வசிக்க வீடும், ஒரு தொழிலும் கையில் முதலும், அவனுக்குப் பிடித்த பெண்டாட்டியும்—ஏதோ என்னால் ஆனது—எனக்குப் பிள்ளையாய்ப் பிறந்த பந்தத்திற்காக—"

"எல்லாம் சரி. இதையெல்லாம் வைத்துக்கொண்டு கௌரவமாய் வாழத் தெரிய வேண்டுமே."

"இனி புத்தி வந்துவிடும். மேலும் பெண்டாட்டி ஒருத்தி இருக்கிறாளல்லவா—."

"ஐம்பதினாயிரம் ரூபாயை வழிவிட்டு விலகிப்போகும் பிள்ளைக்கு அனுதாபப்பட்டு நீங்கள் கொடுத்துவிட்டால் மற்றும் உள்ள குழந்தைகளுக்கு அந்த திட்டத்திற்குக்கிடைக்குமா?"

"சங்கரி! கவலைப்படாதே! ஈச்வரன் கொடுத்திருக்கிறார். எல்லாருக்கும் கண்டு ஸீதாராமனுக்கும் கொஞ்சம் மிஞ்சும். அவனைக் கைவிட்டுவிடுவதாய் உத்தேசமில்லை."

"எல்லாரும் பிள்ளைகள், அவனும் பிள்ளையா! பெற்றவர்களுக்கு அவன் அருமை தெரியவில்லை. நம்மிடம் அண்டினவனை நாம் பெற்ற பிள்ளைக்குச்சமமாகத் தான் பாவிக்கவேண்டும். அவன் போனது முதல் வீடே வெறிச்சென்றாகி விட்டது. அவனை அழைத்து வாருங்கள்......"

"சங்கரி! இன்னுமொரு சமாசாரம். கேட்டால் உனக்குத் தூக்கிவாரிப்போடும். ஸீதாராமன் ஊருக்குப் போனவுடன் தன் மாமாவைக் கொண்டு பாங்கில் என் கணக்கிற்கு ரூ. ஆயிரம் டிராப்டு மூலம் அனுப்பச்செய்திருக்கிறான்.

"அவன் மானி! நம் பிள்ளை செய்த துரோகத்திற்கு அவன் நஷ்டஈடு செய்திருக்கிறான். அந்தப் பணத்திற்கு என்ன செய்யப் போகிறீர்கள்—?"

"ஒன்றுக்கு இரண்டாய்த் திருப்பிக் கொடுக்கப் போகிறேன். ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்க்கிறேன். அவனுக்குக் கல்யாணம் நிச்சயமாகலாமல்லவா?"

"அவன் மாமாவுக்குத்தான் பெண் இருக்கிறாளே! இதற்கு எப்போ மாமா தலைகொடுத்தாரோ, அப்போ அந்தப் பெண்தான் அவனுக்கு வாழ்க்கைப்படப் போகிறவள். பெண் ஸரஸ்வதி என்றால் ஸரஸ்வதிதான். பாரதம், ராமாயணம் எல்லாம் தானே வாசிக்கிறாளாம். ஸீதாராமனுக்கேற்ற சம்சாரம். அந்தக் குழந்தைகளை நாம் கொஞ்ச நாளைக்கு அழைத்து வைத்துக்கொண்டு நம் பிள்ளை இழைத்த மானக்கேட்டிற்கு ஆறுதல் பெறவேண்டும்."

"கொஞ்ச நாளைக்கென்ன? நம்மோடே இருக்கட்டும். என் ஆபீஸில் ஸீதாராமனுக்கு வேலை தயாராக வைத்திருக்கிறேன். எல்லாம் கூடிய சீக்கிரத்தில் என் சங்கல்பப்படி நடத்திவிடுகிறேன் பார். திருமலை ஆண்டவன் என் ஸங்கல்பத்திற்கு ஒருநாளும் பங்கம் வரச்செய்ததில்லை."

(தொடரும்.)

சத்வைத்யசாலை நஞ்சனகூடு
"நஞ்சன்கூடு பல்பொடி"
பாகடெரியின் சிறந்த மருந்துகள்
குழந்தைகளுக்கு: 12 காஸ்மன் கஸ்தூரி மாத்திரை; 18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை; 15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை
குடும்ப அவசியங்கள்: 99 ஜ்வரேக் எல்லா ஜ்வரங்களுக்கும்; 77 காலரெக்ஸ் அஜீர்ண பேதிக்கும், விஷபேதிக்கும் (காலரா); 23 பெமிரோ (பெயின பாம) தலைவலி, வாயுபிடிப்பு .....
தினஉதவிகள்: 61 நஞ்சன்கூடு பல்பொடி பல் உபாதைகளையும் கண்டிக்க; 78 கூலெக்ஸ் உஷ்ண சமன தைலம்; 55 ஜிஞ்சிப் அஜீர்ண,பித்த சமனி
ஸோல் ஏஜெண்டுகள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் வீதி. மதறாஸ்

காலரா, அஜீர்ண பேதிக்கு, I. D. L. நெ. 77. காலரெக்ஸ் சிறந்த மருந்து ரூ. 1-8-0 தபாலில் அனுப்ப ரூ. 2-6-0 அனுப்பவும்.

டிப்போக்கள்: மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

ஆபிஸ் ஸ்தாபிதம்: 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷை பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
"தபோநிதி" தியாகராய நகர், மதராஸ் 17.

மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானல், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானல் இன்றே,

'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்த சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானல் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

விலை ரூ. 4—8—0.
வி. பி. செலவு அணு 9.

ஷாஜஹான் புக் டெப்போ,
34, சாந்தோம், சென்னை 4.

ஜெயா எலக்டிரிக் கம்பெனி,
சின்னகடை வீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக் : பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்ச் கீயர்கள், பல்பு தினுசுகள், ஒயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

குகன்
சோப்புகள்

சுதேசி தயாரிப்பு
சலவைக்கு மிகவும்
சிறந்தது.

குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

REWARD RS. 100
GUPTA VASHIKARAN YANTRA
(GOVT. REGD)

இது சித்த வசீகரண யந்திரம். இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர், நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ. 3. தங்கம் விலை ரூ. 10.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5.

வெளிநாடுகளுக்கு வி. பி., போஸ்டல் ஆர்டர் கிடையாது. மணியார்டர் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்தில்.

KASHIVISHWANATH ASHRAM,
No. 14/A, P. O. Katrisarai, (Gaya)

அழகிய பித்தளை, தாமிர, வெண்கல பாத்திரங்களுக்கு
கோவையில் சிறந்த இடம்.

பள்ளிக்கூட ஹாஸ்டல்கள், காண்டின்கள் இன்னும் சர்க்கார் இதர ஸ்தாபனங்களுக்கும் சப்ளை செய்பவர்கள்

K. இராமச்சந்திரன்,
பாத்திர வியாபாரம்,
பெரிய கடை வீதி, கோயமுத்தூர்.

உங்கள் எதிர்காலம்

பண நிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம், பிரயாணம், எதிர்பாராத லாப நஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்ட நாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதியனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில், கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்றுமுதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரு. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணு 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரு. 6. வாரப்பலனுக ரு. 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுபலனும் எழுதியனுப்ப ரு. 5. த.செ.தனி

வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,

ஹனுமதுபாஸி, திருவல்லிக்கேணி, MADRAS 5

முத்து கழுத்து சங்கிலி



இமிடேஷன் ஜ்வல்கள் (வைரம்பச்சை, சிகப்பு அல்லது நீலம்) பதித்தஸ்திரீகளுக்கான சிறந்த கழுத்து சங்கிலி. க்ரீம் டிண்டுகளுடன் முத்துக்களும் உண்டு. நிரந்தர கலர். லாக்கெட்டுடன் முழு சைஸ் ரு. 8-10. இமிடேஷன் ஜுவல் பதித்த தங்க மோதிரம் மேல்கண்ட ஜுவல்களுடன் டஜன் ரு. 5-8. ஜுவல் இல்லாத பூ வேலைகளுடன் டஜன் ரு. 4-8. ஒருடஜன் எந்தவித மோதிரம் வாங்கினுலும் மேற்கண்ட கழுத்து சங்கிலி இனும். எல்லாவற்றிற்கும் தபால் செலவு இலவசம். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுத கோருகிரோம்.

போட்டோ படங்கள்:-பிரபல பாரிஸ் அழகிகளின் படங்கள். வயது 16 முதல் 20 வரை. ரகசிய விவரத்தை கூடாது. டஜன் விலை ரு. 4/8. எல்லாத்தேச தலைவர்கள் காந்தி, நேதாஜி முதலியவர்களின் படங்கள் டஜன் ரு. 3/8. தபால் கார்டு சைஸ். தபால்செலவு கிடையாது. 1 அணு ஸ்டாம்பு அனுப்பி, ஆயுள் பூராவும் உபயோகிக்கக்கூடிய காலண்டரை பெறலாம்.

HENA AGENCY,
NO. 14, Dr. Jagabandhu Lane, (S.W.)
Bowbazar P. O., CALCUTTA.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா ?

இதோ லக்ஷிமி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்.

தலைமை ஆபீஸ் : வால்டேர், ஆர். எஸ்.	லக்ஷிமி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.

சகல விதமான பட்டு நூல் ஜவுளிகளுக்கு கைராசியும் நம்பிக்கையுமுள்ள

புதிய ஜவுளிக்கடை

ராம்ராஜ்யா ஹால்

N.R. ராமசந்திர செட்டி & கோ. கடை வீதி...சேலம்

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினுலோ வேலையினுலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி. ரு. 4.

(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்

கே. எஸ். வாரியரின்

அஷ்டாங்க ஆயுர்வேதசாலா

தெப்பக்குளம், திருச்சி.

(ஸ்தாபிதம் : 1936.)

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்பகாலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாருதீர்கள்.

Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:— 7, சாரங்கபாணி கோவில் கீழ வீதி.	திருச்சி கிளை:— 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்ச் : மன்னார்குடி.)

சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை ஸ்ரீ பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

வாழ்க்கையில் புதிய ஒளி !

பரீக்ஷைக்கும், பலனுக்கும் உத்திரவாதமுள்ள அரிய மருந்திற்கு ஓர் நற்சாக்ஷி.

அன்புள்ள ஐயா,

என் மனைவி வள்ளி நாயகிக்கு பொன்னுசாமி என்ற பையன் பிறந்து பதினாறு ஆண்டுகள் ஆகின்றன. அதற்குப் பிறகு என்ன என்னவோ மருந்துகள் வாங்கிக்கொடுத்தோம் ஒன்றும் பலனில்லை. பிறகு தங்கள் மலையாள மெடிக்கல் ஹாலிலிருந்து வரவழைத்த "அசோக கிருதம்" ஔடதத்தைக் கொடுத்தேன் மருந்து சாப்பிட்ட சில நாட்களில் பொறுக்கமுடியாத வயிற்று வலி, இடுப்பு வலி. சூதக வாய்வு, பலஹீனம், மேகச்சூடு, மலச்சிக்கல் எல்லாவற்றையும் தீர்த்துவிட்டது. இப்போது 16 ஆண்டுகளாயிருந்த மலடு நீங்கி, பெண் குழந்தை பிறந்து சுகமாயிருக்கிறது. ஸ்திரீகளின் கர்பாசய ரோகங்கள் பலவற்றையும் நீக்கி, புத்திரசந்தானம் அளிப்பதில் தங்கள் "அசோக க்ருதம்" தேவாமிருதத்திற்கு ஒப்பானதென புகழ்கிறேன்.

பல போலி மருந்துகளை வாங்கி ஏமாறாமலிருக்க தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் அசோக கிருதத்தை வாங்கி பலன் அடையுமாறு சிபார்சு செய்கிறேன்.

(ஒப்பம்) கே. சக்ரபாணி நாயகர்,
[30-3-48] தெய்யார், தெள்ளார் P. O. N. A. Dt.

எங்களுடைய புகழ்பெற்ற பல அரிய மருந்துகளின் விவரமான காட்லாக் இலவசமாக அனுப்பப்படும்.

இன்றே எழுதுங்கள் :

மலையாள மெடிகல் ஹால் (Regd.)
189, வக்கீல் புது தெரு - Post Box 27 — மதுரை.

வைத்திய ரத்ன
யு. ராமநாத சாஸ்திரிகளின்,



ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம் 30மாத்திரைசீசா1 ரூ.7

மஹா பில்வாதி லேகியம்
பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்றுக் கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரீ கவசம்
வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோகவியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதி ஸரஸ்வதீ த்ரம், ஸ்ரீ தன்வந் ரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது. கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த படை நிவாரணி
எல்லா விதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும்கிடைக்கும். கேட்லாக் இனாம். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்,

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மயிலாப்பூர், மதராஸ்.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

நிபுணர் ஒரு நடிகர்

மீன் விழுங்கி சாமியார்.

வைரம் வாங்கும் விஷயத்தில் நிபுணரின் யோசனையை **எவ்வளவு** சுலபமாக **காசில்லாமலேயே**—பெற விரும்புகிறீர்கள் ?

ஆனால்.........நிபுணர் மட்டும் ஏமாந்தவரா—நடிப்பில் கைதேர்ந்தவருக்கு உங்களை மயக்குவது ஒரு நிமிஷ வேலையே...எல்லாம் மோசடிதான்...... உங்கள் நலனுக்காகவே அவர் தமது நிபுண (!) யோசனையை தயவுடன் வெளியிடுவதாக உங்களை எளிதில் நம்பச்செய்கிறார்.

இந்த ஜோடியின் பொருத்தத்தைக் கவனித்தீர்களா ? ஒன்று — வைரம் வாங்குபவர்; நிபுணரிடம் தமக்குள்ள சொல்ப தொடர்பை உபயோகித்து அவரிடம் இலவச யோசனை பெற விரும்புகிறார். நிபுணரோ வாங்குபவரின் மானஸீகத் தொடர்பை ஞாபகப்படுத்தி தாம் சுயலாபங்கருதாமல் பார பக்ஷமற்ற யோசனையைக் கூறுவதாக நம்பச்செய்கிறார்!

போலி வேஷத்தில்

நரியும் நாரையும்

நிபுணர் யாதொரு முதலுமின்றி லாபமடிப்பவர்—சரக்குமில்லை யாதொரு பயமுமில்லை. வெறும் ஏமாற்று வார்த்தைகளைக்கொண்டு பிழைப்பவர். அவநம்பிக்கை கொண்டவர்களிடம் நாரையைப்போன்று நடித்துப் பயனடைவது அவரது தப்பு அல்ல.

தரக நிபுணரும், வியாபாரியும் சேர்ந்து உங்கள் பாட்டுக்குத் தகுந்த நாட்டியமாடி. தமது வியாபார தந்திரத்தைக் கையாள்வது சரியே. இதற்கு மூலகாரணம் நீங்களேதான்.

நாணயத்திற்குப் பிரக்யாதி பெற்று நிலைத்து வியாபாரம் செய்யும் நம்பிக்கையான நகை வியாபாரியிடம் நம்பிக்கை வைத்தால்தான் பழுதின்றி வைரம் வாங்குவது சாத்தியம். சுய லாபமே கண்ணுயிருக்கும் தரகரது மோச வார்த்தைகளை நம்பினால் வீணாக உங்கள் பணத்திற்கே நஷ்டத்தை தேடுகிறீர்கள்.

மிக உயர்வான ரகங்கள்

ஸூரஜ்மல்ஸ்

1895முதல் நாணயத்திற்சிறந்த நகைவியாபாரிகள்

313, எஸ்பிளனேட் — மதராஸ்.